கல்கி

ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 01.08.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



காப்பி அடிக்கிறாரா?



₹ 10,000 பரிசு

சிறுகதை!




மதமாற்றம் செய்வோரை மன்னிக்க மாட்டோம்!

– எச்சரிக்கை

எல்லாத்துக்கும் தீர்வு!

– பரிகார ஸ்பெஷல்

3 புதிய பகுதிகளுடன் ஆண்டுமலர்


A Happy baby story begins...
Born Babies®
A CHAIN OF BABY STORES
Nobody care better than Mother and Born Babies too....
visit us and avail vip offer card for pregnant women and born babies
CHENNAI
NUNGAMBAKKAM
18, Lokesh Towers, Kodambakkam High Road, Nungambakkam, Ch - 34. 044 - 2825 0067
Customer Care No : 97109 22230
ANNA NAGAR WEST
334/2, 2nd Avenue, Anna Nagar West, Ch - 40, (Opp. To Nilgiris) 044 - 2616 2225
Customer Care No : 99419 11120
VELACHERY
1, 1st Main Road, Lakshmi Nagar, 100 Feet Bye-Pass, Velachery, Chennai - 600 042. 044 - 22591222
Customer Care No : 95516 98098
COIMBATORE
69, T.V. Samy Rd East, R.S.Puram, Coimbatore - 2. 0422 - 254 1626, 436 6455
Customer Care No : 98438 88811
COCHIN
Rubicon Building, South Over Bridge, Valanjambalam, Cochin - 16. 0484 - 235 8818, 403 0220
Customer Care No : 98951 08686
HYDERABAD
LG-15, City Center Mall, Road No. 1, Banjara Hills, Hyderabad - 500 034. 040 - 40033391
Customer Care No : 98488 33391
Born Babies For all Customer Who Can't Compromise on Quality



86 வருட
பட்டு பாரம்பரியம்
ஆரெம்கேவி
முகூர்த்தப் பட்டுகள்
உங்கள் அன்பிற்குரியவரின் ஆனந்தத்தை
அதிகப்படுத்தும் ஆரெம்கேவி ஹேப்பி டீல்ஸ்!
ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பிரத்தியேக ஹேப்பி டீல்ஸ். அதிக ஆடைகள் வாங்கி, அதிகமாய் சேமியுங்கள், சந்தோஷமாய் கொண்டாடுங்கள் என்றென்றும்.
1 ரஷ்யன் எம்பிராய்டரி சாரி +
1 க்ராக்கிள் சாரி - ரூ. 399* முதல்
ஹேப்பி டீல்ஸ்
அதிக சேமிப்பு
அளவில்லா ஆனந்தம்!
• சென்னை • கோவை • திருநெல்வேலி
மேலும் விபரங்களுக்கு "HAPPY" என்று டைப் செய்து 53636 என்ற எண்ணுக்கு SMS செய்யுங்கள்.
Toll free no: 1800 425 3105 (இந்தியாவில் மட்டும் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை தொடர்பு கொள்ளவும்)
ஆன்லைன் பர்ச்சேசுக்கு www.rmkv.com பார்க்கவும்



● 'நந்தி' படத்தில்...

அர்ஜுனனுக்கு இன்னொரு பெயர் காண்டீபன். அதையே தன் படத்துக்கு தலைப்பாக வைத்திருக்கிறார் இயக்குநர் சலங்கை துரை. கூடவே காந்தர்வன் என்ற படத்தையும் இயக்கி வருகிறார். தாமரை மூவிஸின், சௌத் இண்டியா புரொடக்‌ஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் அம்மா சென்டிமெண்ட் அமோகமாம்.

''இராமநாதபுரத்தில் எடுக்கப்பட்ட முதல் படம். வால்மீகி ஹீரோ அகில் நடிக்க மச்சக்காரன், கள்வனின் காதலி படங்களின் இயக்குநர் தமிழ்வாணன் இயக்கும் முதல் கிராமத்து சப்ஜெக்ட். கவிஞர் முத்து விஜயன் அனைத்து பாடல்களையும் எழுதிய முதல் படம்; இசையமைப்பாளர் பரத்வாஜ்க்கு அரை செஞ்சுரி தாண்டி முழு செஞ்சுரி அடிக்க முன்வரும் முதல்படம்... இப்படி பல 'முதல்' அம்சங்களைக் கொண்ட படம்... நந்தி'' என்கிறார் தயாரிப்பாளர் தினேஷ் கார்த்திக்...

'லிட்டில் பிக் சோல்ஜர்' படத்தின் ப்ரீமியர் ஷோவுக்காக சென்னை வருகிறார் ஜாக்கி சான். கடந்த பத்து வருடங்களில் உலகம் முழுக்க வெளியான படங்களில் மிகவும் பிரபலமான படம் என்று 'லிட்டில் பிக் சோல்ஜர்' தேர்வாகி இருக்கிறதாம். பிரபல தயாரிப்பாளர் விஸ்வாஸ் சுந்தரின் நட்புதான் ஜாக்கி சானை சென்னைக்கு அழைத்து வருகிறதாம்.



● ''காண்டீபன்'' படத்தில்...

இராமநாதபுரத்தில் முதன்முதலாய்...



விரல் நுனியில் கல்கி!

உங்கள் **கல்கி** இனி செல்ஃபோனிலும் வலம் வரவிருக்கிறது.

கல்கி இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை, செல்ஃபோன் மெஸேஜில் **KALKI** என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, அதன் பின் எழுதி **562632** என்ற எண்ணுக்கு SMS அனுப்புங்கள்.

அதேபோல் கவிதை, ஜோக்ஸ், துணுக்குகள் ஆகியவற்றை, **KACON** என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, அதன் பின் எழுதி **562632** என்ற எண்ணுக்கு SMS அனுப்பலாம்.

IMImobile

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**
பொறுப்பாசிரியர் :
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்
தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

● த.பரதன், திருவாரூர்

? *பொறியியல் படிப்பில் தமிழ் வழியில் சேர மாணவர்கள் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறதே... தமிழக அரசுக்குப் பெருமைதானே?*

! படித்த பின்னர் இதே மாணவர்கள், வேலைக்காக தமிழக அரசிடமே வந்து நிற்காமல் இருந்தால் பெருமைதான்!

● த.புகழேந்தி, கூகூர்

? *"எனக்கு ரொம்ப பிடித்த நடிகை ஜெனிலியா. மும்பையிலிருந்து இழுத்து வந்துவிட்டேன்" என்று நடிகர் விஜய் கூறியிருப்பது பற்றி...?*

! 'சந்தோஷ் சுப்ரமணியம்' படத்தில் ஜெனிலியாவின் நடிப்பைப் பார்த்த எல்லோருக்குமே அவரைப் பிடிக்கும். விஜய் சொல்வது உண்மைதான்.

● பஞ்ச்தர்மா, வெள்ளாளப்பட்டி ★

? *வீண் செலவு செய்யாத அரசாங்கம் எப்போது அமையும்?*



★ விழுந்த வாய்ப்பூட்டு!



★ 'சந்தோஷ்' பாராட்டு!

! அள்ளித் தரும் இலவசங்களும் ஊதாரித்தனமான அரசுச் செலவுகளும் தாங்கள் வழங்கும் வரிப்பணத்திலிருந்தே நிகழ்கின்றன என்பதை மக்கள் புரிந்துகொண்டு விழிப்புற்று, தட்டிக் கேட்க ஆரம்பிக்கும்போது!

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? *சோனியாவை, 'பதிபக்தி இல்லாதவர்; இந்தியாவை ஆளத் தெரியாதவர்' என்று ஜெயலலிதா விமர்சித்ததை காங்கிரஸ் நண்பர்கள் அவ்வளவு சுலபத்தில் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருணாநிதி கூறியுள்ளாரே?*

! இது காங்கிரஸுக்கு கருணை மனு! 'அந்தப் பக்கம் போய்விடாதீர்கள்' என்று சொல்லாமல், பழைய கனலை ஊதி, சூடேற்றப் பார்க்கிறார். கோவை கொடுத்துள்ள கிலி!

● பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

? *டி.என்.பி.எஸ்.ஸி., ரெயில்வே தேர்வுகளில்தான் கேள்வித்தாள் அவுட் ஆனது என்று பார்த்தால், இப்போது சென்னை பல்கலைக்கழக எம்.சி.ஏ. தேர்விலும் அதே கதையாகி தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதே?*

! வினாத்தாளைத் தயாரித்து, அச்சடித்து, தேர்வு மையங்களுக்குக் கட்டி

அனுப்பி, ஒவ்வொரு கட்டத்திலும் அது பாதுகாப்பாக இருக்கும் என்று நம்புவது சுற்கால நம்பிக்கை. ஆன்லைன் தேர்வு; தேர்வு தொடங்குவதற்குப் பத்து நிமிடங் களுக்கு முன்பு கேள்வித்தாளை டவுன் லோட் செய்து சுடச்சுட தேர்வு மையங் களில் வழங்குவது, என்கிரிப்ஷன் என் றெல்லாம் எவ்வளவோ வந்துவிட்டன. தொழில்நுட்ப முனைப்பு மட்டும்தான் வேண்டும்.

● **மல்லிகை மன்னன், மதுரை**

? கலவர பூமியாக மாறிவிட்ட காஷ்மீர் மாநிலத்தை இன்னும் இந்தியாவோடு இணைத்து வைத்திருக்க வேண்டுமா?

! ''அபிப்ராய வாக்கெடுப்பு நடத்தி அந்த முடிவை காஷ்மீர் மக் களிடமே விட்டு விடுவதுதான் புத்திசாலித்தனம்'' என்று நான் பதில் அளித்தால் உங்கள் கேள்வி யும் எனது பதிலும் தேசத் துரோக மாகக் கருதப்படலாம்!

● **எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

? ஒருவேளை, வரும் சட்ட மன்றத் தேர்தலிலும் விஜயகாந்த் யாருடனும் கூட்டணி வைக்கா மல் தனித்தே போட்டியிட் டால்...?

! அந்தத் தவறை விஜயகாந்த் செய்ய மாட்டார் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறேன். தனித்து நின்றால், கணிசமான வோட் டுகளைப் பிரிப்பார்; அவ்வளவுதான். நிலையான நல்லாட்சிக்கு வழிவகுப்பார் என்று சொல்ல முடியாது.

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

? 'அர்த்தமுள்ள இந்துமதம்' எழுதிய

நீங்கள் கேட்டவை-தராசு

கவியரசு கண்ணதாசனின் மகள் விசாலி கண்ணதாசன் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து விட்டாரே?

! கிறிஸ்துவ மதமும் அர்த்தமுள்ளது தான் என்று அவர் கருதியிருக்கக்கூடும். கட்டாய மதமாற்றமில்லாத வரை, தனிமனிதர் சுதந்திரத்தில் நாம் தலையிட வேண்டாமே!

● **தா.ஆசீர் டேவிட், நாகர்கோவில்**


? ''காமராஜரின் வாரிசு கருணாநிதி!'' என்கிறாரே கனிமொழி?

! தி.மு.க. தொண்டர்கள் கவனிக்க - கட்சி அலுவலகங்களில் பெரியார், அண்ணா படங்கள் இருக்குமானால், நீக்கி விட்டு காமராஜர் படம் மாட்டவும். இல்லையெனில், கருணாநிதியின் வாரிசுக் குக் கோபம் வந்துவிடப் போகிறது!

● **பவானி கிருஷ்ணா, பெங்களூரு**

? நீதிமன்றத்துக்கு வெளியே தீர்வு


✱ கனலூதும் கருணை மனு!


✱ தனி வழி அபாயங்கள்!



சிக்கி விடுகிறாரே சீமான்!

காணும் கலாசாரம் இந்தியாவில் மிகக் குறைவு. அதனால்தான் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிப் போகின்றன என்று உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.எச்.கபாடியா சொல்கிறாரே? மீண்டும் கட்டப் பஞ்சாயத்து முறை வேண்டும் என்கிறாரா?

! இல்லை. நீதிமன்றத்துக்குப் பதிலாக, அதிகாரபூர்வமான மத்யஸ்த அமைப்புகளை மக்கள் நாடலாம் என்று யோசனை கூறுகிறார். அங்கே சட்ட நுணுக்க அடிப்படையில் வாய்தா கோர முடியாது; தீர்ப்புக்குப் பதில் சமரஸ ஒப்பந்தம் உருவாக்கித் தரப்படும். ஆனால், நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந்து கிடப்பதற்கு வேறு காரணங்கள் உள்ளன. கபாடியா, அவற்றைக் களைவதிலும் கவனம் செலுத்தட்டும்.



● அர்த்தமுள்ள கிறிஸ்துவம்

● வாரிசு அரசியல்!



● தி.கோவிந்தராஜன், குடியாத்தம் ❑

? நடைபாதையில் குடும்பம் நடத்துவோர் இந்நாட்டு மன்னர்களா? உள்நாட்டு அகதிகளா?

! இரண்டுமல்ல; ஐ.நா - ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய ஆய்வின்படி, இவர்கள் பல்பரிமாண வறுமைக்கோட்டின் கீழ் வருபவர்கள் (multi dimensional poverty index). ஆஃப்ரிகாவில் உள்ள இந்தப் பிரிவு மக்களைக் காட்டிலும், இந்தியாவில் எட்டு மாநிலங்களில் மட்டுமே உள்ள இப்பிரிவினரின் எண்ணிக்கை மிக அதிகம் என்பது கூடுதல் அதிர்ச்சி!

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? இந்திய ரூபாய்க்கு சின்னம் வடிவமைத்துள்ள உதயகுமார் பற்றி...?

! தமிழர் என்பது நமக்குப் பெருமை என்றாலும் தேவநாகரி லிபி, சின்னத்தில் முக்கியத்துவம் பெற்றிருப்பதால், செம்மொழித் தமிழர்கள் அவர் வெற்றியைக் கொண்டாடத் தயங்குவதில் வியப்பில்லை.

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? வன்முறையைத் தூண்டும் வகையில் பேசுவதான சர்ச்சையில் அவ்வப்போது சிக்கி விடுகிறாரே சீமான்?

! வாய்ப்பூட்டு போட இப்போதுதானே அரசுக்குத் துணிவு வந்திருக்கிறது! ஆக, அவர் பேச்சு சர்ச்சைக்கு இடமின்றி சட்ட விரோதமானது. அரசின் தாமதம்தான் சர்ச்சைக்குரியது!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? அறநிலையத்துறையைக் கலைத்து விட்டு, வக்ஃபு வாரியம் போல, ஹிந்து சமயப் பெரியோர், ஹிந்து இயக்கத் தலைவர்களைக் கொண்ட தனி வாரியம் அமைக்கலாம் என ராமகோபாலன் யோசனை கூறுகிறாரே?

! அரசியல் கலப்பற்றதான அப்படிப்பட்ட வாரியம், முற்றிலும் ஊழலற்றதாக இருக்கும் என்று உறுதி அளிக்க முடியாவிடினும் இப்போதைய நிலைமையை விட சிறப்பானதாக இருக்கும். கோயில்களின் நிர்வாகம், பராமரிப்புக்கு, கிராமப்புற அடிமட்டக் குழு முதல் வாரியத் தலைமைக் குழு வரை ஜனநாயகம் செயல்பட வேண்டும்.

❑ ரூ.150 பரிசு பெறுபவர்:
தி.கோவிந்தராஜன், குடியாத்தம்

★ ரூ.75 பரிசு பெறுபவர்:
பஞ்ச்தர்மா, வெள்ளாளப்பட்டி




IDHU RAJAPATTAI ALLA

- Sivakumar

(Translated by Malathi Rangarajan)

In the present scenario making a mark in a particular field is in itself an achievement. But through this book you have quietly but effectively revealed your multifarious facets as a painter, actor and writer.

- APJ Abdul Kalam



இது ராஜபாட்டை அல்ல

- சிவகுமார்

இந்த நூலின் ஒவ்வொரு வரியும் ஜவரி - கலைஞர் மு.கருணாநிதி

Rs. 600/-




டைரி (1946-1975)

- சிவகுமார்

'யாருமற்ற தனிமையில் கடந்த காலம் காட்டும் ஒரு மாயக்கண்ணாடி முன் நின்று முழுமையாக என்னைப் பார்த்துக் கொள்ளும் பரவசத்தையும் படபடப்பையும் ஒருசேரத் தருகிறது.'

Rs. 280/-



கம்பன் என் காதலன்

- சிவகுமார்

இன்றைய தலைமுறையினருக்கும் கம்பராமாயணம் தெரிய வேண்டும் என்பதற்காக, 100 பாடல்கள் மூலம் எளிய தமிழ் நடையில் விளக்கவுரையுடன் கூடியது.

Rs. 300/-



இப்படிக்கு சூர்யா...

'வெற்றியை ஒருவரின் பிறப்பு மட்டுமே தீர்மானிப்பதில்லை! உழைப்புதான் தீர்மானிக்கிறது!' என்னும் என் வாழ்க்கை அனுபவத்தை, எழுத்துக் கண்ணாடியில் பார்த்துக்கொண்ட முதல் முயற்சியே இந்த நூல்...

Rs. 100/-

Rs. 250/-

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(பு.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மைலாப்பூர் - 600 004 தொலைபேசி: 24641314
www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com



டபுள் ப்ரமோஷன்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2010-க்கு கதைகள் குவியத் துவங்கியது. அதிகமான வாசகர்கள் தபால் தாமதம், பந்த் போன்ற காரணங்களால் பாதிப்புக்கு உள்ளாவார்கள் எனக் கருதி முடிவுத் தேதிக்கு பிறகும் இரண்டு நாள் வந்த கதைகளையும் ஏற்றுக் கொண்டோம். இறுதி சுற்றுக்குக் கதைகளைத் தேர்வு செய்ய தினமணி இதழின் முதுநிலை உதவி ஆசிரியரும் எழுத்தாளருமான **தமிழ்மகன்**, எழுத்தாளரும் கவிஞருமான **திலகபாமா** ஆகியோர் அலுவலகம் வந்திருந்தார்கள். நீண்ட விவாதத்துக்குப் பின் கீழ்க்கண்ட கதைகள் முதல் மூன்று பரிசுகளுக்குத் தேர்வாயின :

1) ரூ.10,000 முதல் பரிசு பெறும் சிறு கதை 'தபால் ரயில்' - எழுதியவர் தஞ்சாவூர்க்கவிராயர்

2) ரூ.7,500 இரண்டாம் பரிசு பெறும் சிறுகதை 'வீடு' - எழுதியவர் ஜி.கோமளா

3) ரூ.5000 மூன்றாம் பரிசு பெறும் சிறுகதை 'பொம்மை(ய) சாமி...' - எழுதியவர் இரா.தங்கபாண்டியன்


பிரசுரத்துக்குத் தேர்வான கதைகளின் பட்டியல் அடுத்தவாரம் இடம் பெறும். பங்கேற்ற அனைவருக்கும் நன்றிகள்.

படம் : **'க்ளிக்' ரவி**

வெற்றிப் பெற்றோர் பற்றிய அறிமுகம் எதிர்வரும்...

“இயற்பெயர் ஆர்.கோபாலகிருஷ்ணன், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உதவி இயக்குநராகப் பணிபுரிகிறேன். நான் கண்டும் கேட்டும் அதிசயித்த வாழ்க்கையை என் எழுத்தில் பதிவு செய்கிறேன். கல்கியின் அங்கீகாரம் என் எழுத்தார்வம் என்கிற வேருக்கு ஊற்றிய நீர். வாழ்வின் துயரங்களை ஆற்றும் மருந்தினை நாம் வாழ்க்கையிலேதான் தேட வேண்டும். இதைத்தான் நான் இந்தக் கதையில் சொல்ல முயற்சித்திருக்கிறேன். சென்ற முறை கல்கி சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடத்தில் வந்தேன். இப்போது டபுள் ப்ரமோஷனில் முதலிடம் வந்திருக்கிறேன். என் முன்நகர்வில் கல்கிக்குப் பிரதான இடமுண்டு.

- தஞ்சாவூர்க்கவிராயர்



அவள் விகடன், புதிய தலைமுறை... ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றி இருக்கிறேன். புதுமையான எழுத்து வடிவங்களை முயற்சித்துப் பார்ப்பதிலும், பெண்களை உயர்த்தும் வகையில் எழுதுவதிலும் என்றும் ஆர்வம் கொண்ட நான், எனது எழுத்தார்வத்துக்கு சிறுகதை வடிவத்தை ஒரு வடிகாலாக எண்ணுகிறேன். எனது கதைகள் இலக்கியச் சிந்தனை, திரு.வி.க. விருது போன்ற குறிப்பிடத்தக்க பரிசுகளைப் பெற்றுள்ளன. கதைப்போட்டியில் நான் கலந்துகொள்வது இதுவே முதல் முறை. கல்கி இதழில் எனது கதை வெளியாவதும் இதுவே முதல் முறை.

- ஜி.கோமளா





தமிழில் முதுகலை இலக்கியமும், முன் முனைவர் பட்டமும் பெற்றுள்ளேன். மதுரையில் உள்ள ஒரு தனியார் தொண்டு நிறுவனத்தின் பயிற்சி மையத்தில் பணி புரிகிறேன்.

தேனி மாவட்டம் கடமலைக்குண்டு எனது சொந்த கிராமம். 1989 முதல் எழுதிக்கொண்டிருக்கிறேன். ‘சின்னச் சின்ன’ கோபங்கள்.. என்ற கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளேன். அச்சில் வரும் மூன்றாவது கதை இது. பரிசு பெறும் முதல் கதையும் இது தான். கல்கியில் வெளிவரும் முதல் படைப்பும் இதுதான்.

- இரா. தங்கபாண்டியன்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2010 முடிவுகள்



லாஜிக் பார்க்கிறேன்னு ரிசர்ச் ஸ்டூடண்ட்டாக எல்லாத்தையும் குறுக்குக் கேள்விக் கேட்டுக் குடை யக் கூடாது. அப்புறம் சிரிக்கிறதுக் கும் ரசிக்கிறதுக்கும் லைப்பில் சீன் இல்லாம போயிடும். மண்ணோடு மனசையும் இணைச்சு வாழும் அந்த செக்கு ஓட்டும் விவசாயிக் கிட்ட கொஞ்ச நாள் இருந்து படிச்சுட்டு வான்னு எம்.ஏ. படிச்ச பையனை அனுப்பி வெச்சாரு ஒரு அப்பா. போனான். மாடு பாட்டுக்குத் தானே சுத் துது. விவசாயி அவர் பாட்டுக்கு வேலை செய்ய நாரு. ரெண்டு பேருக்கும் சம்பந்த மில்ல. இவன் கேட்டான். மாடு நிற்காம சுத்துச்சன்னு ''எப்படி உங்களுக்குத் தெரியும். அது உங்கள ஏமாத்திடுச்சு னா?

பெரியவர் சொன்னார், ''அதனாலதான் அது கழுத்துல மணி கட்டி வெச்சிருக்கேன். ஓசையை வெச்சிக் கண்டுபிடிப்பேன்.'

நம்ம ஆளு அடிச்சான் லாஜிக்கா... 'ஒரே இடத்தில் நின்னு ரெஸ்ட் எடுத்துக்கிட்டு கழுத்த மட் டும் ஆட்டுனா எப்படிக் கண்டுபிடிப்பீங்க?''



பெரியவர் சிம்பிளா சொன்னாரு, 'அதனால தான் தம்பி அதை நான் எம்.ஏ. படிக்க வைக்கல'ன்னு.

இப்படி, சிரிப்பான கதையில இருந்து கடவுளின் மூவ்மெண் என்னென்னு கத்துக்கணும் மூவ்மெண்ட்னு சொன்னது ஒரு கதை ஞாபகத்தில் வருது ஊட்டியில் ஒரு ஷூட்டிங் டிசம்பர் மாசம். நல்ல தடியா குளிரு. நைட்ல ஷூட்டிங்கின்னு எழுப்பிடுவாங்க. நடுக்கத்த வெளியே காமிக்காம நடிக்கிற தான் நெஜமான நடிப்பு. இந் சினிமா உலகத்தில் நடிப்புக் அப்பால எந்தப் பதவி உயர்வு இல்லாம சிவனேன்னு, எப்படி தொடங்கினாங்களோ அ படியே இருக்கக் கூடிய ஆளுங் உண்டு. இந்த வார நாயகன் அ படிப்பட்டவர்தான். பேர் : கிரு ணன். முக்கிய அடையாளம் முன்னால ரெண்டு பல்லு நீட்டி கிட்டு இருக்கும். விசேஷ குறிப்பு: கண்ணு ரெண்டு வெளிய வந்து 'என்னான்னு எட்டிப் பார்க்குற மாதிரி பேந் பேந்த முழிக்கும். இப்போ ஊட்டியில ஒரு மலை உச்சியி ஷூட்டிங். உங்க இஷ்டத்துக்

கிருஷ்ணனின் லிப் மூவ்மெண்ட்!



எல்லாம் ஏறி எறங்க முடியாது. மேலே வர ஒரு மணி நேரம் ஆகும். இறங்க அரை மணி நேரம் ஆகும். காலை அஞ்சுமணிக் கெல்லாம் அஸெம்பிள் ஆயிட்டோம். 'ஒன் அண்ட் டு' எல்லாம் மலை உச்சியில மரத்துக்குப் பின்னால காத்தோட்ட மாத்தான். அப்போல்லாம் கேரவேன் செட்டப் கிடையாது. கடைசி நாள் க்ளைமாக்ஸ் காட்சி. எல்லோருக்கும் அசதி. ஃபைட் காட்சி. மதியம் மணி மூணு. பார்த்தா அப்பத்தான் தெரியுது. துப்பாக்கியும் பைனாக்குலரும் மிஸ்ஸிங்! எடுத்துக்கிட்டு வரப்போன ஆளைக் காணோம். டைரக்டருக்குக் கோபம், செம டென்ஷன். 'எங்கேயா துப்பாக்கி பைனாக்குலர்?'னு கத்தினாரு. துப்பாக்கியும் பைனாக்குலரும் எடுக்க கீழே போனவனுக்கு வயிறு சரியில்லை. அதைச் சொல்ல மலை மேலே வந்த கிருஷ்ணன் அண்ணன் மீதுதான் கோபத்தைக் கொட்டினார் டைரக்டர். உதடு அசைவை வைச்சுதான் கிருஷ்ணன் புரிஞ்சிப்பார். லிப் மூவ்மெண்டுதான். ஏன்னா அவருக்குக் கொஞ்சம் காது மந்தம்.

மலைமேலே ஓடி வந்ததிலே கிருஷ்ணன் அண்ணனுக்கு மூச்சு கன்னாபின்னான்னு வாங்கி, அவர் உடம்புல மொத்தம் ENT டிபார்ட்மெண்டும் டிராஃபிக் ஜாம் ஆகியிருந்தது. ஸ்டண்ட் மாஸ்டர் நிதானமா சொன்னாரு ''கிருஷ்ணா... லேட்டாகுது. நீ போய் பைனாக்குலரையும் அந்தத் துப்பாக்கியையும் எடுத்துட்டு வந்துடுப்பா. இன்னும் கொஞ்ச நேரத்துல விடிஞ்சுடும் ப்ளீஸ்.'' கிருஷ்ணன் முகத்துல கண்ணபரமாத்மா கணக்கா புன்சிரிப்பு.

''சார் அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நான் போய் எடுத்துட்டு வர்றேன்''னு சொல்லிட்டு கீழே இறங்கி ஓடினார். டைரக்டர் முகத்தில் கொஞ்சம் நிம்மதி. கிருஷ்ணன் சின்சியாரிட்டியைப் பத்தி அவருக்குத் தெரியும். டைரக்டர் படத்தில் எல்லாத்திலேயும் கிருஷ்ண அண்ணன் இருப்பாரு. நேரமாயிக்கிட்டே இருக்கு. விடியற்காலை நான்கு மணி. கிருஷ்ணனைக் காணோம். ஒருவேளை இவருக்கும் வயிறு கலக்கிக் காலை வாரி விட்டுடுச்சோ? ஒருத்தருக் கொருத்தர் ஆறுதல் சொல்லிக்கிட்டாங்க.

ஸ்டண்ட் மாஸ்டர் ஒவ்வொருத்தரையா திட்ட ஆரம்பிச்சார். நேர்மையான, நல்ல, ஆபத்பாந்தவனான கிருஷ்ணனுக்கு ஏதாவது... கால் தடுக்கி... மலைமேலிருந்து... பழி நம்ம மேலே விழுந்துடுமோ?- பதற்றமானார் டைரக்டர். எழுந்து நின்னு ரெண்டு கையால வாய்கிட்ட பாத்திக் கட்டி சத்தம் போட்டுக் கூப்பிட்டாரு... 'கிருஷ்ணா... கிருஷ்ணா'. மகாபாரதத்துல துச்சாதனன் புடைவையை உருவினதும் பாஞ்சாலி சத்தம் போட்டு கத்துனது மாதிரி! என்ன ஆச்சர்யம்... டைரக்டரின் பூர்வ ஜென்ம புண்ணியம். நம்ம கிருஷ்ணன் பிரசன்னமாயிட்டார். எல்லார் முகத்திலேயும் சந்தோஷம். ஒரு பெரிய டிரேயில எல்லாத்தையும் எடுத்து வந்திருந்தார் கிருஷ்ணன். டைரக்டர் கிருஷ்ணன் பக்கத்துல போய் சந்தோஷமா தோளைத் தட்டிக் கொடுத்து 'ஆயிரம் இருந்தாலும் கிருஷ்ணன் போல வராது'-ன்னார். கிருஷ்ணன் முகத்துல ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம். முன்பல்லு ரெண்டும் சல்யூட் அடிக்குற மாதிரி இருந்துச்சு. மாஸ்டர் அவசரப்படுத்தினார். சிரிச்சது போதும் சீக்கிரம் எடுபான்னு. டிரே மேல இருந்த துணிய நீக்கினவரு அதிர்ச்சியில ஆடிப் போயிட்டாரு. டிரேயில வட்ட வட்டமா பைனாப்பிள் கட் பண்ணி இருக்கு.



"வன்முறை க்ளைமாக்ஸ் எதுக்குன்னு இந்த கலிகால கிருஷ்ணன் வளமான முடிவை காமிச்சாரோ என்னவோ?"

கூடவே ஒரு பிளாஸ்க். அதுல சூடா சுக்கு காஃபி.

கிருஷ்ணன்ணன் உற்சாகமாகச் சொன்னார்...

''சுக்கு காஃபி போட்டுட்டேன் சார்.. இதோ பிளாஸ்க்ல ஃபுல்லா இருக்கு.. ஆனா பைனாப்பிளுக்குத்தான் லேட்டு. எந்தக் கடையும் திறக்கல. கடைசியா திண்ணையில தூங்கிட்டு இருந்த தள்ளு வண்டிக்காரனை எழுப்பி பைனாப்பிளை கட் பண்ணிக் குடுக்கச் சொன்னேன். முன்னூறு ரூபா வாங்கிட்டான் ஸார்'' என்றார். 'ம்ம்... சுக்கு காஃபியை என் தலையில ஊத்து'-ன்னு தலை மேல வைச்சு உட்கார்ந்தாரு டைரக்டர். அதிகாலையில வாய்விட்டு எல்லாரும் சிரிக்க அந்தக் குளிர் குடு குடுன்னு ஓடிடுச்சு. கிருஷ்ணன் மட்டும் பேந்த பேந்த முழிச்சுக்கிட்டு நின்னார்.

வாழ்க்கையில யோசிச்சு யோசிச்சு வைக்கிற மூவ்மெண்ட்டே முழுக்க காலைவாரிடுது. லிப் மூவ்மெண்ட் ஐம்பது சதவிகிதம் மாறிடுச்சு - பைனாக் குலர் பைனாப்பிளாவும், துப்பாக்கி சுக்கு காஃபியாவும். வன்முறையான க்ளைமாக்ஸ் எதுக்குன்னு இந்தக் கலிகால கிருஷ்ணன் வளமான முடிவை காமிச்சாசரோ என்னவோ?

(தொடரும்)

ஊர்வசி போட்டி சில்கி சாரி!



மாதம் 3 புடைவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவை பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

ஆகஸ்ட் மாத கூப்பன்களை இணைத்து அனுப்ப கடைசித் தேதி : 06.09.10

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....
முகவரி : ....
....
....
..........................பின்கோடு:......................
தொலைபேசி : ....
இ-மெயில் : ....

ஆகஸ்ட் -1


கிருஷ்ணன் கொண்டு வந்தது என்ன?

விடையை டிக் செய்யவும்

- ☐ பைனாப்பிள் - துப்பாக்கி
- ☐ துப்பாக்கி - சுக்கு காஃபி
- ☐ பைனாப்பிள் - சுக்கு காஃபி
- ☐ துப்பாக்கி - பைனாகுலர்



கல்கி



2010 ஆகஸ்ட் 1
விக்ருதி ஆடி 16
மலர் : 69
இதழ் : 1


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


பணயம் வைக்கப்படும் பயணிகள் பாதுகாப்பு!

சாலை விபத்துகளைப் போலன்றி ரயில் விபத்துகளுக்கான வாய்ப்புகள் குறைவு. காரணம், நிர்ணயித்த பாதையில், நிர்ணயித்த நேரத்தில் மட்டுமே ரயில்கள் ஓடுகின்றன. ஆனால், நம் நாட்டிலோ, ரயில் விபத்துகள் பெருகியது போக, ரயில் நிலையத்திலேயே இப்போது விபத்துகள் நிகழ ஆரம்பித்துள்ளன! ஒரு ரயில் மாற்று பிளாட்ஃபாரத்தில் நிற்பது தாமதமாக அறிவிக்கப்பட, பயணிகள் முண்டி அடித்து ஓடி அதில் ஏற முயன்றதில் மிதியுண்டு பலர் பரிதாபமாக இறந்த விபத்து சமீபத்தில்தான் நிகழ்ந்தது. அதன் பாதிப்பு அடங்குவதற்குள்ளாகவே, மேற்கு வங்கத்தில் சைந்தியா ரயில் நிலையத்தில் இன்னொரு கோர விபத்து! பிளாட்ஃபாரத்தில் நின்றுகொண்டிருந்த ரயில் மீது, ஸ்டேஷனுக்குள் நுழைந்த இன்னொரு ரயில் மோதியிருக்கிறது! 'இப்படிக்கூட நிகழுமா?' என நம்பமுடியாத அளவுக்கு அலட்சியப் போக்கை உணர்த்தும் விபத்து இது! இவ்வாறு நிகழ வேண்டுமென்றால், மிக அடிப்படையான பாதுகாப்பு சாதனங்கள் பிசகியிருக்க வேண்டும்; அல்லது மிக முக்கியமான பாதுகாப்பு விதிகள் ஊழியர்களால் புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ரயில்வே துறை அமைச்சர் இந்த வெட்கக்கேடு குறித்து வருத்தம் தெரிவித்து ராஜினாமா செய்திருந்தால் போன 67 உயிர்களை மீட்டிருக்க முடியாது என்றபோதிலும் தார்மிக நெறிகள் காக்கப்பட்டிருக்கும்.

ஆனால், ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி, நிகழ்ந்த விபத்து ஒரு சதி என்பதாகத் தோன்றச் செய்து, சி.பி.ஐ. விசா





ணையைக் கோரியிருக்கிறார்! சதி அல்ல; மன்னிக்கமுடியாத அலட்சியம் என்பதை யில்வே துறை ரீதியான நடுநிலை விசாரணையே நிரூபித்து விடும். அவ்வாறு நிரூபணா ானால் அது தமக்கு அவப் பெயரை உண்டாக்கும் என்று திட்டமிட்டே மம்தா பானர்ஜி இவ்விஷயத்தில் செயல் படுவதாகக் கருத இடமிருக்கிறது.

அலுவலகத்துக்கே வராமலிருப்பதில், நாடாளுமன்ற கூட்டங்களுக்கு வராமலிருக்கும் மு.க. அழகிரிக்கு நிகரான இடத்தைப் பெறத்தக்கவர்தான் மம்தா பானர்ஜி! அவரது வனமும் செயல்திறனும் மேற்குவங்க அரசியலிலேயே குவிக்கப்பட்டு, அங்கு ஆட்சியில் இருக்கும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசுக்குச் சங்கடங்கள் ஏற்படுத்துவதிலேயே செல விடப்படுகின்றன! ரயில்வே துறையின் ஏராளமான கோப்புகள் அமைச்சரால் கவனிக் கப்படாமலிருப்பதால், சுமார் 90,000 பணியிடங்கள் அத்துறையில் நிரப்பப்படாமலே இருப்பது தெரியவந்துள்ளது! மிகுந்த ஆள்கட்டும மனித வளமும் தேவைப்படுகிற அத்தியாவசிய சேவையான ரயில்வே துறையில் இவ்வளவு காலியிடங்கள் இருக்கிறபோது, பணித்தரம் குறையாமல் என்ன செய்யும்? இருக்கிற ஓட்டுனர்களும் கண்காணிப்பாளர்களும் கூடுதல் பணிச்சுமையை ஏற்கிறபோது, விபத்துக்கான வாய்ப்புகள் பெருகுவதைத் தவிர்க்க முடியாது.

இதையெல்லாம் கூர்ந்து கவனித்துச் சரிசெய்யாமல், 'பயணக் கட்டணத்தை உயர்த் வில்லை' என்பதில் மட்டும் மம்தா பானர்ஜி பெருமைகொள்வதில் அர்த்தமில்லை. கடந்த சில ஆண்டுகளாக இத்துறை கண்டுவருகிற லாபம், பாதுகாப்புக்கான நவீன சாதனங்கள் பொருத்தவும் மனித வளத்தை மேம்படுத்தவும் பயனாகி விபத்துகள் குறைந் திருக்க வேண்டும். ஆனால் நேர்மாறாக இருக்கிறது நிலைமை.

பிரதமர் தலையிட்டு மம்தா பானர்ஜியின் ராஜினாமாவைக் கோரலாம்; கோர வேண்டும். அரசியல் நிர்ப்பந்தங்களால் மௌனம் காக்கிறார்! கூடவே ரயில்வே பயணிகளின் பாது காப்பையும் பணயம் வைக்கிறார்! ●

பரிகாரம் ஸ்பெஷல்

மகிழ்ச்சி முளைக்க மரத்தை நடு!

பெற்றோர்களுக்கு தம் பிள்ளை பற்றி மனக்கவலைதரக் கூடிய ஒரு விஷயம் உண்டு என்றால், அது திருமணத் தடைதான். வரன்கள் வந்து கொண்டே இருக்கும். ஆனால் தொடர்ந்து தட்டிப் போகும். வயது உயர்ந்து கொண்டே போகும். வயிற்றில் பயம் வளைய வரும். இவ்விதத் திருமணத்துக்கு தடைக்குட் பலவிதமான தோஷங்கள் சொல்லப்பட்டுள்ளன.

அதற்குப் பிரகாரமாகப் பலவிதமான சாந்திகளும் சொல் லப்பட்டுள்ளன.

திருமணம் ஆகாதவர்கள் திருமணம் நடக்க, அவர்களது நக்ஷத்திரம், பாதம் அறிந்து அவர்களது நக்ஷத்திரம் மற்றும் பாதத்திற்கு எந்த மரம் சொல்லப்பட்டுள்ளதோ அதை ஆலயத்திலோ, பொது இடங்களிலோ நடவும்.

உதாரணமாக அசுவினி நட்சத்திரம் இரண்டாம் பாதத்திற்கு மகிழ மரம் சொல்லப்பட்டுள்ளது. அப்படி இரண்டாம் பாதத்திற்கு சொல்லப்பட்ட மரம் கிடைக்காவிட்டால் நான்கு பாதத்திற்குள் வரும் வேறு மரங்களையும் நடலாம்.

இதுபோன்று மற்ற நட்சத்திரக்காரர்கள் தங்கள் பரிகார மரத்தை பக்கத்தில் உள்ள அட்டவணையின் மூலம் அறியவும்.

சில பெண்களுக்கு நட்சத்திர தோஷம் இருக்கும் என்ன மரக்கன்றுகளை நட்டால், அவர்களுடைய திருமண தோஷம் நீங்கும்? அடுத்து வரும் பட்டியலைப் பார்க்க:

ஆயில்யம் - தாளை பனைமரம், சித்திரை - ஆலமரம், விசாகம் - பனைமரம், கேட்டை - பாக்கு மரம், மூலம் - வேங்கை மரம், பூராடம் - வேப்ப மரம்

உங்களுக்கான மரங்களை நீங்கள் பிறந்த நட்சத்திரத்தன்றோ பிறந்த கிழமையன்றோ நட வேண்டும். நவதான்யத்தில் ஊறவைத்த



கண்ணன் பட்டாச்சார்யா

நட்சத்திரம்	முதல் பாதம்	இரண்டாம் பாதம்	மூன்றாம் பாதம்	நான்காம் பாதம்
அசுவினி	காஞ்சிரை	மகிழ மரம்	வாதாங்கொட்டை	நண்டாஞ்சு
பரணி	நெல்லி	மஞ்சகடம்பு	விளாமரம்	நந்தியாவட்டை
கிருத்திகை	நெல்லி	மணிபுங்கு	வெண்தேக்கு	நரி வேங்கை
ரோகிணி	நாவல்	சிவப்பு மந்தாரை	மந்தாரை	நாகலிங்கம்
மிருகசீரிஷம்	கருங்காலி	ஆச்சா மரம்	வேப்ப மரம்	நீர் கடம்பை
திருவாதிரை	செங்கருங்காலி	வெள்ளை	எருக்கு	ஆணை குன்றிமணி
புனர்பூசம்	மூங்கில்	மலைவேம்பு	அடப்ப மரம்	நெல்லி
பூசம்	அரசு	ஆச்சா மரம்	இருள்	நொச்சி
ஆயில்யம்	புன்னை	முசுக்கொட்டை	இலந்தை	பலா
மகம்	ஆலமரம்	முத்திலா	இலுப்பை	பவளமல்லி
பூரம்	பலாசும்	வாகை	ருத்திராட்சை	பலாசம்
உத்திரம்	ஆலசி	வாதநாராயணன்	எட்டி	புங்கம்
ஹஸ்தம்	ஆத்தி	தென்னை	ஓதியமரம்	புத்திரசீவி மரம்
சித்திரை	வில்வம்	புரசு	கொடுங்காய்புளி	தங்க அரளி
ஸ்வாதி	மருது	புளிய மரம்	மஞ்சள் கொன்றை	கொழுக்கட்டை மந்தாரை
விசாகம்	விளா	சிம்சபா மரம்	பூவன் மரம்	தூங்குமூஞ்சி
அனுஷம்	மகிழம்	பூமருது	கோங்கு	தேக்கு
கேட்டை	பலா	பூவரசு		
மூலம்	மரா	பெரு மரம்	செண்பகம்	ஆச்சா மரம்
பூராடம்	வஞ்சி	கடற்கொஞ்சி	சந்தன மரம்	எலுமிச்சை
உத்திராடம்	பலா	கருக்காய்	சார பருப்பு	தாளைபனை
திருவோணம்	எருக்கு	கருங்காலி	சிறுநகப்பூ	பாக்கு மரம்
அவிட்டம்	வன்னி	கருவேல்	சீதாபழம்	ஜாதிக்காய்
சதயம்	கடம்பு	பரம்பை	இராமன்சீதா	திலக மரம்
பூரட்டாதி	தேமா	குங்கிலியம்	சுந்தரவேம்பு	கள்ளிமந்தாரை
உத்திரட்டாதி	வேம்பு	குல்மோஹர்	சேராங்கொட்டை	செம் மரம்
ரேவதி	பனை	தங்கஅரளி	செஞ்சந்தனம்	மஞ்சபாலா

நீரை மரக்கன்றுக்கு விடுவது சிறந்தது. நவதான்யத்தை பசுமாட்டிற்குக் கொடுக்கவும். மறுநாள் முதல் சாதாரண நீரை மரக்கன்றுக்கு விடலாம்.

புத்திரதோஷ பரிகாரம் : *சந்தான கோபாலகிருஷ்ணனை பூஜிப்பதும், முருகப்பெருமானை பூஜிப்பதும் விசேஷ பலன்களைத் தரும். நைவேத்யமாக பால் பாயசம் செய்யலாம்.*

ஒரு நல்ல கலைஞனுக்கு அடையாளம் அவனுள்ளிருக்கும் காதல் உணர்வுதான். என்னுள்ளிருக்கும் காதல்தான் என்னை இசையமைப்பாளனாய் மாற்றி, 'மதராசபட்டின'த்தின் மூலம் மகிழ்ச்சியைத் தந்தபடியிருக்கிறது என்கிறார் இளமையான இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்.

(ம்..ம்... அப்புறம்...?)

''அந்தப் படத்தில் ஒருத்தர் பாஷை இன்னொருத்தருக்குத் தெரியாது. மொழியைக் கடந்த காதல். இந்தச் சூழலுக்கு இசைதான் காதலை ஆடியன்ஸுக்கு சொல்லணும். அது சவால்தானே? சவால்ல ஜெயிச்சுட்டேன்னு நெனைக்கிறேன். இந்தப் படத்திற்காக 1940களில் இருந்த இசையை ஆராய்ந்தேன். ஒரே நேரத்தில் நான்கு வயலின்களைப் பயன்படுத்தி வாசிக்கும் 'ஸ்டிரிங்க்ஸ் குவாடட்' என்ற இசையோடு Key Futeயையும் பயன்படுத்தி உருவாக்கும் woodwin section என்ற இசையையும் பின்னணியில் சேர்த்தேன்.''

(அவ்வளவுதானா இன்னும் இருக்கா?)

''பீத்தோவான், மொசார்ட் போன்ற இசை மேதைகளின் இசையையும் கொஞ்சம் ஆங்காங்கே தெளிச்சேன்.''

(இது மேற்கத்திய காப்பின்னு யாராவது சொல்லிட்டா?)

''நமது மும்மூர்த்திகளைத் தொடாம யாராவது கர்நாடக இசையை சினிமாவில கொண்டு வர முடி



ஜி.வி.பிரகாஷ்



கலக்கல் காப்பி வேற...

''நாற்பதுகளின் சென்னை ஆன்மாவை கண்முன் நிறுத்துவது சவால்தான். கடந்த காலம் அழகானது. அதைத் தேடுவது சுவாரஸியமானது. அக்கால விளம்பு நிலை மக்களின் பதிவு அபூர்வமானது. ஆர்ட் டைரக்டர் என்பதைத் தாண்டி சென்னைவாசியாய் அதன் ஆதிகாலத்தை உணர்வுபூர்வமாய் அறிந்தேன்.''

- ஆர்ட் டைரக்டர் செல்வக்குமார்

யுமா? எல்லாம் அவர்களின் தானம் தானே. மேற்கத்திய இசையோடு என் இசையைக் கலந்திருக்கேன். கலக்குறது வேற. காப்பியடிக்கிறது வேற. அவங்க பேரைச் சொல்லாம அவங்க இசையை என்னோடதுன்னு சொல்லி பேர் வாங்குறதுதான் காப்பி. இந்தப் படத்தில் 'பூக்கள் பூக்கும் தருணம்' என்கிற பாடல் தர்பாரிக்கனடா ராகம், 'ஆருயிரே' என்ற இன்னொரு பாடல் 'சாருகேசி' ராகம். இதெல்லாம் நானா கண்டுபிடிச்சேன். இதெல்லாம் எங்க முன்னோர்களின் சொத்து.

(சபாஷ்... உங்க நேர்மை பிடிச்சிருக்கு!)

''எம்.எஸ்.விஸ்வநாதனோடு விக்ரம் ஒன்று சேர்ந்து பாடியிருக்காரு. இப்பவும் எம்.எஸ்.வி. குரலில் அதே குழைவு. 'திருப்தியில்லேன்னா இன்னொரு முறை பாடுறேன். டேக் எடுத்துக்கிறீயாப்பா'ன்னு கேட்டாரு. அவர் நிறைகுடம் ஞானம். பெரியவங்க... பெரியவங்கதான். ஆறுவிதமான குரலில் பாடிய விக்ரம் சிறந்த பாடகராக நிச்சயம் வருவாரு.

(அட... என்னடா! இந்தப் புள்ள அநியாயத்துக்கு நல்லவனா இருக்கே?)

- ராகவ்குமார்

மேஷம்: உடல் ஆரோக்கியம் திருப்தி கரமாக இருக்கும். கடல் கடந்து போய் வர்ற வாய்ப்புகள் அதிகம். குழந்தை களோடு புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். செலவுகள் கட்டுக்கடங்காது இருந்தாலும் சுபச் செய்திகள் தேடி வரும். திருமணம் கைகூடி வரும். அதே நேரத்தில் வருவாயும் பெருகும். சத்ரு தொல்லை விலக வியாழன்தோறும் குருவழிபாடு செய்து வாருங்கள்.

ரிஷபம்: நெருங்கிய கூட்டாளிகள் விட்டு விலகிப் போகும் அதே நேரத்தில், புதிய தொழில் முயற்சிகள் பலனளிக்கும். உறவி னர்கள் வருகை அதிகரிக்கும். பண விஷ யத்தில் எச்சரிக்கை தேவை. சுபகாரியத் தடையும் மனத்தின் வருத்தமும் விலகும். பூர்விகச் சொத்துகள் கைக்கு வர ராகு / கேது / சனி - வழிபாடுகள் நற்பலனளிக்கும்.

மிதுனம்: நினைத்த மாதிரியே உத்தியோகத்தில் உயர்வும் இடமாற்றமும் இருக்கும். கூடவே வீடு மாற்றமும் தவிர்க்க முடியாது. மனக் கிலேசம் இருந்தாலும் உடல் ஆரோக்கியம் பாதிக்காது. கடன் சுமை தீருவதால் 'உல்லாசப் பயணம்' தேடி வரும். கோர்ட் வழக்குகளில் வெற்றியடைய ஆஞ்சநேயர் வழிபாடு அவசியம்.

கடகம்: சுபகாரியப் பேச்சுவார்த்தை, குல தெய்வ வழிபாடும் பூர்த்தியாவதால் மனத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். புதிய வீடு / மனை வாங்கும் யோகம் ஆரம்ப மாகிறது. உத்தியோகத்தில் பதவி உயர்வு தேடி வந்து சேரும். குழந்தைகளால் மனத்தில் சந்தோஷம் நிலைக்கும். உடல் நிலை சீராக பக்கத்திலிருக்கும் சிவாலய வழிபாடு பலனளிக்கும்.

சிம்மம்: எதிலும் நிதானம் தேவை. திட் டங்களை சற்று தள்ளிப் போடுவது நல்லது. கொடுக்கல் வாங்கலில் சிக்கல் வரலாம். மனபாரம் வாட்டி எடுத்தாலும் குடும்ப வாழ்வில் நிம்மதி இருக்கும். வேலை பளு அதிகரித்தாலும் வியா பாரத்தில் முன்னேற்றம் காணலாம். குழந் தைகள் படிப்பில் சுணக்கம் காட்டுவார்கள். வியாழன் தோறும் குருவழிபாடு கோடி நன்மை தரும்!

கன்னி: திருமணத் தடை விலகி சுபகாரி யம் கைகூடும். புதியத் தொழில் தொடங்க ஏற்ற தருணம். உறவினர் வருகையால் நீண்ட நாள் முடிவுக்கு வராத காரியம் பலிதமாகும். வீடு மாற்றம், இடமாற்றம் உண்டாக வாய்ப்புகள் அதிகம். அதனால்

நடக்குமென்பார்

தொழிலில் எந்தப் பாதிப்பும் இருக்காது. தாய்வழி சொத்து வந்து சேரும். மனபாரம் குறைய சனிக்கிழமைதோறும் சனி பக வானுக்கு தீபம் ஏற்றினால் வாழ்வில் ஒளி பூக்கும்.

துலாம்: பொருளாதார முன்னேற்றம், பூமி யால் ஆதாயம், நிலுவைகள் வசூலாகும் நல்ல வாரம் இது! குலதெய்வ வழிபாட் டால் மனப்பாரம் நீங்கும். உடல் நிலை யில் கவனத்தோடு இருங்கள். நல்ல / கெட்ட செய்திகள் தொலைதூரத்திலிருந்து தேடிவரும். நண்பர்களோடு பிரிவு, உறவி னர்களோடு பிணக்கு உண்டாகும். வாக்கு வாதத்தை தவிர்த்தல் நலம்! ஆஞ்சநேயர் வழிபாட்டால் அல்லல்கள் தீரும்.

விருச்சிகம்: வேலையில் இடமாற்றம்

இருக்காது. அதேநேரத்தில் தொழிலில் நல்ல வருவாய் கிட்டும். வாகனங்களால் இடர்பாடு நேரலாம். இல்லற வாழ்வு இனிக்கும். உறவினர்களிடம் வார்த்தை சிக்கனம் தேவை. திருமணம் கைகூடி வருவதால் மனவருத்தம் விலகும். ராகு / கேது / சனி வழிபாடு சங்க டங்களைத் தீர்க்கும்.

தனுசு: ஆடை ஆபரணங்கள் குவி யும் வாரம் இது! சுபபேச்சுவார்த் தைகள் பலிதமாவதால் மனத்துக்கு சந்தோஷம் கிட்டும். இல்லற வாழ்வு இனிக்க அனுசரித்துப் போவது அவசியம். வீடு மாற்றம் கவலைகளைப் போக்கும். புதியத் தொழில் தொடங்கும் முன் விநாயகர்

25.07.2010 முதல் 31.07.2010 வரை



நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

வழிபாடு பலன் அளிக்கும். உத்தியோ கத்தில் இடமாற்றம் இருக்காது. சனி வழிபாடு சங்கடங்கள் தீர்க்கும்.

மகரம்: அதிர்ஷ்டம் தேடி வரும். புதிய வீடு / மனை வாங்கும் யோகம் வரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக் கும். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவதால் சுபகாரியம் கைகூடி வரும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். நிலுவைகள் வசூலாகும். செலவுகள் கட் டுக்குள் அடங்கும்! பத்திரிகைகளில் பெயர் வரும். அம்மனுக்குப் பொங்கலிடு தல் சந்தோஷம் பொங்க வைக்கும்.

கும்பம்: நண்பர்கள் பிரிவினால் மனம் வேதனை தரும். தூர தேச மனிதர்களால் நற்செய்தி கிட்டும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். அதே நேரத்தில் செலவும் அதிகம் இருக்கும்! இல்லற வாழ்வு இனித்தாலும், தனிக் குடித்தனம் போக நேரிடும். உத்தி யோகத்தில் உயரதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். ஆஞ்சநேயர் வழிபாடு ஆயுளுக்கும் நல்லது.

மீனம்: வேலை பளு அதிகரித்தாலும் கடன் பிரச்னை தீரும் வாரம் இது! விருந்தி னர்கள் வருகையால் மகிழ்ச்சி பெருகி னாலும் வாக்குவாதத்தை தவிர்ப்பது நலம். உடல் ஆரோக்கியம் பாதித்தாலும் வழக்குகள் வெற்றி பெறும். பொருளாதார முன்னேற்றத்தால் வீடு / மனைகள் வாங் குவீர்கள். படிப்பில் முன்னேற்றம் இருக் கும்.



கல்லூரிக்கு வந்த புதுசுல எல்லோரும் செல்போன் வெச்சிக்கிட்டு இருந்தாங்க. அப்பாக்கிட்ட அடம்பிடிச்சு வாங்கினேன். வாங்கிய சில நாளிலேயே 'உம்பேரு என்ன?' 'எந்தக் காலேஜ்' 'எப்போ கிளம்புவ'-ன்னு எஸ்.எம்.எஸ். ரொம்ப பயமாயிடுச்சு. அண்ணங்கிட்ட சொன்னேன். போன்போட்டு போலிஸுக்கு புகார் கொடுப்பேன்னு மிரட்டினாரு. அதுக்குப் பிறகு வரலை. இந்த எஸ்.எம்.எஸ். தொல்லைய சமாளிச்சா போதும். இது நல்ல தோழிதான்.

- பவித்ரா, கோயமுத்தூர்

எஸ்.எம்.எஸ். டார்ச்சர சமாளிச்சாப் போதும்!

நான் இரத்ததானம் பண்றதுல விருப்ப மாணவன். பலருக்கு என் செல் நெம்பர் தெரியும். அந்தச் சேவையை நான் இதன் மூலம்தான் செய்றேன். நேரில போட முடியாத சண்டையை எஸ்.எம்.எஸ்ல போடுவேன். அப்போ அளவா அழகா இருக்கும் அந்த சண்டை. போன் வாங்கியவுடன் சண்டைப் போட்ட பல நண்பர்களை எஸ்.எம்.எஸ்தான் சேர்த்துருக்கு!

- கண்ணன், சூலூர்



வாசகர்களே!
உங்க செல்ஃபோன்
அனுபவத்தை எழுதுங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.
உங்கள் செல்ஃபோனில் KACON என்று டைப்
செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு உங்கள் அனுபவம்.
பெயர். ஊர் ஆகியவற்றோடு 562632 என்ற
எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.
செய்யலாம்.


என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

VBC Jewellery

HOUSE OF VUMMIDI

இணைந்து வழங்கும்



'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*

கல்கி நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான, தரத்திலும் நம்பர் ஒன் மகளிர் மாத இதழ் மங்கையர் மலர் ஜூலை இதழில், 'வைர மங்கை' - சிறப்பு சந்தா திட்டம் (பக்கம் 188) பற்றிய அறிவிப்பு வெளியானது. இத்திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் மங்கையர் மலருக்கு சந்தா கட்டி, ஐந்து முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தலாம். அப்படி அறிமுகப்படுத்துபவர் பவள மங்கை என்ற பட்டம் பெறுவார். பவள மங்கைக்கும் (ரூ.250/- மதிப்புள்ள) முத்து மங்கைகளுக்கும் (ரூ.100/- மதிப்புள்ள) பரிசுக் கூப்பன்கள் அந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் முப்பது முத்து மங்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், பவள மங்கையிலிருந்து பதவி உயர்வு பெற்று மரகத மங்கை என்ற மகுடம் சூட்டப்படும்.

இவ்வாறு முப்பது சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் இருபது அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படம் அடுத்து வரும் மங்கையர் மலர் இதழில் வெளியாகும். கூடவே 'வைர மங்கை' பம்பர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ளவும் அவர்கள் தகுதி பெறுவார்கள்.

'கல்கி' நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான நமது மங்கையர் மலர் இதழின் அன்புவட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்துக்கு, வாசகியரின் ஏகோபித்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். கல்கி வாசகர்களையும் இத்திட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நீங்களும் வைர மங்கை ஆகணுமா? அதற்கான கூப்பன் அடுத்த பக்கத்தில்...

(அடுத்த பக்கத்தில்...)

(ஆர்)

மேலும் விவரங்களுக்கு **94443 83465**

இத்திட்டத்தில் மும்முரமாக இறங்கி முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்தி, முதல் மரகத மங்கையாக உயர்ந்த சுசீலா அரவிந்தன் இதோ...



பிரியமுள்ள ஆசிரியருக்கு...

வணக்கம். வரும் ஆகஸ்ட் 1 எனது பிறந்த நாள். இந்த நாளில் மிகுந்த மனநிறைவை உணர்கிறேன். அதற்கு வழி ஏற்படுத்தித் தந்த மங்கையர் மலருக்கும் நட்பு வட்டத்தில் சந்தா கேட்டவுடன் ''ஓ... மங்கையர் மலரா... முகவரி எழுதிக்கோ'' எனச் சொல்லி என்னை உற்சாகப்படுத்திய மலர்களுக்கும் (முத்து மங்கையர்களுக்கும்) நன்றிகள்.

நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்!

மங்கையர் மலர் - VBC இணைந்து வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), மங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- மங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மங்கை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எனக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

எனது பெயர் :..

முகவரி:..

....

....

சந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)

....

ஃபோன்: ....

ஈமெயில்..

நான் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

1. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

2. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

3. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

4. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

5. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

உறையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

அனுப்ப வேண்டிய முகவரி


மங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

இப்படிக்கு

தேதி:..

பரிகாரம் ஸ்பெஷல்

முயற்சி... கூலி தருமா?





இந்த மானிடப் பிறவி என்பது கடந்த ஜென்மங்களில் செய்த பாவ புண்ணியங்களின் பலனாய்க் கிடைத்தது. கடந்த பிறவிகளில் செய்த பாவ புண்ணியங்களின் வினைத் தொகுப்பே இந்தப் பிறவி. பாவபுண்யங்களை கர்மா என்பது முன்னோர் மரபு.

சிலப்பதிகாரம் எனும் காவியம் ''ஊழ்வினை உறுத்து ஊட்டும்'' என்று கூறுகிறது.

பிறந்தது முதலே சிலர் அல்லல்படுதல், சரியான மண வாழ்க்கை அமையாமை, புத்திரதோஷம் உண்டாதல், சிறை செல்லல், கொலை, களவு, சூது போன்றவற்றில் ஈடுபடுவது அனைத்தும் அவரவர் வினைப் பயனே!

சிலருக்கு எல்லா வசதியும் இருக்கும். நிம்மதியே இருக்காது. இதுவும் பூர்வ புண்ய தோஷமேயாகும். ''அவ்வினைக்கு இவ்வினை'' என்று கூறுவதும் ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்று கூறுவதும் பூர்வ புண்ய தோஷத்தைச் சுட்டிக்காட்ட வந்தத் தொடர்களே ஆகும். விதியினால் ஏற்பட்டத் தோஷங்களுக்குப் பரிகாரம் உண்டா? எனின், பரிகாரம் என்பது ஒரு முயற்சி எனலாம். அதனால் தான் வள்ளுவர், ''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்'' என்று கூறுகிறார்.

இதன் பொருள். சில கொடிய நோய்கள், ஆயுள் பிரமாணம் போன்றவைத் தவிர ஏனையவற்றை அசைக்க முடியாத நம்பிக்கையினால், கடவுள் பக்தியினால், குருபக்தியினால், நித்ய கர்மானுஷ்டங்களினால் பரிகாரங்கள் மூலமும் கட்டுப் படுத்த முடியும் என்பதாகவும் கொள்ளலாம்.

● தினசரி குலதெய்வ வழிபாடு இருத்தல் நலம். ● தினசரி சூரிய நமஸ்காரம் செய்து, ஓம் ஆதித்யாதி நவக்கிரக தேவதாப்யே நமஹ: என்று ஒன்பது முறை சொல்லவும். ● அருகில் உள்ள சிவாலயத்தில் உங்களால் முடிந்த சேவை செய்யலாம். ● இயன்றவர்கள் அலகாபாத் திரிவேணி சங்கமத்தில் நீராடி, கயாவில் பிதுரர் கர்மாவை நிறைவேற்றி காசியில் தரிசனம் முடித்து திரும்பலாம். இது ஒரு எளிய வழி. ● வசதிவாய்ப்பற்றவர்கள் அருகிலுள்ள சிவாலயத்தில் தங்களால் முடிந்த பூஜா திரவியங்கள் கொடுத்து வழிபடுதல் நன்று. ● சிவ சிவ என தீவினை மாளும். நாராயண என்னும் மந்திரம் நலம் தரும் மந்திரம்.

இதில் ஏதாவது ஒரு மந்திரத்தை சதாகாலமும் உளமுருக மனமுருக ஜெபித்து வாருங்கள். தோஷம் விலகி சந்தோஷம் பெருகும். இது சத்யம்.

முருகடிமை துரைராஜ்



EACH ONE DONATE ONE NOTE BOOK

கிராமப்புற ஏழை எளிய மாணவ, மாணவியர்களின் கல்விக்காக EACH ONE DONATE ONE NOTE BOOK கடந்த ஆண்டுகளில் ஒரு லட்சம் நோட்டுப்புத்தகங்கள் ஏழை எளிய மாணவ மாணவியருக்கு வழங்கி உள்ளோம். இவ்வாண்டிலும் வழங்கி வருகிறோம்.

நோட்டு புத்தகங்கள் கொடுப்பதற்காக தொடர்பு கொள்ளவும்.



- **R.Lakshimi Narasiman,**
  R.K.Nagar, Royapettah, Adyar,
  Cell:09445324499
- **R.Rajendran,** Adyar.
  Cell:09444006151
- **R.P.Haran,** Thiruvanmiyur,
  Kottivakkam, Cell: 09282145027
- **K.Parineetha,** Valasarawalkam,
  Cell:09283593695

DONATIONS ARE EXEMPTED UNDER 80G of IT ACT

Swamy Vivekananda Social Service Centre (Regd.197/2001) Old No.153, New No.32, 1st Floor, Dr.Besant Road, Vivekananda Illam, Chennai - 600 005. Tamil Nadu.

Affiliated to Sri Ramakrishna - Vivekananda Bhava Prachar Parishad - Belur - Sri RAMAKRISHNA MATH

ஜாலி விஸிட்!

அறிவு, அழகிய கலை, ஆனந்தம் இந்த மூன்றையும் 1:1:1 என்ற விகிதா சாரத்தில் கலந்து, குஷியைக் குத்த கைக்கு எடுத்துக் கொண்டாடும் இடம் தேடி அலைந்தோம். கால்கள் இயல்பாக திருச்சி நெடுஞ்சாலையில் கோவை ராணுவ விமான தளத்தின்





சின்னக்'கடி'!

பெரிய கோழி வியாபாரியாக இருந்தாலும் கோரை பாயிலேத்தான் தூங்கமுடியும் ஆப்பாயிலில் படுக்க முடியாது.





மேரேஜ் லோன்!

"பேங்க்ல லோன் போட்டு டூ வீலர் வாங்கி னேன். ட்யூ கட்டலைன்னு பைக்க தூக்கிக்கிட்டுப் போய்ட்டான்!"

"ஐயோ... இது தெரிஞ்சிருந்தா நான் மேரேஜ் லோன் போட்டிருப்பேனே!"

அருகே சூலூர் கண்ணம்பாளையத்தில் இருக்கும் **ஆர்.வி.எஸ்.கல்வி நிறுவனங்களின்** வளாகத்தில் நுழைகிறது. உள்ளே ஏகப்பட்ட காலேஜ்கள் இருந்தாலும் 'வானில் ஏற்பட்ட வெப்பசலனத்தால் மழை பொழியும்'ன்னு நியூஸில் சொல்றாப் போல காலேஜ் லீவு விட்டதால காய்ந்துப் போயிருக்கும் மனசுக்கு ஆட்டம் பாட்டம்னு கொஞ்சம் 'கலை'யால காயம் ஆத்திக்க வாங்கன்னு வரவேற்றது ஆர்.வி.எஸ்.கலை மற்றும் அறிவியல் கல்லூரி...





மணலுக்குச் சொரிஞ்சுவிட்டு நைசில் பவுடர் போடுங்க!

ஆடணும்னு தோனிச்சா போதும்... எங்க பாட்டுக்கு கடவுளே வந்து ஆடுவாருங்க!



சமுதாய வளர்ச்சி

கல்வியிலா?

* ஊரே காரித்துப்பினாலும் எம்மவன் பாரு காருல போறான்னு எந்த அம்மாவது பெருமைப்படுவாளா? கண்ணியமான புத்திய கல்விதான் தரும். கரன்சி தராது.

பொருளாதாரத்திலா?

* காசு இல்லாட்டா பட்டப் படிப்பை கடவுளா கொடுப்பாரு?
'கற்கை நன்றே... பிச்சை புகினும்...'
பிச்சையெடுக்க சொன்னது பொருளாதாரம் இல்லாததால்தானே?

பட்டிமன்றம் நடுவர் தீர்ப்பு:

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கே பொருள்தான் ஆதாரம். அந்தப் பொருளாதாரத்தை உருவாக்குவதுதான் கல்வி. நல்ல மனிதனை செதுக்கும் சிற்பி கல்வி. அதனால்தான் அரசு கட்டாயக் கல்வியை அறிவிக்குது. எல்லோர்க்கும் கல்வின்னுதான் சொல்லுது... எல்லோரும் பணக்காரங்கன்னு சொல்லலை!

இது என்னோட ஐந்தாவது பைக். நான் காலேஜிலே படிச்சிக்கிட்டே கம்ப்யூட்டர் சென்டர் நடத்துறேன். என்கிட்ட பத்து பேர் வேலை செய்யுறாங்க. இந்த வண்டி என்னோட உழைப்புல வாங்கியது. படிப்புக்கும் வேலைக்கும் இடையூறு இல்லாம இந்த வண்டி என்னை ஓட்டிக்கிட்டுப் போகுது.

- விபின் சந்திரன்,
எம்.எஸ்ஸி.,
கம்ப்யூட்டர்
சயின்ஸ்





Mr. பிரபலம்



ஈட்டி எறியறதுல சீமான்
இந்த ஜெ.மெய்ஞானகுமார்.
தேசிய அளவில், மாவட்ட அளவில்
தங்கம், வெள்ளி வாங்கி
காலேஜில ஜெயக்கொடி நாட்டியவர்!



இதுதான் காதலா!



நீ அருகில் இருக்கும்போது
யாரும் இருப்பதில்லை
உன்னைப் போல்.
நீ மட்டும் இருக்கிறாய்
எதுவுமே இல்லை - எனக்கோ
எல்லாம் இருக்கிறது.

- வீ.பாலமுருகன்,
மூன்றாமாண்டு மின்னணுவியல்.



சிறுகதை!

ஒரு சிட்டுக்குருவி வேகமா தாழ பறந்து வரும் போது ஒரு கார் மேல மோதிடுச்சு. மயங்கி விழுந்த அந்தக் குருவியை கார் டிரைவர் எடுத்துக்கிட்டு வந்து ஒரு கூண்டுல வெச்சு தண்ணி தெளிச்சாரு. கண் விழித்த குருவி கேட்டுச்சாம்.

"ஐயோ நான் மோதி கார் டிரைவர் செத்துட்டானா? அதனாலதான் என்னை ஜெயில்ல போட்டுட்டாங்களா?"

மணல் அரிப்பு!

எஸ்.எம்.எஸ்.ஜோக்ஸ்

"மணல் அரிப்பை தடுக்க என்ன செய்ய வேண்டும்?"

மணலுக்கு சொரிஞ்சு விட்டு, நைசில் பவுடர் போடவேண்டும்!"

- பி.சபரிநாதன்

தேவதை தரிசனம்!



ஒரு இரவின் மழை நாளில்
ஒழுகும் வீட்டில்
ஒழுகும் பாத்திரம் வைத்தமர்ந்து
தூங்குவதற்காக
தூக்கம் இழந்த
அம்மா தேவதையாக ஜொலித்தாள்!
அந்த நாளில்...


- பி.சிலம்பரசன், முதலாமாண்டு பி.பார்ம்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்



❖ வெள்ளயங்கிரி

● இரத்தின வேல் சுப்பிரமணியம்





"கோவை, முதலிபாளையம் குக்கிராமத்தில் எனக்குக் கிடைக்காத படிப்பை சின்னச்சின்ன கிராமத்து ஏழை மாணவர்கள் பெற வேண்டி அரும்பாடு பட்டு இறைவனோடு இணைந்த என் மகன் இரத்தின வேல் சுப்பிரமணியம் நினைவால் திண்டுக்கல், திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், காரைக்கால், புதுக்கோட்டை, சென்னை, மதுரை, தேனி, தூத்துக்குடி ஆகிய பத்து மாவட்டங்களில் நூறு கல்வி நிறுவனங்களை உருவாக்கினேன். இன்று அதில் முப்பத்தாறாயிரம் மாணவர்கள் பயில்வது தனிச் சிறப்பு. கோவை கண்ணாம்பாளையத்தில் எங்களின் பல்நோக்கு மருத்துவமனை, ஆயுர்வேத, சித்தா மருத்துவமனை தனித்துவமானது. தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். கல்வி ஆலயத்தை போலவே இறையாலயத்து மேம்பாட்டிலும் ஆன்மிக நெறி பரப்பலிலும் என் சேவை தொடர விரும்பி ஒவ்வொரு கல்லூரிக்குள்ளும் ஒரு கோயிலைக் கட்டி மாணவர்களுக்கு கல்லூரிக்குள் வாழும் கடவுள் மீதும் இறை நேசம் ஏற்பட ஏற்பாடு செய்கிறேன்" என்கிறார் **டாக்டர் விஜயஸ்ரீ கே.வி.குப்புசாமி (ஆர்.வி.எஸ். கல்வி நிறுவனங்களின் சேர்மன்).**

உழைப்பின் சான்றிதழ்!

செந்தில் கணேஷ், அறங்காவலர்



● செந்தில் கணேஷ்

- "எங்கள் கல்வி நிறுவனங்கள் NAAC, NBA அங்கிகாரம், ISO தரச்சான்று பெற்றவை.
- கணினிமயமாக்கப்பட்ட நூலகம்.
- லண்டன் வெஸ்டர் பல்கலைக்கழகம், சீனாவின் பல பெரிய கல்வி நிறுவனங்கள் மற்றும் ORACLE, SAP நிறுவனங்களுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- பல் மருத்துவம், பொறியியல், டெக்ஸ்டைல், உயிர் தொழில்நுட்பஇயல் என எல்லா ஆய்வகங்களிலும் நவீன வசதி.
- ஒரு விமானத்தையே உருவாக்கும் அறிவாய்ந்த போதிப்பு முறையுடனான ஏரோநாட்டிகல் பிரிவு.
- கற்கும் திறன் குறைகிறபோது மாணவர்களுக்கு மனநல மருத்துவர்களின் கவுன்சிலிங்.
- UGC நிதி உதவியோடு ஆராய்ச்சிப் பட்டப் படிப்புகள்.
- வெளிநாட்டு மாணவர்கள் அதிகம் சேர்ந்ததால் பாரதியார் பல்கலைக் கழகத்தின் பாராட்டு என இன்னும் இன்னும் நீளும் பட்டியல் எங்களின் அயராத உழைப்பின் சான்றுகள்.

தொகுப்பு : **ஆர்.பாலா**


அருள்வாக்கு

உள்ளக்குழைவு



வேதாந்தத்திலே எல்லாம் உள்ளத்துக்குள்ளே ஹ்ருதய குஹையில் சாந்தத்தில் ஒடுங்கிவிடுவதாகச் சொல்லியிருக்கிறது. அந்த சாந்தத்திலே சேர்க்கத்தான் ஸங்கீதம் ஏற்பட்டிருக்கிறது. சியாமளா என்று ஸங்கீத மூர்த்தியாகப் பராசக்தி இருக்கிறபோது அவளுடைய உள்ளம் அப்படியே குழைந்திருக்கிறது (ம்ருதுள ஸ்வாந்தாம்); அவள் பரம சாந்தையாக இருக்கிறாள் (சாந்தாம்) என்று காளிதாஸன் 'நவரத்ன மாலா'வில் சொல்கிறார். உள்ளக் குழைவு என்பது ப்ரேமை, கருணை, ஸங்கீதத்தினாலே ஆத்ம சாந்தம் உண்டான பிறகு, ஸகலமும் அந்த ஆத்மாவே என்பதால் எல்லாவற்றிடமும் அன்பு பொங்குவதைத்தான் சாந்தாம், ம்ருதுள ஸ்வாந்தாம் என்று கவி சொல்கிறார். இந்த்ரிய இன்பமாயில்லாமல் ஆத்மானந்தத்தில் சேர்ப்பதாலேயே ஸங்கீதம் இப்படிப்பட்ட ப்ரேமையுள்ளத்தை உண்டாக்குகிறது. நினைத்துப் பார்த்தாலே மனம் குளிர்கிறது. அம்பிக்கை வீணையில் சப்த ஸ்வரங்களையும் மீட்டியபடி, அந்த ரீங்காரத்திலேயே சொக்கிப் பரம சாந்தையாக இருக்கிறாள்; அவளுடைய ஹ்ருதயம் புஷ்பம் மாதிரி மிருதுளமாக ஆகி கருணை மதுவைப் பொழிகிறது. இதை நினைக்கும் போது பக்தர்களுக்கும் மனம் குழைகிறது. பக்தியும் அன்பும் சாந்தமும் தன்னால் ஏற்படுகின்றன. வர்ணனாதீதமான சாந்தத்தில், ஆனந்தத்தில் முழுகியிருக்கிற ஸங்கீத அம்பிகை நமக்கும் சாந்தம், ஆனந்தம், அன்பினால் குழைந்த மனம் முதலியவற்றை அநுக்ரஹிக்கிறாள். 'ஸங்கீத மூர்த்தி' என்கிறபோது அவள் உத்தேசம் பண்ணி, அதாவது deliberate-ஆக இப்படிச் செய்கிறாளென்று தோன்றவில்லை. ஸப்த ஸ்வரங்களில் ரமிக்கவேண்டுமென்பதற்காகத்தான் அவள் வீணையை மீட்டுவதாகத் தெரிகிறது. ''ஸரிகமபதநி ரதாம்'' என்று ஸப்தஸ்வரானந்தப் படுபவளாகவே ச்லோகத்தில் ஆரம்பித்திருக்கிறது. அவள் அப்படி ஆனந்தப்பட்டால், லோகம் பூரா அவளுக்குள் இருப்பதால் லோகமும் ஆனந்தப்படுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



உள்ளும்

மனோகர் அலுவலகம் முடிந்து வீடு திரும்பும்போது இரவு எட்டரைக்கு மேலாகிவிட்டது. வழக்கம்போல் மீனாட்சியம்மாள் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். வீட்டிற்குள் நுழைந்ததுமே ஊது பத்தி மணத்தது. புறவாசல் கதவு திறந்து கிடந்தது. புறவாசல் பக்கமிருந்து இலேசான காற்று வீசிக் கொண்டிருந்தது. சம்பந்தம் அவர் அறையில் உட்கார்ந்து எதையோ வாசித்துக் கொண்டிருந்தார். அவர் பழைய இலக்கியம், நவீன இலக்கியம் எல்லாவற்றையும் வாசிப்பார். சென்னைக்கு மகள் வீட்டுக்குச் சென்றால் புத்தகங்கள் வாங்காமல் ஊருக்குத் திரும்ப மாட்டார். அவருடைய புத்தக ருசியறிந்து கிருஷ்ணபாரதியும் அவ்வப்போது தான் படித்து முடித்த புதுப்புத்தகங்களை மாமாவுக்கு அனுப்பி வைப்பான்.

மனோகர் முகம், கை கால்களை அலம்பிக் கொண்டு வந்தான். திருநீற்று மரவையிலிருந்து திருநீறை எடுத்துப் பூசிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். வழக்கம் போல் மீனாட்சியம்மாள் பரிமாற வந்தாள். ''வேண்டாம்மா... நீ டீ.வி. பாரு. நானே போட்டுக்கிடுதேன்'' என்றான். மீனாட்சியம்மாளுக்கு மனது கேட்கவில்லை. தண்ணீர் விட்ட சாதத்தைப் பிழிந்து வைத்து, தயிரை ஊற்றினாள். தொட்டுக் கொள்ள மாங்காய் ஊறுகாய் இருந்தது.



வண்ணநிலவன்

''அப்பா, ரஞ்சனி எல்லாம் சாப்பிட்டாச்சா அம்மா...?''

''எல்லாரும் சாப்பிட்டாச்சு...''

''ரஞ்சனி எங்கே?''

''மாடியிலே படிச்சுக்கிட்டு இருக்கா'' என்றாள். சாப்பிட்டுவிட்டு அப்பாவிடம் அக்கா விஷயத்தைப் பேசிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தான். அக்கா, யாரிடமும் அதைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ஆபீஸிலிருக்கும் போது அன்று மத்தியானம், அத்தான் கிருஷ்ணபாரதியிடமே அக்கா விஷயத்தைப் பேசிவிட வேண்டுமென்று தோன்றியது. மொபைலை எடுத்து



புறமும்

அத்தானுடைய நம்பரைப் போடப் போகும்போது, ஏதோ ஒருவிதத் தயக்கம் வந்துவிட்டது. அத்தானிடம் அதைப் பற்றி அவ்வளவு வெளிப்படையாகப் பேசி விட முடியாது என்று பட்டது.

ஆனால், அப்பாவிடம் பேசுவதில் கூச்சமில்லை. அக்கா அவனைப் பற்றி என்ன நினைத்தாலும் சரி, அப்பாவிடம் சொல்லி அவன் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று தோன்றியது. அப்பாவால் அது முடியும் என்று நம்பினான். தயிரும் மாங்காய் ஊறுகாயும் சேர்ந்து சாதம் போன இடமே தெரியவில்லை. புறவாசலுக்குச் சென்று கைகழுவினான். மங்கலான நிலா வெளிச்சம் அடி பம்பின் மீதும், துவைக்கிற கல்லின் மீதும் விழுந்து கொண்டிருந்தது. ஈரக் கையை வேட்டியில் துடைத்துக் கொண்டான். வாயை நன்றாகக் கொப்பளித்த பிறகும் தயிர், மாங்காய் ஊறுகாயின் கலவையான மணம் முகத்துக்குள் வீசியது.

சம்பந்தத்தின் அறையில் வலது ஓரம் சுவரையொட்டிக் கட்டில் கிடந்தது. ''படிச்சுக்கிட்டு இருக்கீங்களா அப்பா?'' என்று கேட்டுக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்தான். சம்பந்தம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேஜை மீது வைத்தார்.

''ஆபீஸ் விட்டு வர்றதுக்கு இவ்வளவு நேரம் ஆயிட்டுதா?''

''ஆமாப்பா. லேட்டாயிட்டுது.''

''சாப்பிட்டியா?''

''இப்பத்தான் சாப்பிட்டேன்.''

''அக்கா என்ன சொன்னா?'' என்று சம்பந்தம் பொதுவாகக் கேட்டார்.

''இருக்கா... இருக்கா...'' என்றான் மனோகர்.

''வருணுக்குப் பலமான அடியா?''

''எலும்புமுறிவு. கட்டுப் போட்டிருக்கு. அந்தக் கட்டோட சும்மா இருக்க மாட்டேங்கிறான்.''

''வெளையாடுகிற பிள்ளைகள் அப்படித்தான்டா துருதுருன்னு இருக்கும்...'' என்றார். ஒவ்வொருத்தரைப் பற்றியும் தனித்தனியாக விசாரித்து முடித்த பிறகு மனோகர், அன்று மெரீனா பீச்சில் அக்கா கூறியதையெல்லாம் விரிவாக அவரிடம் சொன்னான். அவர் எல்லாவற்றையும் எந்த முகச் சுளிப்பும் இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

''அக்கா ஏதாவது ஏடாகூடமாப் பண்

றதுக்கு முன்னாலே நீங்க அக்கா கிட்டே பேசுங்க அப்பா. முடிஞ்சா நீங்க மெட்ராஸுக்கு நேர்லேயே கூடப் போயிட்டு வரலாம்ப்பா...'' என்றான் மனோகர். சிறிது நேரம் அமைதியாக இருந்த சம்பந்தம், கட்டிலில் தலையணைக்குப் பக்கத்திலிருந்த மொபைலை எடுத்தார்.



மனோகரியின் நம்பரைத் தேடிக் கொண்டே, ''மொதல்ல என்னன்னு அவகிட்டேயே பேசிப் பார்க்கேன்'' என்றார்.

மனோகரி அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்குச் சென்றிருந்தாள். வருணை வீட்டில் விட்டு விட்டுக் கார்த்திகாவை மட்டும் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தாள். மொபைலை வீட்டிலேயே ஞாபக மறதியாக விட்டுச் சென்று விட்டாள். அவளுடைய ஹேண்ட்பேக் ஹாலில் மேஜை மீது இருந்தது. வருண் உள்அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். பாப்பம்மாள் சமையல்கட்டில் வேலையாக இருந்தாள். சண்முகம் தெரு வாசலில் நின்று யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். கிருஷ்ணபாரதி ஓரன்பாமுக்கின் 'ஸ்நோ' என்ற நாவலைப் படித்துக் கொண்டிருந்தான். மொபைல் அடிக்கிற சப்தம் கேட்டு அங்குமிங்கும் பார்த்தான். அந்த ரிங்டோன் அவனுடையதில்லை. மனோகரியுடைய போனின் ரிங்டோன். மூன்று நான்கு முறை அடித்த பிறகு புத்தகத்தை மூடிச் சோபாவில் வைத்து விட்டு மனோகரியின் ஹேண்ட்பேக்கைத் திறந்து மொபைலை எடுத்தான். மாமாதான் போன் செய்கிறார். ஒரு க்ஷணம் யோசித்து விட்டுக் காதில் வைத்துப் பேச ஆரம்பித்தான்.

''ஹலோ மாமா... நான்தான் கிருஷ்ணபாரதி பேசறேன்... வணக்கம் மாமா... நல்லா இருக்கீங்களா? வீட்டிலே எல்லாரும் சௌக்கியமா?'' என்று கேட்டான்.

ரஜினி வழியில்...

''ரஜினியைப் போலவே எனக்கும் ஆன்மிகத்தில் ரொம்ப ஈடுபாடு. நான் படிக்கிறதும் ஆன்மிக புக்ஸ்தான். இமயமலை யாத்திரைப் பற்றிப் படிச்சதும் உடனே நானும் ரஜினி வழியில இமயமலை போயிட்டு வந்தேன்'' என்கிறார் நடிகை ஆன்மிக(பத்ம)ப்ரியா!''

மருமகனுடைய குரலைக் கேட்டதும் சம்பந்தம் ஒரு க்ஷணம் தயங்கினார். பிறகு சுதாரித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''எல்லாரும் சௌக்யம் மாப்பிள்ளை. மனோகரி இல்லையா?''

''அவ வெளியே போயிருக்கா...''

எல்லோரைப் பற்றியும் விசாரித்து விட்டு மெதுவாக மனோகரியின் விஷயத்துக்குத் தாவினார். மருமகனிடமே இதைப் பற்றி நேரடியாகப் பேசினால் என்ற அவருக்குத் தோன்றியது. மிகவும் நாசூக்காக விஷயத்தை ஆரம்பித்தார். மாமாவுக்கு இது எப்படித் தெரிந்தது என்று முதலில் கிருஷ்ணபாரதி தடுமாறினான். பிறகு நேற்று வந்து விட்டுப் போன மனோகர்தான் அவரிடம் சொல்லியிருக்க வேண்டும் என்று நினைத்தான்.

''மனோ ஏன் இந்த மாதிரி நடந்துக்கிறான்னு எனக்கும் ஒண்ணும் புரியலே மாமா... அந்தப் பொண்ணு வீடு பக்கத்திலேதான். பத்திரிகை

விஷயமா கவிதைகள் கொடுக்க வீட்டுக்கு வருவா. அவங்க அப்பாவெல்லாம் கூட நம்ம வீட்டுக்கு வந்திருக்கார். அப்பாவுக்கு அவரைப் பழக்கம். ஒரு ஃபேமிலி ஃப்ரெண்ட் மாதிரிதான் மாமா...''

''இதிலே தப்பா எடுத்துக்கிறதுக்கு என்ன இருக்கு?'' என்றார் சம்பந்தம்.

''அதுதான் மாமா எனக்கும் புரியலே... அவளைப் பற்றி நெனைச்சாலே ஹிஸ்டீரியா வந்த மாதிரி கத்துறா. ரெண்டு மூணு நாளா என் கூடப் பேசறதே இல்லை மனோ. மனோகர் சொல்லியிருப்பானே?''

''ஆமாமா... சொன்னான்...'' என்றார் சம்பந்தம். மனோகரி குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு திருநெல்வேலிக்கே வர இருப்பதெல்லாம் மருமகனுக்குத் தெரியுமா, தெரியாதா என்று யோசித்தார். மனோகர் சொல்வதைப் பார்த்தால் விஷயம் ரொம்ப விபரீதமாகப் போய்க் கொண்டிருக்கிற மாதிரிதான் தோன்றுகிறது. ஆனால் கிருஷ்ணபாரதி எவ்விதப் படபடப்புமில்லாமல் நிதானமாகப் பேசியது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

''மனோ என்னதான் சொல்றா?''

''அவகிட்டே பேசியே இரண்டு மூணு நாளாச்சது மாமா. என்னைப் பார்த்தாலே அவளுக்குப் பிடிக்கலை. காலையிலே ஆபீஸுக்குக் கூட அவ என்னோட பைக்லே வர்றதில்லை...''

''ஏன் வரலைன்னு அவகிட்டே கேட்டீங்களா?''

''என்னத்த மாமா கேட்கிறது...? கேட்டா தாம் தூம்னு குதிக்கிறா. என் மன நிம்மதியே போயிட்டுது மாமா... நான்னு இல்ல இவளாலே வீட்டிலே யாருக்குமே நிம்மதியில்லாமப் போச்சு... அவ பண்றதெல்லாம் ரொம்ப இன்ஸல்ட்டிங்கா இருக்கு. கல்யாணமாகி இத்தனை வருஷத்துக்கப்புறம் என்னைச் சந்தேகிக்கிறதுன்னா, நான் என்ன பண்ணட்டும் மாமா? என்னை அவ சந்தேகப்படற மாதிரி நானும் அவளைச் சந்தேகப்பட்டா என்ன ஆகும்? அவளும் ஆபீஸ்லே பல ஆண்களோட தானே வேலை பார்க்கறா...?'' என்று கொதித்தான் கிருஷ்ணபாரதி.

''சரி, மாப்பிள்ளை... நீங்க ரொம்ப எமோஷனலா ஆகாதீங்க... உடம்புக்கு ஆகாது... கொஞ்சம் ஆறப் போட்டுப் பாப்போம். நானும் அவகிட்டே பேசறேன். அவ வந்தான்னா அப்பா போன் பண்ணினாங்கன்னு சொல்லுங்க. முள்ளிலே



''ஏங்க என்னைப் பத்தி நம்ம பையன்கிட்ட என்ன கதை அளக்கிறீங்க?''

''அவன்தான்டீ ஏதாவது 'பேய்'க் கதை சொல்லச் சொல்லி அடம்பிடிக்கிறான்!'' **-ஆர். பஞ்சவர்ணம்**

துணி மாட்டிக்கிட்ட மாதிரியான விஷயம் இது. ஜாக்கிரதையாகத்தான் கையாளணும்... நீங்க வருத்தப்படாதீங்க. போகப் போக எல்லாம் சரியாப் போயிடும்...''

''சரியானாச் சரி மாமா...''

(தொடரும்)

வேதனையான விஷயம் தானே?

மக்கள் டி.வி.யில் தினமும் மதியம் இரண்டு மணி முதல் மூன்று மணி வரை ஒளிபரப்பாகும் 'சந்தை' என்கிற பகுதி பலரின் வாழ்வில் வெளிச்சம் வரவழைத்துள்ளது என்றால் மிகையல்ல. நாம் செய்யும் பொருளை சந்தைப்படுத்தவும், பல பொருள்களை நாம் தெரிந்து கொள்ள பாலமாக இந்த நிகழ்ச்சி உள்ளது. பல ஆயிரம் செலவழித்து செய்ய வேண்டிய வேலையை மக்கள் தொலைக்காட்சி சில ரூபாய்கள் செலவில் செய்யும் அறிய சேவை என் போன்ற எளியோருக்கு வரப்பிரசாதமாக உள்ளது.

- சுஜாதா,
பழைய
பல்லாவரம்.

நீண்ட காலத்துக்குப் பின் குழந்தைகளுக்கான 'க்விஸ்' நிகழ்ச்சி 'விஜய் டி.வி.'யில். ஞாயிறு மதியம் இரண்டு மணிக்கு ஒளிப்பாகிறது. 'லிட்டில் ஜீனியஸ்' என்ற இந்த நிகழ்ச்சி நான் மிக விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சிகளுள் ஒன்று. முதல் சுற்றே 'திருக்குறள் சுற்று' தான். உலகளாவிய பல கேள்விகளுக்கு நொடியும் யோசிக்காமல் 'பட்பட்'டென்று அதிரடியாக பதில் வருகிறது குழந்தைகளிடம். ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு. ஆனாலும், பொது அறிவையே விரல் நுனியில் வைத்திருக்கும் பள்ளிப் பிள்ளைகள், திருக்குறளை அறியாமல் விழிப்பது வேதனை தரும் விஷயம்தானே?

எனினும், விஜய் டி.வி.யில் இந்த நிகழ்ச்சி நான் விரும்பிப் பார்க்கும் ஒன்று.

- உமா நடராஜ்,
நங்கநல்லூர்



டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சாய்ஸ்' என்று குறிப்பிட்டு எழுதுங்க.
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்

தேவர்களாக்கும் காதல்!

மனிதர்களைத் தேவர் களாக்கக் கூடிய சிறந்த உணர்ச்சிகளுள் தலை சிறந்தது காதல். வாழ்க்கையில் சிறிது காலமாவது அதை அனுபவித்தவர்கள் இனிய சுபாவமும், தாராள மனமும் கொண்டவர்களாயிருப்பார்கள். அந்த உணர்ச்சியை அனுபவித்து அறியாதவர்களோ அசூயையும் துவேஷம் பொங்கும் உள்ளத்தினராய் எப்போதும் கடுகடுப்பாகவே இருப்பார்கள்.

குடும்பங்களில் சில மாமியார்கள் தங்கள் நாட்டுப் பெண்களை அன்பும் ஆதரவுமாய் நடத்துவதையும், வேறு பலர் நாட்டுப் பெண்களின் வாழ்க்கையே நரகமாகும்படி கொடுமை செய்வதையும் காண்கிறோம். நன்கு ஆராய்ந்து பார்த்தால், அன்பாக நடத்தும் மாமியார் தன் வாழ்க்கையில் காதலை அனுபவித்தவளென்றும், கொடுமைக்கார மாமியார் அவ்வுணர்ச்சியை அறியாதவள் என்றும் தெரிய வரும்.

மனுஷ்யர்களுடைய சுபாவம் முழுவதுமே காதல் உணர்ச்சியினால் மாறுபடுகிறது. அது அவ்வளவு முக்கிய உணர்ச்சியா இருப்பதனால்தான் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் போன்ற இக்காலத்துப் பேரறிஞர்கள் சிலர், காதலுக்காக மற்ற சட்ட திட்டங்களையெல்லாம் உடைக்கலாமென்றும், கலியாண பந்தம் உள்பட சமூக சமய விதிகளையெல்லாம் புறக்கணிக்கலாம் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்போதும் இவ்வாறு சமூக சமய விதிகளைப் புறக்கணித்துச் செல்லும் காதலர்களைப் பற்றி நாம் சில சமயம் கேள்விப்படுகிறோம். அதன் பலனாக அவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆனால், சமூக விதிகள் சரியாக மாற்றி அமைக்கப்படும்போது காதல் அத்தகைய கஷ்டங்களுக்கு உள்ளாக அவசியம் நேராது. காதலில்லாத கலியாணங்களுக்குத்தான் அப்போது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்துவார்கள்.



ஆகவே, இலட்சிய விவாகத்துக்கு முதல் நிபந்தனை காதல். காதலில் ஒரே ஒரு குறை உண்டு. அதில் தேக தத்துவமும் கலந்திருக்கும் காரணத்தினால் அது நெடுங்காலம் நீடித்து நிற்பதில்லை. நாளடைவில் அதனுடைய வலிமை குன்றி வருகிறது. அதற்குப் பிறகும் மண வாழ்க்கை சந்தோஷமாய் நடக்க வேண்டுமானால் இன்னும் சில நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும்.

- கல்கி களஞ்சியம் நூலிலிருந்து

இந்த சீஸனின் 'Talk of the Town' படிப்புதான். படிப்பை வைத்துத்தான் இங்கே 'எதிர்காலம்' என்பது நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் தம் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டுமே என்ற கவலை ஒவ்வொரு தாய் தந்தைக்கும் இருக்கிறது.

அட்மிஷன் கிடைத்து விட்டால் போதுமா? காசு பணம் செலவு செய்து விட்டால் போதுமா?

பிள்ளைகள் படிக்க வேண்டுமே! எல்லா ஜோதிடர்களிடமும் தம் பிள்ளைகளின் ஜாதகத்தைக் காட்டி பெற்றோர் கேட்கும் ஒரே கேள்வி...

நல்லா படிப்பு வருமா? மார்க் வருமா? நல்ல வேலை கிடைக்குமா?

இதற்கு ஜோதிடம் என்ன சொல்கிறது? அதற்கு மொத்த ஜாதகத்தையும் அலசி ஆராய்ந்து பார்த்து, கிரகங்களின் சேர்க்கை, பார்வை, அந்த நேரத்தில் நடைபெறுகின்ற தசாபுக்தி, கோசார பலம் எல்லாவற்றையும் வைத்துத்தான் பலன் சொல்ல முடியும். அப்படித்தான் சொல்லவும் வேண்டும்.

சரி... நம்ம பிரச்னையே... **''படிப்பு வரலையே... என்ன படிச்சாலும் மண்டையில ஏறலையே... அதை மாத்த வழி இருக்கா...?''** என்பதுதான்.


கண்டிப்பாக உண்டு.

நான்காம் இடம்தான் கல்விக்கான இடம். அந்த இடத்தில் ராகு, கேது, சனி போன்ற பாபக் கிரகங்கள் இருக்கிறதா என்று பாருங்கள். இருந்தால் அந்தக் கிரகங்கள் சம்பந்தப்பட்ட க்ஷேத்திரங்களில் உள்ள கோயில் சென்று நெய் தீபம் ஏற்றி அர்ச்சனைச் செய்யுங்கள்.

என்ன தசை நடந்துக் கொண்டு இருக்கிறதோ அந்தக் கிரகத்திற்கு ப்ரீதி பரிகாரம் செய்யுங்கள்.

''சார்... எங்ககிட்டே ஜாதகமே கிடையாது. நாங்க என்ன பண்றது...?'' என்றால் கவலையே வேண்டாம். பக்கத்தில் இருக்கும் விநாயகர் கோயிலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ராகு காலத்தில் இரண்டு நெய் தீபம் ஏற்றி வழிபடுங்கள். அருகம்புல் சாத்துங்கள், அது போதும்.

3ம் இடத்தில் 'சனி' இருந்தால் படிக்கும்போது பல தொல்லைகள், தடங்கல்கள் வரலாம். அதற்கு 'சனி ப்ரீதி' செய்யுங்கள். பெரிதாக எதுவும் செய்ய முடியாமற்போனாலும் சனிக்கிழமைகளில்



காகத்துக்கு ஒரு பிடி அன்னம் வைத்து வாருங்கள்.

கல்வியை அருளும் தெய்வங்களான சரஸ்வதி, ஹயக்ரீவர் போன்றவர்களுக்கான ஸ்லோகங்களை அனுதினமும் சொல்லலாம்.

''ஓம் ஐம் ஸரஸ்வத்யை நமஹ'' என்பது பீஜத்துடன் கூடிய ஸரஸ்வதி மந்திரம்.

ஓம் வாக்தேவ்யை ச வித்மஹே

விரிஞ்சி பத்நீயை ச தீமஹி
தந்நோ வாணி ப்ரசோதயாத் || - இது ஸரஸ்வதி காயத்ரி.

ஞானானந்தமயம் தேவம்
நிர்மல ஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம்
ஹயக்ரீவ முபாஸ்மஹே|| -இது ஹயக்ரீவர்
ஸ்தோத்திரம்.

பரிகாரம் ஸ்பெஷல்



படிக்காதீங்க!

ஓம் நமோ ஆதித்யாய புத்திர்பலம் தேஹிமேஸதா... என்று நாம் அனுதினமும் காணும் கண்கண்ட கடவுளான சூரியனையும் வழிபடலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக ''குருவே சரணம்'' என்று சொல்லி குருவை வழிபடுங்கள் அல்லது

ஓம் குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு குருர்தேவா

மஹேச்வரா: குரு சாக்ஷாத் பரம்ப்ரம்மா தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ|| என்றும் சொல்லி வழிபடலாம்.



★ K.V. மஹேஸ்வரன்

மாணவர்கள் கவனத்திற்கு:

''தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்'' என்ற திருக்குறளை மனதில் வையுங்கள்.

'உஷத்காலம்' என்று சொல்லப்படுகிற விடியற்காலையில் தினமும் ஒரு மணி நேரமாவது கிழக்கு நோக்கி அமர்ந்து படியுங்கள்.

படுக்கையில் அமர்ந்து கொண்டோ படுத்துக் கொண்டோ படிப்பதை கண்டிப்பாகச் செய்யாதீர்கள்.

'அம்மா அப்பா'விடமும் 'குரு'விடமும் 'திட்டு' 'சாபம்' வாங்காமல் பார்த்து நடந்து கொள்ளுங்கள். இதிகாசங்களும் புராணங்களும் படித்தவர்களுக்குத் தெரியும். நிறைய பேரின் வாழ்க்கை சாபத்தினால்தான் அழிந்திருக்கிறது.

பெரியவர்களுக்கு மரியாதை கொடுத்தால் அவர்களுடைய ஆசியும் வாழ்த்துமே உங்களைக் காப்பாற்றும். வாழ்வை வளமாக்கும்.

பெரியவர்களின் கவனத்திற்கு:

நீங்களும் பிள்ளைகளை, 'நீ உருப்பட மாட்டே... நீயெல்லாம் எங்கே படிச்சு எப்படி பாஸ் பண்ணப் போறே...' போன்ற நெகடிவ் வார்த்தைகளையும், வசவுகளையும் படிக்கிற பிள்ளைகள் மீது அள்ளி வீசாதீர்கள். எப்போதுமே நல்ல வார்த்தைகளை விட கெட்ட வார்த்தைகள் அதிக பலத்தோடு வேலை செய்து அடுத்தவர் வாழ்க்கையைக் கெடுத்து விடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

K.V. மஹேஸ்வரன்

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

சுவரில் குழந்தை
கிறுக்கட்டும் விடுங்கள்
ஐந்தில் வரையாதது
ஐம்பதில் வரையாது

- தஞ்சை தாமு

பேருந்து ஜன்னலில்
வேடிக்கைப் பார்த்தவாறே
வருகிறான்.
தன் வயதைக் குறைத்து
பொய் சொல்லி
அரை டிக்கெட் வாங்கிய
அப்பாவின் முகத்தைப்
பார்க்கப் பிடிக்காமல்.

- சிக்ஸ் முகம்

வரம்பெற்ற
சந்தோஷம்...
வருகைப் பதிவேட்டில்
உன் பெயருக்கு
அடுத்து...
என் பெயர்!

-சிவபாரதி

அம்மா குருவி!

''குருவிக் குஞ்சு
வரைஞ்சுக் கொடும்மா!''
கெஞ்சியது குழந்தை.
''குருவியே வரையத் தெரியாது
குஞ்சை எப்படி வரைவது...?''
விழி பிதுங்கிய அம்மா,
காகிதத்தில் சில முட்டைகளை
வரைந்து கொடுத்து...
''நாளை பொரித்துவிடும்...!''
என்றாள் விளையாட்டாக.
கூடு போல காகிதத்தை
கையில் ஏந்திய குழந்தை...
நெஞ்சோடு வைத்துக்கொண்டு
யாரையும் நெருங்கவிடாமல்...
அடைகாத்துத் திரிகிறது...!
ஒரு தாய்ப் பறவையாக!

- ப.உமா மகேஸ்வரி




கவிதை கஃபே

பிசிபிசியாய் இழைந்துபோகும் காற்றில் முகம்கொடுத்து
ஹெட்போனில் காது பொருத்தி
தாழ்தளப் பேருந்தின் தூரத்து மூலையில்
இருள்குடை விரித்த சாலையைப் பார்த்துவரும் பெண்ணை
நீங்கள் அறிந்திருக்கலாம்.
குழந்தைகள் தூங்காமல் காத்திருக்கலாம்
மாலை பெய்த சிறுமழையில்
உலர் துணிகள் நனைந்துபோயிருக்கலாம்
வாங்கப்படாத ரெஜிஸ்டர் தபால்கள்
கதவோரம் கேஸ் சிலிண்டர்கள்
விடாது அழைத்திருக்கக்கூடிய நீண்டகால தோழி
பிதுங்கி வழியும் பழைய பேப்பர்
எல்லாம் அவளுக்காகக் காத்திருக்கலாம்.
பாதியில் நிற்கும் கணினி நிரல்கள்
செய்ய காத்திருக்கும் உதவிகள்
அழைப்புக்கு ஏங்கியிருக்கும் அம்மா
எடுத்துச் செல்லவேண்டிய காகிதங்கள்
எல்லாமும் ஞாபகம் வரலாம்.
காதுக்குள் முயங்கிய இசையும் உடல்சோர்வும் பிணைய
சட்டெனத் தன் இருப்பு மறந்து
கணநேரம் துயில் மறைக்க
தூரத்து நட்சத்திரங்களும் நானும்
அவள் கவலைகளை வாங்கிக் கொண்டோம்.
சரியான பேருந்து நிறுத்தத்தில் அவள் இறங்குவது
இனி எங்கள் பொறுப்பு.

- துளசி

பின்னிரவில் வீடு திரும்பும் பெண்!

ஜோதிபாசு



ஜனவரி 19 அன்று மறைந்த முன்னாள் மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசுவின் உடல் கொல்கத்தாவில் உள்ள மருத்துவ உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தினரிடம், மருத்துவ ஆராய்ச்சிக்காகத் தானமாக அளிக்கப்பட்டது. இறந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும், அவரது உடல் மருத்துவ ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தாமல் அப்படியே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

எண்பது வயதைத் தாண்டிய பின்னரும், ஜோதி பாசுவின் மூளை அபாரமாக செயல்பட்டு வந்ததால், பெங்களூரு தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் கழகம் (நிமான்ஸ்) அவரது மூளையை ஆராய்ச்சி செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. எனவே, பாசுவின் மூளையை மட்டும் ஆராய்ச்சி செய்வதற்காகக் கொடுக்கும்படி கொல்கத்தா மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்திடம் கோரியது. கொல்கத்தாவின் மருத்துவ உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கழகத்தின் பேராசிரியர் அசிஷ்தத்தா இதனை ஏற்றுக் கொள்ளாமல்,

''ஜோதிபாசுவின் உடலிலிருந்து எந்த பாகத்தையும் தனியாக எடுத்து யாருக்கும் வழங்க முடியாது. எங்கள் மையத்திலேயே நடக்கும் ஆராய்ச்சிகளுக்கு அவரது உடலைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்திருக்கிறோம்''

என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

ஜோதிபாசு விரும்பியபடி மருத்துவ ஆராய்ச்சிக்காக அவர் உடலைப் பயன்படுத்தாமல் அப்படியே வைத்திருப்பது சரியா? என்ற விவாதம் இப்போது மேற்கு வங்காளத்து மக்கள் மனத்தில் எழுந்துள்ளது.



● டாக்டர் சுதா சேஷய்யன்

ஒரு உடலை இப்படிப் பாதுகாத்து வைப்பது சரியா? இப்படி எவ்வளவு காலம் ஒரு உடலை வைத்திருக்கலாம்? என்று சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் அனாடமி புரொஃபசர் டாக்டர் சுதா சேஷய்யனைக் கேட்டோம். அவர் அளித்த விளக்கம்:

> 'இங்கே பாடம் செய்யப்பட்டவர் நமக்கு பாடம் கற்றுக்கொடுக்கிறார்'

''ஒருவரது உடலை அவர் இறந்து ஆறு மாதங்கள் கழித்துத்தான் பயன்படுத்த வேண்டும் என்பது விதி. தானமாகத் தரப்படும் உடல்களைப் பாடம் செய்வது முதல் கட்டம். இதை 'எம்பாம்' செய்வது என்பார்கள். சுமார் ஐந்தரை

பாடம்!

லிட்டர் அல்லது ஆறு லிட்டர் கொள்ளளவு உள்ள மனித உடலில் உள்ள ரத்தக் குழாய்களில், அதே அளவுக்கு ஃபார்மாலின், ஐசோ புரொஃபைல் ஆல்கஹால், கிளிசரின், தைமால், சோடியம் குளோரைடு என்று தேவைக்கேற்ற அளவில் சில திரவங்களை உள்ளே செலுத்துவார்கள். உள்ளே சென்ற திரவக் கலவை இறந்த உடலின் திசுக்களைப் பக்குவப்படுத்தும்.

தானமாகப் பெறப்பட்ட உடல்களை எம்பாம் செய்த பிறகு, ரசாயன திரவத் தொட்டியிலோ, குளிர் சாதனக் கிடங்கிலோ வைத்துப் பாதுகாப்பார்கள். அது மட்டுமில்லாமல், எம்பாம் செய்த உடலிலிருந்து முழுமையாக முடியை மழித்து, அந்த உடலைப் பார்த்து அது யாருடைய உடல் என அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி செய்துவிடுவார்கள். வரிசை எண்தான் ஒரே அடையாளம். இப்படி ஆறு மாத காலம் உடலைப் பாதுகாத்த பிறகே, மருத்துவ மாணவர்கள் உடற்கூறு பாடம் கற்க அந்த உடல் பயன்படுத்தப்படும். ஏனெனில், சம்பந்தப்பட்டவரது அடையாளம் முற்றிலுமாக எல்லோருடைய நினைவிலிருந்தும் மறைந்த பிறகு, இது இன்னாரது உடல் என்று அடையாளம் தெரியாத நிலையில்தான் அந்த உடலைக் கூறு போட வேண்டும்.

மருத்துவ உலகைப் பொறுத்தவரை, உடலைக் கூறுபோடும் மேஜை உள்ள அறை மிகவும் புனிதமானது. அறைக்குள்ளே யாரும் வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தக் கூடாது; மாணவிகள் பூ வைத்துக் கொள்ளக் கூடாது என்பது மரபு. இன்னும் சொல்லப் போனால், அந்த அறையின் நுழைவாயிலில், 'இங்கே பாடம் செய்யப்பட்டவர் நமக்கு பாடம் கற்றுக்கொடுக்கிறார்' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கும்.''

– எஸ். சந்திரமௌலி

ஆயிரத்தில் ஒருவர்!

ராஜ ராஜ சோழனின் கலைத்தொண்டுக்கு ஒரு சமர்ப்பணம்

தமிழக முதல்வரின் 'ஒருதலைக் காதல்' என்ற கவிதை நடைக் காவியத்தை நாட்டிய நாடகமாக செம்மொழி மாநாட்டில் வெற்றிகரமாக நடத்தி முடித்தவர் பத்மா சுப்ரமணியம். இதற்காகவே 41 ராகங்களில் பாடல்களையும் நடனத்தையும் ஆறு மாதம் உழைத்து உருவாக்கி அரங்கேற்றினார்! சப்தமின்றி அடுத்த பெரும்பணிக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். தஞ்சைப் பெரிய கோவிலில் ஆயிரம் நடனக் கலைஞர்களை ஒரே நேரத்தில் ஒன்று திரட்டி, செப்டெம்பர் 25-ம் தேதி பத்மா சுப்ரமணியம் நடத்தவிருக்கும் நிகழ்ச்சி பற்றி விரிவாய் அறிய அவரின் இல்லம் தேடிச் சென்றபோது...

பசுமையையும் நிழலையும் குழைத்து இயற்கை கட்டிய இல்லம் போலிருந்தது அடையாறில் அந்தத் தனிவீடு. முன் தோட்டத்தில் ஒரு நந்தி சிற்பம்! கும்பகோணம் நெடுஞ்சாலையில் பழுதாகி நின்றிருந்த லாரியின் டயருக்குப் பதிலாக முட்டுக் கொடுத்து வைத்திருந்ததாம் அந்த நந்தி!



பத்மா சுப்ரமணியம்

மீட்டெடுத்து இங்கு வைத்திருக்க, அச்சிலை நம்மை வரவேற்கிறது. செட்டிநாட்டு பாணி வாசற் கதவைத் தாண்டி ஓரடி வைத்ததும் சிலிர்க்க வைக்கிறார் வீணையுடன் இருக்கும் காஞ்சி மாமுனி (போட்டோவில்). அறை முழுதும் தஞ்சாவூர் பாணி சித்திரங்கள். அந்த வரவேற்பறையில் பத்மா சுப்ரமணியத்தை சந்தித்து உரையாடினோம். மேடையில் நவரஸங்களுக்கு மாறுபவர், நேரில் சன்னமான குரலில் தேர்ந்தெடுத்த வார்த்தைகளில் விளக்கினார்.

''தஞ்சைப் பெரிய கோவிலை நிர்மாணித்ததன் ஆயிரமாவது ஆண்டைக் குறிக்கும் வகையில், ஆயிரம் நடனக் கலைஞர்கள் ஒன்று கூடி



தேவவிரதன்

ராஜராஜசோழனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வாக வடிவமைக்கப்பட்டுள்ளதாம் இந்த நிகழ்ச்சி. சரித்திரப் புகழ் வாய்ந்த நினைவுச் சின்னமாகக் கருதப்படும் தஞ்சைப் பெரியகோவிலில் தமிழகம் மட்டுமின்றி மும்பை, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை என்று எல்லா நாட்டு நடனக் கலைஞர்களும் ஒன்றிணைகிறார்கள். அகில இந்திய பரத நாட்டியக் கலைஞர்கள் சங்கமும் பிரகன் நாட்டியாஞ்சலி ஃபவுன்டேஷனும் இணைந்து இந்த இமாலய சிறப்பை நடனத்தால் செதுக்கவிருக்கிறார்கள். தமிழனின், தமிழ்க் கலையின் பெருமை உணர, உணர்த்த. மொத்தம் சுமார் நாற்பது நிமிடம் மட்டுமே இயல்பான சூரியனின் மாலை வெளிச்சத்தில் நடந்தேற இருக்கிறது இவ்விழா. ஒன்றுகூடும் அந்த ஆயிரம் பேரில் பத்மா சுப்ரமணியமும் ஒருவர். உலக சாதனை போன்ற இந்தப் பிரமாண்ட நாட்டியத்துக்கான ஒத்திகைக்கு, நாட்டியக் குறிப்புகள் குறுந்தகடில் (சிடி) பதிவாகி அனுப்பப் பட்டுள்ளன. அதைப் பார்த்து பயிற்சி எடுத்து, செப்டெம்பர் 25ம் தேதி பெரிய கோவிலின் நந்தி மண்டபத்தில் நந்தியைச் சுற்றி நிகழ்த்தப் போகிறார்களாம்.

பத்மா சுப்ரமணியம் வடிவமைக்கும் இந்த நாட்டியத்துக்கு யாருடைய பாடல்? ராஜராஜசோழனின் குரு கருவூர் தேவரால் இயற்றப்பட்ட பாடலாம்! பேசிக் கொண்டிருக்கும்போதே... 'மோகினியாட்டம்' புகழ் கோபிகா வர்மாவிடமிருந்து போன் வருகிறது. தன்னுடன் வரும் பதினைந்து நடன கலைஞர்களின் பயிற்சி ஒத்திகை சரியாக முடிந்திருப்பதாகச் சொல்கிறார்.

''நிகழ்ச்சி பற்றி எப்படி உணர்கிறீர்கள்...?'' என்று கேட்டால், ''ராஜராஜசோழனின் கலைத் தொண்டுக்கு ஒரு சமர்ப்பணம்''- என்கிறார் சுருக்கமாக.




ஆக்டோபஸ் உடன்பிறப்பே... கோபாலபுரம் வீட்டைக் கொடுத்துட்டேன். மக்கள் ஸ்டாலினுக்குக் 'கோட்டை'யைக் கொடுப்பாங்களா..?
அடுத்த தேர்தலுக்குப் பிறகு அழிஞ்சுடும்னு அழகிரி சொல்றாரே... அழிஞ்சிடுமோ? ஒண்ணும் ஆகாதில்லே...
எல்லாரும் சேர்ந்து எங்களுக்கு நல்வாழ்க்கை கொடுப்பாங்களா?
ஓவியம்: பிள்ளை
கருத்து: மகிமைராஜன்


முதல்வர் நாற்காலியிலே உட்காரத்தான் முடியல. பேசாம 'தமிழ்நாடு முதல்வர்'னு ஒரு நாற்காலியிலே எழுதி வெச்சு... அதுல உட்கார்ந்துடலாமா?
(??)
காங்கிரஸில் கோஷ்டி பூசலே இல்லைன்னு சொல்றாங்களே ஆக்டோபஸ், மெய்யாலுமே இல்லையா?
லகம்
டாபஸ்
சாமி!
ஆளை விடுப்பா... எனக்கு இருக்கற நல்லபேரை நான் ஏன் கெடுத்துக்கணும்?



தஞ்சாவூர்க் கவிராயர்



தபால்

உங்களுக்கு தபால் ரயில் தெரியுமா?

தபால் கொண்டுபோகிற ரயில் வண்டியைச் சொல்லவில்லை.

இது ஒரு விளையாட்டு. அப்பா கற்றுக்கொடுத்த விளையாட்டு.

அப்பா, அந்தக் காலத்தில் தனக்கு வரும் தபால் கார்டுகளைச் சேகரித்து வைப்பார்.

அப்பா, கிராமத்துப் பள்ளிக்கூட ஆசிரியர். வாடகை வீடுதான். ஆனால் பழைய காலத்து வீடு. நீளமான திண்ணை.

தபால் கார்டுகளை நெடுக்குவாக்கில் மடித்து ரயில் பெட்டிகள் போல திண்ணையில் வரிசையாக நிற்க வைப்பார்.

ரயில் வண்டி மாதிரி வளைந்து வளைந்து நிற்கும் நீளமான கார்டுகளின் வரிசை.

பிறகு கடைசி கார்டைத் தள்ளி விடுவார்.

தொப்தொப்பென்று ஒவ்வொரு கார்டும் முன்னால் நிற்கும் கார்டு மீது சாய்ந்து சாய்ந்து விழுந்தபடி ரயில் போவது போல இருக்கும்.

அப்பா இருந்தால்தான் இந்த விளையாட்டு ஆட முடியும். எங்களுக்கு தெரியாமல் கார்டுகளை ஒளித்து வைத்து விடுவார் அப்பா.

யாருக்குக் கடிதம் எழுதினாலும் அப்பா தபால்கார்டில்தான் எழுதுவார்.

பாட்டிக்கு அடிக்கடி எழுதுவார்.

அம்மா உடல்நிலை. நான் மூன்றாம் வகுப்பு பாஸ் ஆனது. நல்ல புளியாகக் கிடைத்தால் வாங்கி வரவும். அரிவாள்மனை இங்கே கிடைக்கவில்லை. குழந்தைக்கு மாரியம்மன் கோயிலில் மொட்டை போட வேண்டும்.

இப்படிப் பாட்டிக்குச் சொல்ல அனேக விஷயங்கள் அப்பாவிடம் இருந்தன.

பாட்டி வீட்டு முகவரியில் 'தண்ணீர்த்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ.10,000 முதல் பரிசு பெறும் சிறுகதை

ரயில்

தொட்டி சமீபம்' என்று எழுதியிருப்பார் அப்பா.

இப்படி எல்லா முகவரிகளிலும் ஒரு கூடுதல் அலங்கரிப்பு செய்யாமல் விடமாட்டார்.

பாட்டிக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அப்பாவிடமிருந்து கார்டு வந்துவிட்டால் பாட்டி கைவேலையைப் போட்டுவிட்டு ரேவதி அக்காவிடம் ஓடும்.

ரேவதி அக்கா வீடு எதிர்வீடுதான். ரேவதி அக்காவுக்கு ரொம்ப வருஷங்களாகக் கல்யாணமே ஆகவில்லை.

எப்போது பார்த்தாலும் பாசி படிந்த தண்ணீர்த் தொட்டியைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கும்.

அப்பாவின் கடிதங்களைப் பாட்டியிடம் படித்துக் காண்பிக்கும்.

நான் கோடை லீவில் பாட்டி வீட்டில்தான் இருப்பேன்.

அப்பா எழுதிய கடிதங்களை ரேவதி அக்கா ஏதோ பரிசு மாதிரி பாதுகாத்து வைத்துக் கொள்ளும். பாட்டியும் திரும்பக் கேட்காது.

''உங்க அப்பா எழுதற கடிதங்களைப் படிச்சுதாண்டா நானே தமிழ் ஒழுங்கா எழுதறேன். இலக்கண சுத்தமா இப்படி எழுத யாரால் முடியும்?''

பாட்டிக்கு ரேவதி அக்கா படித்துச் சொன்னால்தான் திருப்தி.

பாட்டி சொல்லச் சொல்ல ரேவதி அக்காவின் பதிலும் ஒரு கார்டில் வந்து சேரும்.

ரேவதி அக்கா கையெழுத்தும் தபால் ரயிலில் ஓடும். அப்போதெல்லாம் ஓடும் ரயிலின் ஜன்ன

வில் தெரிந்தவர் முகத்தை பார்ப்பது போல் ரேவதி அக்கா முகம் தெரியும்.

எல்லோர் வீட்டிலும் தபால் ரயில் ஓடுகிறதா என்று தெரியவில்லை.

ஒவ்வொரு கார்டிலும் எவ்வளவோ கவலைகள். கஷ்டங்கள். சந்தோஷங்கள். சத்தம் காட்டாமல் தடக்தடக்கென்று விழுந்துகொண்டே போகும் தபால் ரயில்.

சில கார்டுகள் தபால் ரயிலில் சேராது விழுந்து விடும். இதற்கும் அதில் எழுதியிருக்கும் விஷயத் துக்கும் சம்பந்தம் இருக் கும்போல. அந்தக் கார்டு கள் மட்டும் நிற்க முடியா மல் தள்ளாடுவானேன்?

எந்தப் பிரச்னை ஆனாலும் அதைத் தீர்த்து வைக்க அப்பாவுக்கு ஒரு தபால்கார்டு போதும்.

ஒரு தடவை அப்பா விடம் கோபித்துக் கொண்டு அம்மா 'தண் ணீர்த் தொட்டி' சமீபம் உள்ள தன் அம்மா வீட்டுக்குப் போய்விட்டது.

அப்பா ஒரு கார்டு போட்டார்

அம்மா உடனே வந்து விட்டது.

வந்ததும் வராததுமாக அம்மா எங்கள் வீட்டுக்குப் பின்புறம் இருந்த மாட்டுத் தொழுவத்துக்குச் சென்றது.

''எங்கே போகிறாய்?'' - என்று கேட்டார் அப்பா.

''வீட்டுக்காரங்க மாடு கன்னு போட் டதா எழுதியிருந்தீங்கள்ல. அதைப் பாக் கத்தான்! பின்னே? உங்களையா பாக்க வந்தேன்?''



"எந்தப் பிரச்னை ஆனாலும் அதைத் தீர்த்து வைக்க அப்பாவுக்கு ஒரு தபால்கார்டு போதும்."

அப்பா, நான், அம்மா மூன்று பேரும் கன்று போட்டிருந்த தாய்ப்பசுவைப் போய்ப் பார்த்தோம்.

பசு, கன்றுக்குட்டியின் உடம்பை நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

அம்மாவைப் பார்த்த பசுவின் கண்கள் பனிச்சிட்டன. புரிந்து கொண்டதற்கு அடையாளமாக ஒரு தலையாட்டல்.

அம்மா, அதன் நெறியைத் தடவி விட்டு கழுத்தை வருடிவிட்டது.

அங்கே பசு, அம்மா, மனுஷாள், மிருகம் என்ற பேதம் எல்லாம் இல்லை.

இரண்டு தாய்மார்கள் உறவாடுவது போலிருந்தது.

அம்மா, திரட்டுப்பால் செய்தது. அம்மாவின் பிரியத் தைத் திரட்டுப்பாலாக்கித் தின்பதுபோல் இருந்தது.

தங்கச்சிப் பாப்பா அழு தது. அப்பா தபால் ரயிலை ஓடவிட்டார். பாப்பா அழுவதை நிறுத்திச் சிரித் தது. ரொம்ப நாள் கழித்து நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித் தோம்.

ஒரு கார்டுதான் இதைச் சாதித்தது.

கார்டின் பின் குறிப்பாக அப்பா ஒருவரி சேர்ப்பார் பாருங்கள். அதுதான் கார்டின் ஜீவன்.

ஈரமான பி.கு.க்கள்.

- சுசீலா (எங்கள் வீட்டு கோழி) குஞ்சு பொரித்திருக்கிறது.

- வாய்க்காலில் தண்ணீர் வந்துவிட்டது.

- வீட்டுக்குப் பின்னால் கிதாரிகள் கிடை போட்டிருக்கிறார்கள்.

அப்பா ஒரே ஒரு கார்டை மட்டும் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

பழுப்பேறிய பழைய கார்டு.

அதன் வாசகங்கள் எனக்கு மனப் பாடம்.

''அன்புள்ள ரங்கராஜனுக்கு

நேற்று தஞ்சாவூர் திலகர் திடலில் மகாத்மா காந்திக்கு வரவேற்பு கொடுத்தோம்.

நான் கொடுத்த கதர்ச் சட்டையை வாங்கிக் கொண்டார்.

அன்று மௌனவிரதம்.

ஆனால் எல்லோரையும் பார்த்து புன்னகை செய்தார்.

எங்களுக்குப் பெரிய பிரசங்கம் கேட்ட திருப்தி உண்டாயிற்று.

எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்துவிடு. வார்தா போய் காந்தி ஆசிரமத்தில் சேர்ந்து விடுவோம்.

உன் நண்பன்

சிவப்பிரகாசம்

ஒரு நாள்.

ஞாயிற்றுக் கிழமை.

நல்ல வெயில்.

கதர்க் குல்லாய். வேட்டி சட்டையுடன் ஒரு பெரியவர் எங்கள் வீட்டுக்கு முன்னால் மாட்டு வண்டியில் வந்து இறங்கினார்.

''ரங்கராஜன்!'' என்று ஒரு கணீர்க் குரல்.

''சிவப்பிரகாசம்!''

அப்பா, வேகமாக வந்தார். இருவரும் தழுவிக் கொண்டார்கள்.

''என்னை மறந்து விட்டாயா ரங்கா?''

அப்பா, எதுவுமே பேசாமல் உள்ளே போய் சிவப்பிரகாசம் எழுதிய கார்டை கொண்டு வந்து காண்பித்தார்.

''ம். நான் எழுதியது தப்புத்தான். இருவரும் இடத்தையே காந்தி ஆசிரமமாக மாற்றிக் கொண்டுவிட வேண்டும் உன்னைப் போல!''

இருவரும் இருட்டியதுகூட தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சு அவ்வளவாகப் புரியவில்லை. ஆனால் காந்தி, தேசபக்தி, பாரதியார், கோகலே போன்ற சொற்கள் அதில் வந்து விழுந்தன.

நான் அந்தத் தபால் கார்டையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.



''**வெ**றும் நடிப்பு மட்டும் போதாதுன்னு எடிட்டிங், கேமரா, சவுண்ட் ரிக்கார்டும் படிக்கிறேன். சினி ஃபீல்டில் என்னைக் காப்பாத்தறது என்னோட கோபம்தான்.''

- கவர்ச்சி நடிகை அனுராதாவின் மகள் அபிநயஸ்ரீ

''உனக்கு தபால் ரயில் செய்ய இதைத் தர மாட்டேன்'' என்றார் அப்பா சிரித்தபடி.

நான் யோசித்துச் சொன்னேன்: ''இது என்ஜினாக இருக்கட்டும்ப்பா!''

சிவப்பிரகாசம் கண்களைக் கூசுகிற மாதிரி வைத்துக் கொண்டு சிரித்தார்.

அப்பா, என்னை வாரி அணைத்துக் கொண்டார்.

தபால் ரயில் ஓடி மறைந்தேவிட்டது.

அப்பாவும் போய்விட்டார்.

நாற்பது வயதில் பல சோதனைகளைச் சந்தித்தாகிவிட்டது.

கல்யாணமாகி பத்து வருஷங்கள் கழிந்துவிட்டன. குழந்தைப்பேறு உண்டாகவில்லை. தபால் ரயில் விளையாடுவதற்குக் குழந்தை இல்லையே என்பது தான் கஷ்டமாக இருந்தது.

மனைவியிடம் என்னவோ கோளாறு.

போனவாரம் பெரிய டாக்டரிடம் மனைவியை அழைத்துப் போனேன்.

ஏகப்பட்ட பரிசோதனைகள். டெஸ்ட் ரிசல்ட் பேப்பர்களைப் புரட்டிவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார் டாக்டர்.

''ஐம்'ஸாரி. உங்கள் மனைவிக்கு குழந்தை உண்டாவது கஷ்டம். கான் ஜெனிடல் டிஸார்டர். பிறப்பிலேயே பிரச்னை இருக்கு. ஏதாவது ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கோங்க...''

மெல்லப் புன்னகைத்தார்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த என் மனைவியின் கையை ஆதுரத்துடன் பிடித்துக் கொண்டேன். அவள் விரல்கள் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தன.

உடலும் மனமும் சோர்ந்து போனது. அலுவலகம் போகப் பிடிக்காமல் லீவு போட்டுவிட்டு, வீட்டிலேயே உட்கார்ந்து விட்டேன்.

எதுவுமே நடக்காத மாதிரி என் மனைவி மட்டும் அலுவலகம் போய்வந்து கொண்டிருந்தாள். வீட்டில் எல்லாம் மந்திர கதியில் நடந்து கொண்டிருந்தது.

''ஏங்க உங்கம்மா மாதிரி கடைத் தெருவுல ஒரு பொம்பளையைப் பார்த்தேன்...''

''பார்த்து என்ன பண்ணினே...?''

''அரைமணி நேரம் சண்டை போட்டுட்டு வந்தேன்...''

- ஜே.தனலட்சுமி



''**சா**ர், போஸ்ட்!'' - தபால்காரர்.

ஒரு சிறு அஞ்சல் அட்டை.

''வாழை - ஆதரவற்றக் குழந்தைகள் காப்பகத்துக்கு நீங்கள் அனுப்பி வைத்த அன்பளிப்பு ஆயிரம் ரூபாய் கிடைத்தது. வரும் ஞாயிற்றுக்கிழமை குழந்தைகளுடன் சிற்றுண்டி அருந்த வருமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம். நன்றி!''

நான் எப்போது ஆயிரம் ரூபாய் அனுப்பினேன்?

குழம்பினேன்!

காலிங்பெல் அழைத்தது.

கதவைத் திறந்தேன். என் மனைவி!

சிரித்தாள்.

''வர்ற ஞாயிற்றுக்கிழமை உங்களை ஓர் இடத்துக்குக் கூட்டிப் போகிறேன்!''

''தெரியுமே!'' - கார்டைக் காட்டினேன்.

''இந்தக் கார்டைப் பார்த்ததும் சின்ன வயசில் நீங்க தபால் ரயில் விளையாட்டுப் பத்திச் சொல்வீங்களே அது ஞாபகம் வந்துவிட்டது!''

''ஆமாம்!'' என்னை உற்சாகம் தொற்றிக் கொண்டது.

ஓடிப்போய் கார்டுகளை சேகரித்துக் கொண்டு வந்தேன்.

அவற்றை நெடுக்குவாக்கில் மடித்து வரிசையாக நிற்க வைத்தேன்.

''இப்பத் தள்ளி விடு''

என் மனைவி முதல் கார்டைத் தள்ளிவிட்டாள்.

ரயில் ஒன்றின்மீது ஒன்று சாய்ந்து விழுந்தபடி போயிற்று.

''ஹையா! ஹையா!''

குழந்தை போலக் குதித்துச் சிரித்தாள் என் மனைவி.

குழந்தையேதான்!

புடைவை கட்டிய குழந்தை!

எனக்குக் கிடைத்த குழந்தை!

என் கண் மங்கலாயிற்று.

ரயில் வளைந்து வளைந்து போய்க் கொண்டிருந்தது. ●

சென்டிமென்ட்!



என் குடும்பத்தோட சென்டிமென்ட் தான் என் சென்டிமென்ட்டும். அது என்னன்னா, வெளில எங்கயாவது கிளம்பி போகும்போது, கட்டாயமா மூணு பேரா போகக் கூடாது. அதே மாதிரி என்ன ஆனாலும் சரி, ராகு காலத்துலே கிளம்பக் கூடாது. அது ஷாப்பிங்கா இருந்தாலும் சரி, சினிமாவாக இருந்தாலும் சரி, ராகு காலம் ஸ்டார்ட் ஆயிடுச்சுன்னு தெரிஞ்சா நாங்க புது விஷயத்தை ஸ்டார்ட் செய்யறதை நிறுத்திடுவோம். அதையும் மீறி எங்கயாவது கிளம்பினா, டேஞ்சர் மேல டேஞ்சர் கட்டாயம் வரும். எதுக்கு ரிஸ்க் எடுக்கறதுன்னு இந்த ராகு கால டைம்ல எக்ஸ்ட்ரா கண்ணு வெச்சுப்பேன்.

- அபிநயா

வாசகர்களே!
உங்களோட சென்டிமெண்ட்!
குடும்ப நம்பிக்கைகள் என்ன?
எழுதுங்க...
kalki@kalkiweekly.com -க்கும்
அனுப்புங்க.

நான் ரொம்ப நாளா கடைப்பிடிச்சிட்டு இருக்குற ஒரே சென்டிமெண்ட் பேனா சென்டிமெண்ட்தான். ஒவ்வொரு வருஷமும் ஜனவரி முதல் தேதி அன்னிக்குப் புதுசா பேனா வாங்கி அதை கோவில்ல சாமி முன்னாடி வெக்கச் சொல்லி வீட்டுக்கு எடுத்துக்கிட்டு வந்துடுவேன். வருஷம் பூரா நடக்கற எல்லா டெஸ்ட் மற்றும் பரிட்சைகளுக்கும் அந்தப் பேனாவால மட்டும் தான் எழுதுவேன். அது என்னவோ தெரியல, என்ன மாயமோ புரியல ஆனா கரெக்டா அந்த பேனாவால எழுதற எல்லா எக்ஸாம்லியுமே சூப்பர் மார்க் கிடைச்சிடும். அந்த பேனால ரீபிள் தீர்ந்தாலும் திருப்பி திருப்பி அதை ரீஃபில் பண்ணிக்கிட்டே இருப்பேன். எப்பவும் என் பவுச்ல அந்த பேனா இருக்கும்.

- ஹரிப்ரியா



காதலில் தோல்வியுற்ற ஒரு இளைஞன் என்ன செய்வான்? விரக்தியில் தாடி வளர்ப்பது, சோகத்தில் கவிதை எழுதுவது போன்றவற்றில் இருந்து மாறுபட்டு செயல்பட்ட ஒரு இளைஞனின் முயற்சியில் எழுந்தது தான் இன்று உலகத்தையே கலக்கிக் கொண்டிருக்கும் ஃபேஸ் புக் என்ற 'சோஷியல் நெட் வொர்க்கிங்' இணையதளம். 2004ம் ஆண்டு அமெரிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழக மாணவர் மார்க் ஸூக்கர்பெர்க் தன் காதலை ஏற்காமல் போன காதலியின் நினைவுகளை மறக்க ஏதாவது சீரியஸாக செய்ய வேண்டும் என்று ஒரு இரவு முழுவதும் யோசித்ததில் பிறந்தது இது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சேரும் மாணவர்கள், ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை ஒரு முகஅளவு போட்டோவுடன் ஒரு "ஃபேஸ்புக்காக" அச்சிட்டு வெளியிடுவார்கள். மார்க் ஸூக்கர்பெர்க்கு அந்தக் கால கட்டத்தில் பிரபலமாகிக் கொண்டிருந்த இணைய தள அமைப்பில் இதைச் செய்தால் என்ன என்று எழுந்த எண்ணத்தில் அறை நண்பர்களின் உதவியுடன் மலர்ந்த காதலிதான் இந்த ஃபேஸ் புக். ஹார்வர்ட் பல்கலை மாணவர்களுக்கு மட்டும் என முதலில் துவங்கப்பட்ட இது பக்கத்து பல்கலைகழகம், பக்கத்து மாநிலம், அமெரிக்கா முழுவதும் உள்ள மாணவர்களுக்கு மட்டும் என்றாகி, பின்னர் உலக மாணவர்களுக்கு எல்லாம் என்று பல நிலைகளைக் கடந்து இன்று 13 வயதுக்கு மேற்பட்ட எவர் வேண்டுமானாலும் ஒரு இமெயில் ஐடி இருந்தால் போதும். இலவசமாக உறுப்பினராக முடியும் என்ற பிரமாண்ட எல்லையைத் தொட்டிருக்கிறது. தொடர்ந்து வேகமாக வளர்ந்துக் கொண்டிருக்கும் இதன் மதிப்பு 300 மில்லியன் டாலர்கள் (135 கோடி ரூபாய்கள்) இதே போல் மைஸ் பேஸ், ஆர்குட் போன்ற தளங்கள் இருந்தாலும் இதுதான் உறுப்பினர் எண்ணிக்கையிலும், அதிக முறை அடிக்கடி பார்க்கப்படும் தளங்களிலும் முதலிடத்திலிருக்கிறது. உலகம் முழுவதும் 30 கோடி பேர் இதைப் பயன்படுத்துகிறார்கள். ஓரளவு முதலீடு செய்திருக்கும் மைக்ரோசாப்ட் உள்பட பல பெரிய நிறுவனங்களுக்கு இதன் மேல் ஒரு கண். வளைத்துபோட்டு இணைத்துக் கொள்ளத் தயாராகவிருக்கிறார்கள்.



● மார்க் ஸூக்கர்பெர்க்

அப்படி என்னதான் இந்த இணையதளத்திலிருக்கிறது?

ஒரே வார்த்தையில் சொல்வதானால் எல்லாமே. உறுப்பினர்கள் தங்களைப் பற்றிய விபரங்கள், படங்கள், சொந்த, சமூக பிரச்னைகள், யோசனைகள், விமர்சனங்கள், பாராட்டுகள், கவலைகள் படித்தவை, அதில் பிடித்தவை பார்த்த சினிமா, அரட்டை, கோபம் இப்படி எல்லாவற்றையும்

பதிவு செய்யலாம். பார்க்கும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளையும் பதிவு செய்வார்கள். இதனால் புதிய நட்புகள் அரும்புகின்றன. தொடர்பில் இல்லாத பழைய நண்பர்களையும் இதன் வழியாக அடையாளம் காண முடிகிறது. ஒரே துறையைச் சார்ந்தவர்கள், ஒருமித்த கருத்துடையவர்கள் குழுவாக இணைந்து தகவல்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். சில இடங்களில் நேரில் சந்தித்து விவாதக் கூட்டங்கள் கூட நடத்திக் கொள்கிறார்கள். இளைஞர்களை அதிகமாகவே ஈர்த்திருக்கும் இன்னும் அவர்களைக் கவர தொடர்ந்து பல புதிய விஷயங்களை அறிமுகப் படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். புற நகர் இளைஞர்கள்

வரமாய் அமைந்த காதல் தோல்வி!



இப்போது தாங்கள் பேஸ்புக்கிலிருப்பதையும் அதை மற்றவருக்கு சொல்வதையும் கௌரவமாகக் கருதுகிறார்கள். உலகம் முழுவதும் முப்பது கோடி பேர் பயன்படுத்தும் இதில் ஒரு கோடி பேர் இந்தியர்கள். இந்தியாவில் செல்போன் பயன்படுத்துவர்களில் இருபது சதவிகிதத்துக்கும் மேல் ஃபேஸ்புக் உறுப்பினர்கள். உலகிலேயே செல்போன் உபயோகிப்போரின் எண்ணிக்கையில் முதலிடத்தை இந்தியா விரைவில் பிடிக்கும் என்பதால் இந்த நிறுவனம் இந்தியாவை தனது முக்கிய இலக்காகக் கொண்டிருக்கிறது.

''என் நாய்குட்டி ஜிம்மிக்கு உடம்பு சரியில்லை. இரண்டு நாட்களாக சரியாக சாப்பிடவில்லை'' என்ற செய்தியை நீங்கள் ஃபேஸ்புக்கில் போட்டால், உடனே ஆறுதல், ஆலோசனை, மருந்து, தொடர்புகொள்ள வேண்டிய டாக்டர், தங்களின் நாய்க்கு நேர்ந்தது போன்ற செய்திகள் ஒரு பத்து நண்பர்களிடமிருந்தாவது பறந்து வரும். மனித உறவுகள் பலவீனம் அடைந்து சிறு குடும்பத் தீவுகளாகிப்போன இச்சூழலில் நேசக்கரங்களை நிபந்தனையில்லாமல் நீட்டும் இதன் வசதி மக்களுக்குப் பிடித்திருப்பதும் இதன் வெற்றிக்கு ஒரு காரணம்.

பிரபலமான விஷயங்களில் ஏதாவது பிரச்னையிருக்கும் என்பதற்கு இது விதி விலக்கில்லை. நம் விஷயங்கள் எளிதாக எல்லோருக்கும் கிடைப்பதில் பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புகளும் உண்டு.

உங்கள் வீட்டில் இண்டர்நெட்டும், பதினைந்து வயதுக்கு மேல் குழந்தைகளும் இருந்தால் அவர்கள் ஃபேஸ்புக்கிலிருப்பவர்கள் என்ற நிலையிலிருந்து, மிச்ச வாழ்க்கையும் போரடிக்காமல் இருக்க, ஓய்வுப் பெற்றோர் உலகளாவிய தோழர்களுடன் ஃபேஸ்புக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள் என்ற வரத்தையும் தந்திருக்கிறது... ஒரு மார்க் ஸுக்கர்பெர்க்கின் காதல் தோல்வி!

- ரமணன்

பயம் மற்றும் தூக்கமின்மை

பயம் மட்டுமின்றி மனம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுக்குமே காரணம் ஜாதகத்தில் சந்திரன் அமைந்திருக்கும் இடம்தான். சந்திரனை மனோகாரகன் என்கிறது ஜோதிட விஞ்ஞானம். சில சமயத்தில் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் சிலர் சற்று அதிகமாக நடந்துக் கொள்வதைப் பார்க்கிறோம். குறிப்பாக சந்திரன் சற்று பலவீனமாக இருந்தால் மனோரீதியான பிரச்னைகள், குழப்பங்கள் அந்தக் குழப்பங்களினால் தூக்கமின்மை ஆகியவை ஏற்படும். சிலர் எந்தவிதப் பிரச்னையும் இல்லாமலேயே தூக்கமின்றித் தவிப்பதாகக் கூறிப் பரிகாரங்கள் கேட்கிறார்கள்.

சந்திரன் பலவீனமாக இருப்பது என்பதெல்லாம் ரொம்பவும் டெக்னிக்கலான பிரயோகம் என்று நீங்கள் நினைத்தால்...

1. விருச்சிக ராசிக்காரர்களுக்கு சந்திரன் பலவீனமாக இருக்கும். அதாவது சந்திரன் நீசம். உடனே விருச்சிகத்தில் பிறந்த எல்லோருக்கும் மனோரீதியான பிரச்னைகளும் தூக்கமின்மையும் ஏற்படும் என்று பயப்படாதீர்கள். ஒரு வேளை அந்த நீசத் தன்மைக்கு மாற்று இருக்கவும் வாய்ப்பு உண்டு. அவர்கள் மிகுந்த மன வலிமையுடன் இருப்பதைப் பார்க்கிறோம். எனினும் கற்பனை பயங்களுக்குக் குறைவிருக்காது! எனவே விருச்சிக ராசிக்காரர்கள் சந்திரனுக்குப் பரிகாரம் செய்வது நல்லது.



சிவனுக்கு திங்கட்கிழமை அபிஷேகம் செய்வது சிறந்த பரிகாரம்!

2. சந்திரனுடன் ராகு அல்லது கேது இணைந்திருந்தாலும் மேற்படி பிரச்னைகள் ஏற்படலாம். சின்ன வயதில் பாட்டி சொன்னது நினைவிருக்கிறதா? கிரகணம் என்றால் ராகு / கேது என்ற பாம்பு சந்திரனைக் கவ்வி விழுங்குகிறது என்பார்கள்!

இதற்கு என்ன பரிகாரம்?

சந்திரனுக்குப் ப்ரீதி செய்வது ரொம்பவும் சுலபம். சந்திரனை அணிந்த சிவனுக்கோ அல்லது துர்க்கைக்கோ அல்லது சந்திரனின் சகோதரியான மகாலட்சுமிக்கோ முறையான வழிபாடுகள் செய்தால் நல்லது. தவிர,

பரிகாரம் ஸ்பெஷல்

பயம் போக்கும் தயிர்சாதம்!

சங்கு, வெண்முத்து, கடல் சம்பந்தப்பட்ட எல்லாமே சந்திரனின் அம்சங்கள். திங்கட்கிழமை சந்திரனின் தினம் என்பது எல்.கே.ஜி பாப்பாவுக்குக்கூடத் தெரியும். ஆக, திங்கட்கிழமையில் நவகிரக சன்னிதியில் தயிர்சாதம் அளித்து அதை விநியோகம் செய்யச் சொல்வது, சிவன் கோயிலுக்கு சங்கு வாங்கி அளிப்பது, திங்கட்கிழமையில் சிவனுக்கு அபிஷேகம் செய்வது, திங்கட்கிழமையில் யாருக்காவது வெண் முத்து பரிசளித்தல், திங்கட்கிழமையில் கடலில் நீராடுதல் ஆகிய எல்லாமே இதற்குப் பரிகாரம்தான்.

2 என்பது சந்திரனின் எண் என்பதால் 2 பௌர்ணமிகள் பூஜை செய்தல், 2 பௌர்ணமிகள் விரதம் இருத்தல் ஆகியவை மிகச் சிறந்த பரிகாரமாக அமையும்.

கண் திருஷ்டி

பொதுவாக பலர் கண் திருஷ்டியை நம்புவதில்லை என்றாலும்கூட, தனக்கு ஒரு பிரச்னை என்று வரும்போது தன்னிச்சையாக கண் திருஷ்டிதான் அதற்குக் காரணம் என்று சொல்வதைக் கேட்கிறோம். திருஷ்டிக்கென்று யந்திரங்கள் உள்ளன. அவற்றை தகுந்தவர்கள் மூலம் முறையாக உரு ஏற்றி வீட்டில் வைத்துக் கொள்வது நல்லது.

தாயத்து கட்டிக் கொண்டால் அது எப்போதும் நம்முடனேயே இருக்கும் என்பதால் மேலும் சிறந்தது.

உங்களுடைய சந்தோஷங்களையும் வெற்றிகளையும் மட்டும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்காமல் சிறு சிறு தோல்விகளையும் சிரமங்களையும்கூட சில சமயங்களில் பரப்புவது மிகச் சிறந்த திருஷ்டி பரிகாரம். எனக்குத் தெரிந்த ஒருவர் சில நாட்களுக்கு ஒரு முறை "தலையை ரொம்பவும் வலிக்கிறது" என்று கொஞ்ச நேரத்துக்கு சொல்லிக் கொண்டிருப்பார். பல காலம் கழித்துத்தான் என்னிடம் ரகசியத்தைச் சொன்னார்! திருஷ்டி படாமல் இருக்கவாம். (இது எப்படி இருக்கு?)

நம்முடைய நட்சத்திரம் என்றைக்கு வருகிறதோ அந்த நாளில் துர்க்கைக்கு அர்ச்சனைச் செய்தால் நிச்சயம் திருஷ்டி விலகும். அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப வீட்டு வாசலில் திருஷ்டி பரிகாரம் வைத்துக் கொள்வார்கள். நான் என் போட்டோவை மாட்டலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்! (அட ச்சும்மா தமாஷுங்க!)


★ வேதா கோபாலன்

— வேதா கோபாலன் —

கட்டை போடும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.

அஹோபில மட ஜீயர் மிகவும் சிரமப்பட்டு மதுராந்தகத்தில் கலை-அறிவியல் கல்லூரி கட்ட தமிழக அரசிடம் அனுமதி வாங்கினார். ஆனால், செலவு செய்து கல்லூரி துவங்க இருக்கும் நிலையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தை 'தாமதப்படுத்தி' வருகிறாராம் உள்ளூர் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ''அந்தக் கல்லூரி வந்தால் அருகிலுள்ள என் கல்லூரி படுத்துப் போய்விடும்'' என்று காரணம் சொல்கிறாராம். இப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்களுக்கு கல்விக் கண் திறந்த காமராஜரைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?


புகையும் பா.ம.க.

பா.ம.க.வில் உட்கட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஆனால் பொதுக்குழுவில் இளைஞர் அணித் தலைவராகத்



டாக்டர் ராமதாஸ்

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அன்புமணி, புதிய நிர்வாகிகளிடம், ''ஆறு மாதம் உங்கள் செயல்பாடுகளை கண்காணித்து வருவேன்; திருப்தியில்லாவிடில் டிஸ்மிஸ்தான்'' என்று சொல்லிவிட்டாராம். ஏற்கெனவே பதவி மீண்டும் கிடைக்காத பழைய பொறுப்பாளர்கள் முணுமுணுப்பு ஒருபுறம் இருக்க, புதிய பொறுப்பாளர் களுக்குப் 'புரோபேஷன்' வைத்திருப்பது கட்சியில் பெரிய புகைச்சலை ஏற்படுத்தி யிருக்கிறது. தவிர, ''தனித்து நின்றா லும் நிற்போம்'' என்றும் டாக்டர் ஐயா சொல்லிவிட்டதால் உற்சாகமின்றி இருக் கிறார்கள் பா.ம.க. பிரமுகர்கள்.



இ.பெரியசாமி

மரங்களை வெட்டும் மந்திரி பி.ஏ.


சென்னை அயனாவரம் பகுதியில் வனத் துறையின் உதவியுடன் ஒரு குடியிருப்புப் பகுதியில் மரங்களை நட்டார்கள் ஏரியாவாசிகள். பேராசிரியரின் உதவியாளர் ஒருவர் அந்தப் பகுதியில் குடியிருக்கிறார். பத்து வருடமாக வளர்ந்த மரங்கள் தன் வீட்டின் அழகை மறைப்பதாகவும் வீட்டினுள்ளே காய்ந்த இலைகள் விழுவதாகவும் சொல்லி மரங்களை உள்ளூர் கவுன்சிலர் துணையோடு வெட்டி வீழ்த்தி விட்டாராம். காவல் துறை, மாநகராட்சி என்று புகார் எடுத்துக் கொண்டு ஏரியாவாசி

அமைச்சரை மாற்றத்

கள் அலைய யாரும் லட்சியம் செய்வதில்லையாம். மந்திரி உதவியாளர் என்றால் அதிகாரிகளும், 'மரங்களாகி' விடுகிறார்கள்.

அமைச்சரை மாற்றத் துடிக்கும் அதிகாரி

வழக்கமாக அமைச்சர்கள் தான் சரியாக வராத அதிகாரிகளை மாற்றுவார்கள். ஆனால் தமிழக அரசின் வீட்டு வசதித் துறைச் செயலாளர், அவரது அமைச்சரான ''ஐ.பெரியசாமியை மாற்றி விடுவேன்,'' என்று சவால் விடுகிறாராம். சில காலமாக அமைச்சருக்கும் செயலருக்கும் இடையே நடக்கும் மோதல் இப்போது உச்சகட்டத்துக்கு வந்திருக்கிறது. கோப்புகளில் 'குண்டக்க, மண்டக்க' எழுதி அமைச்சரை மண்டை காயவைத்ததில் அமைச்சர் பொங்கியெழுந்து கத்திவிட்டாராம். செயலர் சிரித்து மகிழ்கிறாராம். செயலர் இப்படி 'தில்லோடு' இருப்பதற்குக் காரணம், முதல்வர் அலுவலகத்தில் இருக்கும் 'ராஜ' அதிகாரியின் அரவணைப்பு என்கிறார்கள்.



> **''இப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்களுக்கு கல்விக்கண் திறந்த காமராஜரைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?''**

பச்சமுத்து: சாரி பாரிவேந்தர்

எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழக வேந்தர் பச்சமுத்து. இந்திய ஜனநாயகக் கட்சியை துவக்கும் முன்னர் 'பாரி நற்பணி மன்றம்' என்ற அமைப்பை நடத்தி வந்தார். இதனால் அவரை பாரிவேந்தர் என்று அழைத்தார்கள். இப்போது கட்சியைப் பற்றி எழுதும் போது, அவரது பெயரைப் 'பச்ச முத்து' என்று எழுத வேண்டாம்; பாரிவேந்தர் என்று எழுதுங்கள் என்று பத்திரிகையாளர்களிடம் சொல்கிறார்களாம் அவரது உதவியாளர்கள். 'புரட்சித் தலைவர்', 'புரட்சித் தலைவி' போன்று 'பாரிவேந்தர்' என்றாலே என் ஞாபகம் வரவேண்டும்'' என்கிறாராம் பச்சமுத்து.

பாஸ்;பாஸ்

தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணம் நிர்ணயிக்கும் விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாட்டை தங்கள் 'வசதிக்கு' மாற்றிவிட்ட மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் பள்ளி நிர்வாகிகள். வழக்கம் போல் மக்கள் தோற்றார்கள்.

-சஞ்சயன்



* பாரிவேந்தர்

துடிக்கும் அதிகாரி!

''ஏன்ய்யா நேற்று வரலை?''

''டூ-வீலர் ரிப்பேர் சார்!''

''பஸ்ஸில வந்திருக்க வேண்டியது தானே...?''

''பஸ் வாங்கற அளவுக்கு வசதியில்லை சார்!''

- ஜி.சுந்தரராஜன்





''எதுக்கு நம்ம தலைவர் திடீர்னு 'செஸ்' பிராக்டிஸ் பண்றார்...?''

''வரும் சட்டசபைத் தேர்தலில் திட்டமிட்டுக் காயை நகர்த்தி ஜெயிக்கத்தான்...''

- ராஜிராதா

''சிறை திறப்பு விழாவுல தலைவர் எதுக்கு மூடுஅவுட்டா இருக்கார்?''

''யாரோ ஒருத்தர் தலைவர்கிட்ட வந்து கண்டிப்பா வீட்டுக்குத் திரும்பிப் போகணுமான்னு கேட்டாராம்!''

- அம்பை தேவா





''அவர் போலி டாக்டர்னு எப்படிச் சொல்றே?''

''நீங்க அலோபதியா, ஹோமியோபதியான்னா, நான் திருப்பதிங்கறாரே...?''

-எல்.மோகனசுந்தரி



''உன்னைப் பார்த்தா பிச்சைக்காரன் மாதிரியே தெரியலையே!''

''நான் கூடத்தான் உங்களை 'தர்மபிரபு'வேன்னு சொன்னேன்.

- உ.சுல்தானா

எங்கிட்ட வேணாம்!



இலக்கியஜோதி இ.பா!

தனித்துவமான இலக்கிய ஆளுமையான இந்திரா பார்த்தசாரதியின் 80-வது பிறந்த நாளை 'உயிர்மை'யும் 'மணற்கேணி'யும் இணைந்து இ.பா. 80 என்ற பெயரில் கருத்தரங்கம் நடத்திக் கொண்டாடின. அந்த அரங்கில் மலர்ந்த சில கருத்துப் பூக்கள்...

மனுஷ்யபுத்திரன்: தமிழ் எழுத்தாளர்களிடையே ஈழ விஷயத்தில் உணர்வுபூர்வமாக மட்டுமின்றி அறிவுபூர்வமாகவும் ஆதரித்தவர் இ.பா. இரண்டாம் உலகப் போருக்கு பின் யூதர்களின் எழுச்சியை போல் ஈழத்தமிழர்கள் எழுவார்கள் என்றவரும் இ.பா.தான். ஒரு எழுத்தாளனாய் (எந்தக் குழுவிலும் இல்லாமல்) 80 வருடம் வாழ்வது, தன் இருப்பை சாதனையால் உறுதியாக்குவது என்பது பெரும் சாதனை.

ஞானக்கூத்தன்: இ.பா., நோயாளியின் விருப்பத்தை நிறைவேற்றாமல் நோயை விரட்டுவதற்கான விருப்பத்தைக் கொண்டிருந்தார். அதனால்தான் வாசகன் விரும்புவதைத் தராமல், வாசகனுக்கு என்ன வேண்டுமோ அதைத் தந்தவர் இ.பா.

இமையம்: இறைவனிடம் கண்ணீர் விட்டுக் கெஞ்சாத, ஆனால் இறைவனையே கேள்விக் கேட்கும், சதா விவாதிக்கிற, தனித்திருக்கும் ஆனால் சமூகத்தைப் பற்றியே சிந்திக்கும் கதாபாத்திரங்கள் இ.பா.உடையது. தி.மு.க.வை பற்றி விமர்சித்த அவரின் அறம் சார்ந்த கருத்துக்களை எழுத்தாளன் என்ற முறையில் ஆதரிக்கிறேன். தி.மு.க. தொண்டன் என்ற முறையில் என் கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்.

எஸ்.ராமகிருஷ்ணன்: பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து இன்றைய நவீன இலக்கியம் வரை தொடர் ஓட்டமாய் அவர் கொண்டு வந்திருக்கும் இலக்கிய ஜோதியை நாம் வாங்கி ஓட்டத்தைத் துவங்க வேண்டும். இ.பா.வின் ஔரங்கசீப், ராமாநுஜர், நந்தன் கதை என்று வெவ்வேறு பெயரில் எழுதப்பட்ட நாடகங்கள் வெறும் அடையாளம் அல்ல. இந்திய சரித்திரத்தை ஆய்வு செய்து தாம் விரும்பும் சரித்திரத்தை கட்டுகிற முயற்சிகள்.

விழாவில் ரவிக்குமார் மற்றும் கூ.ராமசாமி உரையைத் தொடர்ந்து இ.பா. ஏற்புரையோடும் நன்றி தெரிவித்துப் பேசி அமர்ந்தார். பெரும் கரகோஷத்துடன் எழுந்திருக்க மனமின்றி பெருமிதத்தோடு சில நிமிடம் அமர்ந்திருந்தது கூட்டம்.

– சசி





''நான்தான் சொன்னேனே மாப்பிள்ளைக்கு சுகர் இருக்குன்னு...''
''அதுக்காகக் கல்யாணத்துல அட்சதைக்குக் கூட அரிசிக்குப் பதிலா கோதுமையைப் போடறது நல்லாயில்லை..
''அந்த டாக்டர் ஆனாலும் ரொம்ப மோசம்?''
''ஏன்?''
''காதுக்குள்ளே எறும்பு போயிடுச்சுன்னு சொன்னேன். உடனே சுகர் டெஸ்ட் எடுக்கச் சொல்றாரு...''
சுகர் டெஸ்ட்!
வி.பார்த்தசாரதி



8


ஞானம் பிறந்த வனம்!

'கார்த்திகை மாதம் முதல் ஞாயிறு தொடங்கி, தொடர்ந்து எழுபத்தெட்டு நாட்கள் விரதமிருங்கள். விரத காலத்தில், திங்கட்கிழமையன்று மட்டும் காலையில் உதயாதி ஏழரை நாழிகைக்குள் எருக்கிலையில் தயிரன்னம் வைத்துப் புசியுங்கள். எருக்க இலையில் தயிர் சாதத்தை வைப்பதால், எருக்கிலையின் சாரத்தில் அணுப்ரமாணம் அதில் கலக்கும்; உங்களைப் பற்றியுள்ள தொழுநோயையும் குணமாக்கும். அதே சமயம், மனதை ஒரு நிலைப்படுத்தி, அர்க்கவனத்தில் எழுந்தருளியுள்ள பிராணவரதரைத் துதியுங்கள். உங்கள் சாபம் நீங்கி குணம் பெறுவீர்கள்' என்றார் தமிழாய்ந்த பெருமுனியான, குறுமுனி அகத்தியர்.

நவகிரக நாயகர்கள் அவர் சொன்னபடியே செய்தார்கள்; நலம் பெற்றார்கள். நவநாயகர்கள் சாபம் பெற்றது ஏன்? வரம் கொடுத்ததால் சாபம் பெற்றார்கள். வரம் தருவது தவறா? அதற்காகச் சாபமா? ஆமாம்; அதுதான் நடந்தது. ஏன்?

கோள் நிலைகளைப் பற்றி அறிந்த காலவ முனிவருக்கு, தம்மைத் தொழுநோய் பற்றப் போகிறது என்று புரிந்தது. எனவே, கர்மவினைகளை அனுபவிக்கச் செய்யும் நவகிரக நாயகர்களைக் குறித்து தவமிருந்தார். அவர்கள் வியந்துபோனார்கள். 'மிகச் சிறந்த தவச்சீலரான காலவ முனிவர், சிவனையும் திருமாலையும் விட்டுவிட்டு நம்மை நோக்கித் தவமிருக்கிறாரே?' என்று மனம் குளிர்ந்து, மகரிஷியின் முன் தோன்றினார்கள். 'என்ன வேண்டும்?' என்று கேட்டார்கள். மகரிஷி காலவர் தாமறிந்ததைச் சொன்னார். நோய் தாக்கா வண்ணம் தம்மைக் காக்க வேண்டும் என்றும் வேண்டினார். 'அப்படியே ஆகட்டும்' என்று வரங்கொடுத்தார்கள். அதை அறிந்த சிருஷ்டி கர்த்தாவான பிரம்மன் சினந்தான்; நவநாயர்களை அழைத்துச் சொன்னான்.

'உங்கள் பணி, ஒவ்வொரு ஜீவனும் உரிய காலத்தில் வினைப் பயனை எய்தும்படிச் செய்வதுதான். அதைக் குறைப்பதற்கோ அல்லது போக்குவதற்கோ உங்களுக்கு அதிகாரமில்லை. அந்த எல்லையைக் கடந்து, காலவ முனிவருக்கு நீங்கள் வரம் தந்துவிட்டீர்கள்.



தல விருட்சம்

உங்கள் வரம் பலிக்கும். ஆனால், அவர் அனுபவிக்க வேண்டிய நோயை, அதே கால அளவுக்கு நீங்கள் அனுபவியுங்கள்' என்றார் பிரம்மா. நடுங்கிய அவர்கள், விமோசனம் வேண்டினர். அதன் பிறகு, சினம்தணிந்த பிரம்மன் சொன்ன பரிகாரம் தான், அர்க்கவனப் (எருக்கங்காடு) பிரார்த்தனை. அதற்கு வழிகாட்டியவர் அகத்தியர்.

அதிகார எல்லையை மீறி நடந்தால் எப்படிப்பட்ட ஆபத்து வரும் என்பதை தலபுராணமாகச் சொல்லி நினைவூட்டுகின்ற தலம், திருமங்கலக்குடி; நவகிரகத் தலங்களில் சூரியனுக்கு விசேஷமான இந்த சூரியனார் கோவிலிலிருந்து, சுமார் பதினைந்து நிமிட நடைதூரம். பிராண வரதர் என்ற பெயருடன் சிவபிரானும், மங்களாம்பிகை என்ற பெயருடன் தேவியும் அருள்பாலிக்கும் திருமங்கலக்குடி. விஷம் என்று நாம் ஒதுக்கக்கூடிய எருக்குதான், இங்கே தலவிருட்சம்! விருத்தாசலம் அருகிலுள்ள இராசேந்திரப் பட்டினம் என்று சொல்லப்படுகிற திருஎருக்கத்தம்புலியூரிலும் தலவிருட்சம் எருக்குதான். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மனைவி மதங்கசூளாமணி பிறந்த ஊரிது என்பார்கள்.

திருவாரூர்க்கு அருகில் உள்ள கீழ்வேளூரில், தலவிருட்சம் முள் நிரம்பிய இலந்தை மரம். இங்கே அபூர்வமான, கால் மாற்றி ஆடும் நடராஜ மூர்த்தியைத் தரிசிக்கலாம். தனியாக அல்ல; திருமால், நந்தி என்று கூத்துமேடை தரிசனம்! சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீமுத்து

ஸ்ரீநிவாச ராகவன்



ஸ்வாமி தீட்க்ஷிதர் பாடிய 'அட்சயலிங்க விபோ' என்னும் கிருதி இங்குள்ள சிவபிரான் மீதுதான். 'அட்சயலிங்கர்' என்றால், 'குறையற்ற பிரபு' என்று அர்த்தம். இவர் செய்த லீலை ஒன்று பூரிக்கச் செய்வது!

கீழ்வேளூர் பெருமானைத் தரிசிக்க வந்தார் தீட்க்ஷிதர். நேரம் கடந்து வந்ததால், அர்ச்சகர் கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்டார். அதைப் பார்த்தார் தீட்க்ஷிதர். 'பெருமானைத் தரிசிக்க முடியவில்லையே' என்ற மனத்தின் ஏக்கத்தை-



சங்கர ஆபரணமாக, சங்கராபரண ராகத்தில் பாடினார். அதுதான், 'அட்சய லிங் விபோ' என்பார்கள். அதைத் தொடர்ந்து, ஆலயக் கதவு தானே திறந்தது. பரமனின் தரிசனமும் அவருக்குக் கிடைத்தது.

அப்பர் பெருமானுக்கு, மறைக்காட்டீசன் கதவைத் திறந்து தரிசனம் அளித்தான்; இங்கே தீட்க்ஷிதருக்கு தரிசனம். அப்பர் பெருமான், 'கேடிலியப்பர்' என்று கீழ்வேளூர் பெருமானைப் பாடுகிறார். 'கேடிலியை நாடுபவர் கேடிலாரே' என்பது அவர் திருவாக்கு.

இடுக்காய் மரத்தை தலவிருட்சமாகக் கொண்ட தலம் திருக்குறுக்கை. மயிலாடுதுறை அருகிலுள்ள இந்தத் தலம், சிவபிரானின் அட்டவீரட்டத் தலங்களில் ஒன்று. தம்மீது மலர்க்கணை எய்த மன்மதனை எரித்த தலம் இது. திருமாலுக்கு விசேஷமான துளசியைத் தலவிருட்சமாகக் கொண்டதலம் திருவிற்குடி, திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகே உள்ளது. இதுவும் அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. சலந்திராகரனைச் சம்ஹரித்த தலம்.

கொடி வகையைச் சேர்ந்த முல்லையைத் தலவிருட்சமாகக் கொண்ட தலங்கள் என்று, திருமுல்லைவாயில், திருக்கருகாவூர் ஆகியவற்றைச் சொல்லலாம். புல் இனத்தைச் சேர்ந்த மூங்கிலை தலவிருட்சமாகக்கொண்ட தலம், திருவெண்ணெய்நல்லூர். சுந்தரரைத் தடுத்து ஆட்கொண்ட அருளாளன்; 'பித்தா பிறைசூடி...' என்று தமிழ்மாலை பாடச்செய்தவன் 'கிருபாபுரீசன்' என்ற பெயர் கொண்டு இங்கே தரிசனம் அருள்கிறார். இதுதான் கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் வாழ்ந்த பதி. சிவபிரானின் பஞ்ச சபைகளில் ஒன்றான 'தாமிர சபை'யைக் கொண்ட திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தின் தலவிருட்சமும் மூங்கில்தான். வேணுவனம் என்பது புராணப் பெயர்.

சிவபிரானுக்கு விசேஷமான வில்வத்தையும், வகுள மரத்தையும் தலவிருட்சமாகக் கொண்டது நாச்சியார் கோயில் என்னும் திருநறையூர். பிரசித்தமான கல்கருட சேவை இங்குதான். திருமங்கையாழ்வாரின் அதிகமான பாசுரங்களைப் பெற்றவர் இத்தலத்தில் உறையும் ஸ்ரீநிவா

எருக்க இலையில் தயிர் சாதத்தை வைப்பதால், எருக்க இலை சாரத்தின் அணுப்ரமாணம் அதில் கலக்கும்.



சப் பெருமாள்தான்.

'பஞ்சாரண்யத் தலங்கள்' என்று, ஆலங்குடி என்னும் பூளைவனம், திருக் கருகாவூர் என்னும் முல்லை வனம், பாதிரி வனம் அன்னும் அவளிவ நல்லூர், சமீ வனம் என்னும் அரித்துவார மங்கலம், வில்வ வனம் என்னும் திருக்கொள்ளம் பூதூர் (திருக்களம்பூர்) ஆகிய தலங்களைச் சொல்வார்கள். இவை ஐந்தும் காட்டுத் தலங்கள்.

ஆனால், காட்டையே பகவானாகக் கண்டு வணங்கும் சிறப்புக்குரியது, நைமி சாரண்யம். 'தவத்துக்குரிய சிறந்த பகுதி எது' என்று காட்ட, பிரம்மன் தர்ப்பைப் புல்லால் செய்த சக்கரம் உருண்டு விழுந்த இடம். நேமி என்றால் சக்கரம். அது விழுந்த காடு, நைமிசாரண்யம். மகரிஷி வியாசரும், அவரது மைந்தர் சுகப் ப்ரம் மமும் தவமிருந்த இடம். மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் போன்ற பெரும் ஞான நூல்கள் தோன்றிய இடம். கடந்த இதழில் விடுபட்டுப் போன, 'ஸ்வயம் வ்யக்த' தலங்களில் இதுவும் ஒன்று. மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ளது.

சரி; ஆலயங்கள் தோறும் தலவிருட் சங்களுக்கான அவசியம் என்ன?

'புல், செடி, கொடி, மரம் என்று அடையாளப்படுத்துவதும், வாசனை, துர்நாற்றம் என்று பேதப்படுத்துவதும், முட்செடி, சந்தன மரம் என்று பாகுபாடு காண் பதும் மனித சுபாவம். ஆனால், ஈசனைப் பாருங்கள்; எருக்கும், இலந்தையும் கூட அவனுக்குப் பிரியமானவை. அப்படியொரு மனோபாவத்தை வளர்த்துக் கொண்டால், உங்களுக்குள்ளும் ஈசனின் ஒளி பரவத் தொடங் கும்' என்று உணர்த்துகின்றன தலவிருட்சங்கள்.

(அடுத்த வாரம் திருக்குளம்)

நோய்:

சிலர் வீட்டில் நோய் வந்து கொண்டே இருக்கும். மருத்துவச் செலவிற்காக EMI போல், மாதம் ரூ.1,500/- வரை செலவு செய்வார்கள். சிறு சிறு உபாதைகள் வரும். காரணம் தெரியாது. சிறு விஷயத்துக்கும் மருத்துவரிடம் பரிசோதனை செய்வார்கள். ஆனால், காரணம் கண்டுபிடிக்கமுடியாது. ஆயுர்வேத, அலோபதி, ஹோமியோபதி கடைசியில் வேங்கடசல பதியையும் பார்த்து விடுவார்கள்.

இதற்குக் காரணம் ருணம். இதை எப்படி பரிகாரத்தின் மூலம் சரிசெய்வது? தன்வந்திரி ஹோமம், பூஜை, காயத்திரி செய்ய வேண்டும் - உடல்நிலை பொறுத்து ஆறு மாதம் முதல் இரண்டு வருடம் வரை செய்ய வேண்டும்.



விட்டுக்கொடுக்கும்

இனிப்பு உணவுகளை ஜென்ம திதி, ஜென்ம நட்சத்திரம், ஜென்ம ஹோரை அன்று தானம் செய்ய வேண்டும்.

வயிற்றுவலி இருந்தால், கல்யாணத்துக்குச் சென்று உணவு பரிமாற வேண்டும்.

கண் தொடர்பான வியாதிகள் இருந்தால் மூக்குக் கண்ணாடி தானம் செய்ய வேண்டும்.

கால் வலி இருந்தால் - எண்ணெய் தானம் செய்ய வேண்டும்.

சிறுநீரக வியாதி இருந்தால், தண்ணீர் தானம் செய்ய வேண்டும்.

கர்ப்பம் சம்பந்தப்பட்ட நோய் இருந்தால், குழந்தைப் பிறப்பிற்கு பணம் (மகப்பேறுக்கு) தர வேண்டும்.

❋ கோபாலகிருஷ்ணன்



காது நோய் மற்றும் காது கேளாமை கோளாறு இருந்தால் - வாத்தியக் கருவிகளைத் தானம் செய்ய வேண்டும்.

தூக்கமின்மை இருந்தால் - படுக்கை, மெத்தை, தலைகாணி தானம் செய்ய வேண்டும்.

சரும நோய்கள் இருந்தால் குளியல் சோப்பு, துணி தானம் செய்ய வேண்டும்.

பரிகாரம் என்பது மன மாற்றம் ஏற்பட்டு, இறைவனிடம் மன்னிப்பு கேட்

பதில்தான் முழுமை பெறுகிறது. அப்படிச் செய்யாமல் இருந்தால் தொடர்ந்து நோய் வந்துகொண்டே இருக்கும். எல்லா நோய்க்கான காரணத்தையும் மருத்துவர் கண்டுபிடிக்க முடியாது. எனக்குத் தெரிந்த பெண்மணிக்கு தொடர்ந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டே இருந்தார். ஒரே வருடத்தில் மூன்று முறை நடந்து விட்டது. மாமனார், மாமியார், மைத்துனரிடம் ஒரே தகராறு.

மனத்திற்குள் சபித்துக் கொண்டிருந்த அவர்களிடம் மன்னிப்பு கேட்கவைத்து, பரிகாரம் செய்த பின்னர், நோய் தீர்ந்தது. சில வீடுகளில் Geopathic Stress இருக்கும். வீடு மாற்றினால் உடம்பு சரியாகி விடும்.

பெருமாளுக்கு திருக்கல்யாணம் செய்தால்இல்லற தகராறு தீரும்.



பரிகாரம்!



கணவன்-மனைவி தகராறு:

1. வீட்டில் பெண்கள் தற்கொலைச் செய்து கொள்வது, பெண்களைப் பேச்சினால் துன்பப்படுத்துவது, திருத்துகிறேன் என்ற பெயரில் பெண்களை அடிப்பது, வீட்டு விலக்கான நேரத்தில் பெண்களை இம்சிப்பது, வேலை செய்யுமிடத்தில் பாலியல் தொடர்பான துன்பம் செய்வது, ஜாதகத்தில் சுக்ரனுடன் ராகு- கேது, செவ்வாயுடன் ராகு-கேது, 7-ஆம் அதிபதி கிரகயுத்தத்தில் இருப்பது, பொதுவாக சிம்ம, மீனம், கடக லக்னங்களுக்கு மணவாழ்க்கை சிறப்பாக இருக்காது. 7-ஆம் அதிபதி - 6,8,12 வீட்டில் இருந்தால் மணவாழ்க்கை சிறப்பாக இருக்காது. கிணறு அக்னி மூலையில் இருப்பது இப்படி பல காரணங்களால் கணவன்-மனைவி தகராறு ஏற்படும்.

பரிகாரம்:

சாந்தி பஞ்சகம் 54 தடவை தினமும் பாராயணம் செய்ய வேண்டும், சம்வான சூக்தம் படிக்க வேண்டும். திருமாங்கல்யம் தானம் செய்வது, பெருமாளுக்கு திருக்கல்யாணம் செய்வது, 54 சுமங்கலிகளுக்கு புடைவையுடன் தட்சணை செய்வது, பொதுவாக பெரியவர்களிடத்தில் ஆசீர்வாதம் பெறுவது, கணபதி ஹோமத்தை வசிய வழியில் செய்வது போன்ற பரிகாரங்கள் நல்ல பலனளிக்கும்.

பொதுவாக - கணவன்-மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து குறைகூறாமல் இருந்தால் எந்தப் பரிகாரமும் தேவையில்லை! ●

K.B.கோபாலகிருஷ்ணன்



● ஜே.துரைராஜ், சென்னை

ஆக்டோபஸ் பால், சிங்கப்பூர் கிளி ஜோஸ்யம் பற்றி....?

ஆக்டோபஸ் என்ன சொல்லுவது, 'SPAIN'தானென்று வள்ளுவர் அன்றே எழுதி விட்டாரே. PELE போய் ஆடினாலும் பின்தான் நெதர்லேண்ட் சால மிகுந்து SPAIN.

● ராமனாதன், சென்னை

உங்கள் சினிமா குரு யார்?

கமல், ரஜினி என்ற அமெரிக்காக்களைக் கண்டுபிடித்த அதே கொலம்பஸ் இயக்குனர் சிகரம் K.பாலசந்தர்தான், கிரேசி என்ற இந்த சிறு தீவையும் கண்டு பிடித்தார்....

எனது 'மேரேஜ் மேட் இன் சலூன்' என்ற நாடகத்தை 'பொய்க்கால் குதிரை' சினிமாவாக்கி, எனக்குக் கனவுத் தொழிற்சாலையின் மெயின் கேட்டை திறந்து விட்ட குரு பாலசந்தர் அவர்கள்தான். அவர் 'பாலசந்தர்' என்றால் அவரால் பயன்பெற்ற அடியேன் 'லாபசந்தர்' அவரது 'எதிர்-நீச்சல்' மாதுவால்(நாகேஷ்) கவரப்பட்டு எனது நாடகக் கதாநாயகனுக்கு 'மாது' என்று பெயரிட்டேன். என்னதான் சினிமா என்னைச் சுண்டியிழுத்தாலும், பாலசந்தருக்காகவாவது எப்படியாவது எதிர் நீச்சல் போட்டு எனது மாதுவை 'எதிர் நீச்சல்' மாதுவாக ஆக்கும் வரை நான் நாடகம் போடுவதில் ஓயமாட்டேன்....அவரது நாடக DVD ரிலீஸ் அன்று அவர் மீது நான் எழுதிய வெண்பாவை குரு காணிக்கையாக சமர்பிக்கிறேன்.

''வியப்புறும் வண்ணம் வியன்மிகு வெள்ளி
நிழற்படங்கள் தந்த நவீனா -இயக்குனர்
உச்சிச் சிகரமே ஓங்கிடப் பல்லாண்டு
இச்சிறுவன் வேண்டல் இறைக்கு''

● ஆர்.ரங்கராஜன், தி.நகர்

அடை மழை என்று ஏன் மழைக்கு சிற்றுண்டியின் பெயரை வைத்தார்கள்....?

யார் கண்டார்கள், பாலும், தேனும்



சிறிய இடைவெளிக்குப் பிறகு ஃப்ரெஷ்ஷா மீண்டும் சந்திப்பேன். கிரேஸி.காம் -மில்.

- கிரேஸிமோகன்

பெருகி ஓடிய காலத்தில் ஒருவேளை அடையும், அல்வாவும், ஆப்பிள் ஜூஸும் மழையாகப் பொழிந்திருக்கலாம்....!

● **மு.மதிவாணன், அரூர்**

உங்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதக்கூடிய சக்தி கிடைத்தால்?

உங்களுக்குப் பளு குறையும். கேள்வி, பதில் இரண்டையும் நானே எழுதி விடுவேன்.

● **சம்பந்தன், திருவிடைமருதூர்**

உங்களைப் போலவே தோற்றம் கொண்ட கிரேசி எதிரே வந்தால் என்ன ஆகும்....?

இருவரும் கண்ணாடியில் முட்டிக் கொள்வோம்....!

● **எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்**

மந்திரம் என்றால் என்ன? தந்திரம் என்றால் என்ன?

பூட்ட வேண்டும்!

● **வி.பெரியசாமி, அரியலூர்**

அம்மா -மனைவி இருவரிடமும் நல்ல பெயர் எடுப்பது எப்படி....?

இதுதான் 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்பது. சத்தம் போடாமல் 'ஸ்டிரா' வைத்து உறிஞ்சுங்கள்!

● **லக்ஷ்மி ராகவன், தஞ்சை**

உங்களுக்கு நீச்சல் தெரியுமா?

சின்ன வயசுல நீஞ்சியிருக்கேன், தரையில!

● **என்.சங்கரதாஸ், விருதுநகர்**

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண். ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால்?

ஐந்து ஆண்கள். இது பாஞ்சாலிக்கு



கோலிவுட் கொலம்பஸ்!

விளம்பிடும் மந்திரம் ஸ்லோகம். விளம்பரத் தந்திரம் SLOGAN. மாங்காய் வரவழைக்கலாம் மந்திரத்தால். மாங்காய் மடையனாக்கலாம் தந்திரத்தால்!

● **கே.எஸ்.எஸ்.ராகவன், வேளச்சேரி**

பரமசிவன் பார்வதிக்கு பாதி உடலைத் தந்ததோடு நில்லாமல், 'அர்த்தநாரீஸ்வரர்' கோலத்தில் அனைவருக்கும் தெரியும்படி காட்சி அளிக்கிறார். ஆனால் மகாவிஷ்ணு மட்டும் ஏன் லஷ்மியை மார்பில் வைத்து பீதாம்பரத்தால் மூடி மறைத்து விட்டாரே?

பலத்தை(சக்தியை) காட்ட வேண்டும். பணத்தை(செல்வத்தை)ப் பத்திரமாகப்

மட்டுமல்ல எல்லாப் பெண்களுக்குமே பொருந்தும். அந்த ஐவர், பள்ளி ஆசிரியர், பெற்ற தந்தை, புருஷன், வந்த தந்தை மாமனார், மகன்!

● **கே.ஆர்.ரவீந்திரன், சென்னை**

'அலாவுதீனின் அற்புத விளக்கு' உமக்குக் கிடைத்தால் முதலில் என்ன வேண்டும் என்று கேட்பீர்கள்....?

ஒன்றும் கேட்க மாட்டேன். அந்த விளக்கை எரிய வைத்து பவர்-கட்டை சமாளிப்பேன். ●



ஸ்மைல்

கனல் மணிக்கு அனுப்பும் அழைப்பிதழின் உறையின் மேல் முகவரி எழுதும்போது எனக்குக் குழப்பம் ஏற்பட்டது. எழுத்தாளர், கவிஞர், இதழாசிரியர், கட்டுரையாளர், பேச்சாளர் - என்று எந்த அடைமொழியை அவர் பெயருக்கு முன்னால் போடுவது என்று. அவர் எல்லாமுமாக இருந்தார். அல்லது எல்லாமுமாக இருப்பதாகச் சொல்லிக் கொண்டு அலைந்தார். இந்த 'அலைந்தார்' என்ற சொற்பிரயோகத்தை வைத்து, அவருக்கும் எனக்கும் சுமூக உறவு இல்லை என்று நீங்கள் ஊகித்திருப்பீர்கள். உண்மைதான். ஆனால், என் வீட்டு விசேஷத்தில் அவரைத் தவிர்க்க முடியாது. அவரின் 'கனல்' மாத இதழில் என்னைத் திட்டித்திட்டி தலையங்கம் தீட்டி விடுவார்.

அவருடன் என் முதல் சந்திப்பே கொஞ்சம் சுமூகக் குறைவாகவே அமைந்து விட்டது. 'அரங்கம் நிறைந்த அந்த மாபெரும் இலக்கியக் கூட்டத்தில்' - அந்த நிகழ்வை கனல்மணி தன்னுடைய இதழில் இப்படித்தான் எழுதியிருந்தார். அரங்கம் எனப்பட்டது பத்துக்குப் பத்து அறை என்று கூட்டத்துக்கு வந்திருந்த பத்துக்கும் குறைவான நபர்களுக்குத்தான் தெரியும். 'நபர்கள்' என்பதுகூட பிசகு. ஆர்வலர்கள் என்று சொல்ல வேண்டும்.

நான் பேசி முடித்ததும் அரங்கில் இருந்த ஒன்பது பேரும் கைதட்டினார்கள். மேடையில் இருந்த ஐந்து பேரில் கனல் மணி தவிர மற்ற நால்வரும் கைகுலுக்கினார்கள். 'நல்லா பேசினீங்க தோழரே!' என்றார்கள். அவர்கள் பேசி முடித்ததும் நானும் அதே போல் சொல்ல வேண்டும். - இது இங்கு ஒரு மரபு. கனல் மணி முகத்தை உம்மென்று வைத்திருந்தார். நானாக வலிய கேட்டேன். ''ஐயா எப்படி

ப்ளீஸ்!

இருந்தது?''

''பெருமாள் கோயில் பஜனையில தொண்ணையில சுண்டல்தான் கொடுக்கணும். பாப்கார்ன் கொடுக்கக்கூடாது'' - எனக்குப் புரிவதற்குக் கொஞ்ச நேரம் ஆனது. இலக்கியக் கூட்டத்தில் நான் தனித்தமிழில் பேசாததைத் தான் அப்படிக் குத்திக் காட்டினார் கனல் மணி.

அடுத்து பேசிய கனல்மணி, தமது முதல் வாக்கியத்திலேயே இப்படித்தான் நான் டெல்லித் தமிழ்ச் சங்கத்தில் உரையாற்றியபோது என்று ஆரம்பித்தார். அவர் பத்திரிகைக்குச் சந்தா கட்டாதவர்கள் தமிழ்ப் பகைவர்கள் என்றார். மேடையில் ஒரு ருத்ர தாண்டவம் ஆடிய பின்பு, என்னிடம் ஆயுள் சந்தா வாங்கி விட்டார். என் ஆயுசுக்கும் தமிழ்ப் பகைவனாக ஆகிவிடக் கூடாது என்று நானும் கொடுத்துவிட்டேன்.



நான் சந்தா கட்டிய மறு இதழில் வந்த கட்டுரையில் 'பொன்மனச் செம்மலின் பொற்கரங்களில் தவழும் எதிர்கால எழுத்தாளன்' - என்ற தலைப்பில் எழுதியிருந்தார். கனல் மணியின் தாயார் இவரை ஈன்றெடுத்தபோது, எம்.ஜி.ஆர். மருத்துவமனைக்கு வந்ததாகவும், இவரைத் தூக்கிக் கொஞ்சியதாகவும் தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றி இவர் கழுத்தில் போட்டதாகவும் எழுதி, ஆக தோழர்களே, நான் இந்த மண்ணுலகில் தோன்றியபோதே, பொன்மனச் செம்மலின் பொற்கரங்களால் வாழ்த்தப்பட்டவன் என்று முடித்திருந்தார். கட்டுரையின் மையத்தில் சின்னதாக ஒரு கருப்பு-வெள்ளை புகைப்படம். அதில் எம்.ஜி.ஆர். ஒரு குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார். நண்பர்கள் கூடிப் பேசிக் களித்தபோது, ஒவ்வொருவரும் ஒரு சந்தேகத்தைச் சொன்னார்கள். அந்தக் குழந்தை நம்ம கனல்மணிதான்ங்கறதுக்கு என்ன ஆதாரம்?

வே.எழிலரசு

எம்.ஜி.ஆர். மேக்-அப்போட இருக்காரே - இது ஏதாவது ஷூட்டிங் ஸ்பாட்ல எடுத்த ஸ்டில்லா இருக்கும்மா. இங்க பாருப்பா எம்.ஜி.ஆர். கழுத்துலயும் சங்கிலி இல்லை. குழந்தை கழுத்துலயும் சங்கிலி இல்லை. கன்டினியூட்டி இடிக்கு தப்பா...

அட பேக்ரவுண்டைப் பாரு. ஹாஸ்பிடலே இல்லை. என்னை அபிப்ராயம் கேட்ட போது, கட்டுரை தலைப்புல எதிர்கால எழுத்தாளன்னு போட்டு இருக்காரே. அந்த எதிர்காலம் வர்றதுக்கு இன்னும் எத்தனை வருஷம் ஆகுமோ? என்றேன்.

நண்பர்கள் வீடு போய்ச் சேர்வதற்குள் கனல்மணிக்கு இந்தத் தகவல் போய்விட்டிருந்தது. அதிலிருந்து கனல்மணிக்கு என் மேல் கோபம் அதிகமாகிவிட்டது. அதற்குப் பின் ஒரு கூட்டத்தில், முகத்தைத் திருப்பிக் கொண்டார்.



"அந்தப் படத்தோட கதை என்னோடதுன்னு ஒரு ஆள் கேஸ் போட்டாரே என்ன ஆச்சு...?"

"படத்துல கதையே இல்லைன்னு சொல்லி நீதிபதி கேஸை தள்ளுபடி பண்ணிட்டாரு..."

- வ.சாரதி டேச்சு

கனல்மணியின் வீட்டில் நடைபெற்ற ஒரு வாசகர் கூட்டத்தில் கலந்து கொண்ட அன்று நான் தூக்கம் வராமல் பாயை பிராண்டிக் கொண்டிருந்தேன்.

''ஏங்க தூக்கம் வரலியா?''

''ஏய் கனல் நிஜமாவே பெரிய ஆள் தாண்டி. நான்தான் விவரம் தெரியாமல் அவரைக் கலாய்ச்சுக்கிட்டிருக்கேன்...''

''வீடு முழுக்க போட்டோதாண்டி.''

''ஒரு ஃபோட்டோவில காமராஜர்கூட நிக்கறார். இன்னொன்னுல நேரு கூட, அப்புறம் இந்திரா காந்தி கூட, அண்ணா கூட, பெரியார் கூட... எல்லா தலைவர்கள் கூடவும் நம்ம கனல்மணி நிக்கறார்டி.''

''பூஜை ரூமைப் பார்த்தீங்களா?''

''இல்லையே! ஏன்?''

''பெருமாள், முருகன், விநாயகர்கூட எல்லாம் நிக்கற ஃபோட்டோவெல்லாம் இருக்குதான்னு கேக்கத்தான்.''

''உனக்கு ரொம்பத்தாண்டி கொழுப்பு.''

''பின்ன இருக்காதா? உங்க கூட வாழறேனே... பேசாம படுங்க. அர்த்த ராத்திரியில ஃபோட்டோ ஆராய்ச்சி...''

செண்பகத்தின் மெலிதான குறட்டை ஒலியைவிட என்னை அந்த ஃபோட்டோக்கள் ரொம்பத் தொந்தரவு செய்தன.

என் மகளின் வளைகாப்புக்கு இலக்கிய நண்பர்கள் எல்லோரையும் அழைக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். ஒவ்வொருவரையும் வீட்டில் சென்று அழைப்பதற்கு நேரமும் என் உடல்நிலையும் மறுப்புத் தெரிவித்தன. பக்கத்தில் கமலாம்பாள் திருமண மண்டபத்தில் நாளை நடக்க இருக்கும் இலக்கிய விழாவுக்குப் போனால் கொடுத்து விடலாம்.

''ஏங்க அது மரியாதையா இருக்குமா?''

''நண்பர்கள்தானே கோபிச்சுக்க மாட்டாங்க.''

திருமண மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. இலக்கியக் கூட்டம் என்றாலும், தமிழ்நாட்டில் பெரிய பதவியில்

ஆன்மிகச் செய்திகள்

ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் 75-வது அவதார மஹோத்ஸவ ஆண்டையொட்டி திருவிடைமருதூர் ஸ்ரீமடத்தை பழைமை மாறாமல் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப் பல பக்தர்கள், முனைந்துள்ளனர். இங்கு நடைபெற்று வரும் பாடசாலை மாணவர்கள் தங்க வசதியான இடம். யாத்ரீகர்கள் வந்தால் தங்க அறைகள், விசாலமான சமையலறையுடன் கூடிய அன்னக்கூடம் முதலியன கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர யாத்ரீகர்களுக்குச் சாப்பாடு வசதியும், தினசரி மதியம் அன்னதானமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருப்பணிக்கு பங்களிக்க விரும்புவோர் ஸ்ரீமடத்தைத் தொடர்பு கொள்ளவும். (044-27233115)

திரு அன்னியூர் என்கிற பொன்னூரில் உள்ள திருக்கோவில்களுக்கு (பாடல் பெற்ற ஸ்தலம்) மஹாகும்பாபிஷேகம் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 26, 27, 28, 29 தேதிகளில் நடைபெற உள்ளது. மயிலாடுதுறை முதல் மணல்மேடு பேருந்துகள் (17, 17ஏ) பொன்னூர் செல்லும். நன்கொடை அளிக்க விரும்புவோர் தொடர்புக்கு:044-2489 4000, 0422-2448301

அமர்வதற்கு வாய்ப்புள்ள ஒருவர் சிறப்பு விருந்தினர் என்பதனால், நிறைய கவிச்சக்கரவர்த்திகள் கையில் சால்வையோடும் மனத்தில் எதிர்பார்ப்புகளோடும் காத்திருந்தார்கள்.

''வீட்ல வந்து அழைப்புக் கொடுக்கலைன்னு கோவிச்சுக்காதீங்க. நீங்க குடும்பத்தோட அவசியம் வரணும்...''

இப்படியே ஒவ்வொருத்தருக்கும் சொல்லி அழைப்பைக் கொடுத்தேன். சால்வை போட நின்ற வரிசையில் கனல் மணியும் நின்றிருந்தார். அவரை நெருங்கி, ''சார்.. உங்களை நான் எதிர்பார்க்கலை'' இந்த நிகழ்ச்சி அழைப்புல உங்க பேரு இல்லையே?''



''என்கிட்ட கேட்டாங்க. நான்தான் தேதி இல்லைன்னு சொல்லிட்டேன். நான் ஒத்துக்கிட்ட கூட்டம் ரத்தாயிடுச்சு. அதுக்காக வீட்ல உட்கார்ந்திட முடியுமா?''

மேடையேறி சிறப்பு விருந்தினருக்கு சால்வை அணிவிக்கும் முன்பாக தன் ஜிப்பா பாக்கெட்டில் கையை விட்டு சிறியதாக ஏதோவொன்றை வெளியே எடுத்தார் கனல்மணி. அதிநவீன வெளிநாட்டு காமிரா.

அதைத் தன்னுடன் வந்திருந்தவரிடம் கொடுத்தார். சிறப்பு விருந்தினருக்கு சால்வை போடும்போது ஒரு பிளாஷ். பக்கத்தில் தோளோடு தோள் நின்று ப்ளாஷ். வெளிச்சம் மின்னப் போவதைச் சரியாகக் கணித்து, தமது வலதுகையைச் சிறப்பு விருந்தினரின் வலது தோளின் மீது பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் வைத்துக் கொண்டார்.

வளைகாப்பு வைபவ வேலைகளின் பளுவை மறக்கத் தொலைக்காட்சியில் நகைச்சுவை சானல்களை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். எல்லாம் ஏற்கெனவே பார்த்த காட்சிகளாக வந்து தொலைந்தது. புதிய சிரிப்புக்கான ஏக்கம். தொலைக்



"பெருமாள் கோயில் பஜனையில் தொன்னையில் சுண்டல்தான் கொடுக்கணும். பாப்கார்ன் கொடுக்கக்கூடாது."

காட்சியை அணைத்துவிட்டு அன்றைக்கு வந்திருந்த 'கனல்' எடுத்துப் புரட்டினேன். எப்படியும் மாலை விசேஷத்துக்கு வரப் போகிறார். அவர் எழுதியதில் எதையாவது நல்லதைப் படித்து ரசித்ததாகச் சொல்லிக் கொள்ளலாமே - பாவம் மனுஷர் கொஞ்சம் சந்தோஷப்படுவாரே என்று படிக்கத் தொடங்கினேன். உள்ளே பதின்மூன்றாம் பக்கத்தில் அன்றைக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த தலைவரின் தோளில் கனல்மணி கைபோட்டிருக்கும் புகைப்படம். அடிக்குறிப்பாக 'கல்லூரித் தோழருடன் ஆசிரியர் கனல்மணி'. எனக்குப் பக்கென்றது. அந்தத் தலைவரின் சரித்திரம் எனக்குத் தெரியும். அவர் பள்ளி இறுதி வகுப்பு தாண்டாதவர்.

''செண்பகம் இந்த தமாஷைப் பாரேன்.''

''ஏங்க மண்டபத்துக்குப் போறதுக்குச் சாமான்களை எடுத்து வைங்க... இப்பப் போய் புக்கை விரிச்சு வெச்சுக்கிட்டு...''

விசேஷத்தில் நண்பர்கள் எல்லோரும் அவரவர்களின் மனைவியோடு வந்திருந்தது மனசுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

நண்பர்களில் கனல்மணியே வயதில் மூத்தவர் என்பதால் அவரையும், அவர் மனைவியையும் பெண்ணின் பக்கத்தில் நாற்காலி போட்டு அமரவைத்தோம். புகைப்படமும் எடுத்தோம்.

சீமந்தம் சம்பந்தமான சடங்குகள் எல்லாவற்றையும் கனல்மணியின் துணைவியார், என் மனைவியிடம் சொல்லி, ஒன்றுவிடாமல் முறையாகச் செய்ய வைத்தார். நாங்கள் எதிர்பார்த்ததை விட விழா சிறப்பாக நடந்தது. ஒவ்வொருவராகச் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்கள்.

கனல்மணியின் துணைவியார் வாசல் வரை போனவர், திரும்பி வந்து என்னைத் தனியாக அழைத்துச் சொன்னார், ''தம்பி, தப்பா நினைக்காதீங்க. இப்ப நானும் அவரும் சேர்ந்து எடுத்த ஃபோட்டோவில் எனக்கு ஒரு காப்பி கொடுக்க முடியுமா? நானும் இவரும் சேர்ந்திருக்கிற மாதிரி ஒரு ஃபோட்டோ கூட வீட்ல இல்லை.''●

உளவியலை ஓவியமாக்கி...



எஸ். சுமதி






"நான் படிச்சதை விட வரைந்ததுதான் அதிகம் ஓவியத்தை முறையா படிக்கலை. எல்லாம் அனுபவம்தான். வயலின் வாசிப்பேன். இசையை ஓவியத்தில் குழைக்க ஆசைப்படுவேன். விநாயகர் கூட எங்கிட்ட மியூஸிக்கோடதான் வருவாரு. பெண்களின் உளவியலை மையப்படுத்தி ஓவியங்களை வரைய ஆரம்பிச்சிருக்கேன். அதுதான் என் கண்காட்சியோட ஆன்மா. மனசுல இருக்குறதை அப்படியே சொல்ல அரூபஓவியம்தான் சரியானது. நடிகர் சிவகுமார் பாராட்டியதுதான் எனக்குக் கிடைச்ச பெரிய விருது'' என்கிறார் சேலம் செவ்வாய்ப்பேட்டையைச் சேர்ந்த ஓவியர் சுமதி.

- சசி

படங்கள்: சின்னராஜ்

"Tongue cleaner என்று சொல்லப்படும் நாக்கு வழிப் பானைக் கொண்டு நாக்கைச் சுத்தம் செய்வது சரியா?''

- எ.நந்தினி, மதுரை



பதில் அளிக்கிறார் பல் மருத்துவர் டாக்டர் ஜெய கிருஷ்ணா:

'நாக்கை கட்டாயம் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது பல் தேய்த்து முடித்த உடன் சுத்தம் செய்ய வேண்டும். ஆனால், அதை பல் துலக்கப் பயன்படுத்தும் (மென்மையான) பிரஷ்களை கொண்டு தான் சுத்தம் செய்ய வேண்டுமே தவிர ஒரு பொழுதும், metal tongue cleaner கொண்டு செய்யவே கூடாது. ஏனென்றால், நம் நாக்கிற்கு ருசி அறியும் தன்மை கொடுக்கும் taste budsகள் அழுத்தமான எந்த ஒரு பொருள் பட்டாலும் தேய்ந்து விடும். நமது நாக்கின் பின் பகுதியில் தான் பெரிய taste budsகள் இருக்கும். அந்த இடத்தில் தான் நாம் சாப்பிடும் சாப்பாட்டுத் துகள்கள் தங்கி, பல பாக்டீரியாக்கள் வளர வழி வகுக்கும். அதனால் கட்டாயமாக நாக்கைச் சுத்தம் செய்ய வேண்டும். சிலர் நாக்கைச் சுத்தம் செய்யும் பொழுது வாந்தி வருவது போல் இருக்கிறது எனச் சொல்வார்கள். அப்படிப் பட்டவர்கள், மிக மென்மையாக நாக்கைச் சுத்தம் செய்யலாம்.




உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

வலிப்பு நோய் எதனால் ஏற்படுகிறது... காக்காய் வலிப்பு நோய் பாதிக்கப்பட்டவர்களிடம் சாவி கொத்தைக் கொடுப்பது சரியா?

- பாலசுப்ரமணியன், சென்னை - 11

பதில் அளிக்கிறார் மூளை நரம்பியல் மற்றும் பொது மருத்துவ நிபுணர் டாக்டர் வி. நாகராஜன்.

வலிப்பு என்பது மூளையில் உள்ள செல்களின் பலவீனத்தால் வருவது. மூளையில் கட்டி அல்லது தழும்புகள் ஏற்பட்டாலும் வலிப்பு நோய் வரும். காக்காய் வலிப்பு நோயால் ஒருவர் பாதிப்படையும் பொழுது அவரை உடனடியாக ஒரு பக்கமாக ஒருக்களித்து படுக்க வைக்க வேண்டும் (அவரது வாயிலிருந்து பெருகும் உமிழ்நீர், இரைப்பைக்குள் புகாமல் இருப்பதற்காக), மரத் துண்டை துணியால் சுற்றி அவர்களது பல்லிடுக்கில் வைக்க வேண்டும், நல்ல காற்றோட்டம் இருத்தல் வேண்டும், எதையுமே சாப்பிடக் கொடுக்கக் கூடாது. குறிப்பாக சோடா, காபி கொடுப்பது ரொம்பவும் தவறு. சாவி மற்றும் இரும்புச் சாமான்கள் எதையும் கொடுக்கவே கூடாது. வலிப்பு என்பது ஐந்திலிருந்து பத்து நிமிடங்களுக்குள் தானாகவே சரியாகிவிடும். இருபது நிமிடங்களுக்கு மேலாகியும் நினைவு திரும்பாத பட்சத்தில் மருத்துவமனைக்கு அந்நோயாளியை உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும்.



முகம் பொலிவாகவும், இளமையாகவும் இருக்க என்ன செய்ய வேண்டும்?

- சூர்ய தீபா, தஞ்சாவூர்

பதில் அளிக்கிறார், வயது நிர்வாக நிபுணர் டாக்டர் கௌசல்யா நாதன்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற ஒரு கூற்றின் படி, மனம் என்பது எப்பொழுதும் அமைதியாக, அழுத்தம் எதுவும் இல்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். மனம் அமைதியில்லாமல் இருந்தால் முகத்தில் உள்ள தசைகளை அது பாதித்து முகத்தில் சுருக்கங்கள் தோன்ற ஆரம்பிக்கும். முகத்தை எப்பொழுதும் கடுகடுப்பாக வைத்து கொள்வதும் தவறு. குறிப்பாக பெண்கள், மருத்துவ ஆலோசனை இல்லாமல், திடீரென உடல் எடையை 10 கிலோ ஏற்றுவது பிறகு ஒரேடியாக 15 கிலோவை குறைப்பது போன்ற செயல்களைச் செய்வதால் முகம் எலாஸ்டிக் தன்மையை இழந்து சுருக்கங்கள் தோன்ற ஆரம்பிக்கும். நாளமில்லா சுரப்பிகள் சரிவர இயங்காமல் இருந்தாலும், முகத்தில் சுருக்கங்கள் வரும். மன உளைச்சல், தூக்கமின்மை, கோபம், சத்தான உணவை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது, கடையில் கிடைக்கும் மேக் அப் சாதனங்களை உபயோகப்படுத்துவது - இவை எல்லாமே முகத்தில், கண்ணைச் சுற்றி சுருக்கங்கள் தோன்ற வழி வகுத்து விடும்.



கல்கி கிளினிக்

கரூரில் இந்து முன்னணி மாநில மாநாட்டை ஓஹோவென்று எழுச்சியுடன் நடத்திய மகிழ்ச்சியில் இருக்கிறார் அதன் மாநிலத் தலைவர் இராம.கோபாலன். எண்பத்தி மூன்று வயதிலும் ஓய்வில்லாமல் தொடர் பயணம் மேற்கொள்கிறார். பெரியார்தாசனை அடுத்து பல வி.ஐ.பி.கள் மதம் மாறியபடியிருக்க இப்போது விசாலி கண்ணதாசனும் அப்பட்டியலில் சேர்ந்திருக்கிறார். இதுபற்றி இராம கோபாலன் அவர்களைச் சந்தித்து பேசிய போது...



மதம் மாற்றுவோரை மன்னிக்க மாட்டோம்!

செம்மொழி மாநாடு?

ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோர் ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டு தான் தமிழை வளர்த்தார்கள் என்பது கருணாநிதி உட்பட எல்லோருக்கும் தெரியும். ஆனால், இந்த மாநாட்டில் ஆன்மிக அமர்வுக்கு இடமளிக்காதது தமிழுக்குச் செய்த பெரிய துரோகம். ஐந்து முறை முதல்வராக இருந்தார் கருணாநிதி என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அப்படியென்றால் தமிழை, ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், ஏன் இதுவரை அழுத்தமாக அமுல்படுத்த முடிய வில்லை? உண்மையைச் சொல்லப் போனால் கருணாநிதி குடும்பத்தினர் முன்னிறுத்தப்பட்டு, வரக்கூடிய சட்ட மன்றத் தேர்தலுக்காக நடத்தப்பட்ட மாநாடு.


இந்து முன்னணி மாநில மாநாடு!

கரூரில் கூடிய நாங்கள் முக்கியமாக வலியுறுத்தியது இந்துக்களுக்குச் சமநீதி;

சம உரிமை மற்றும் சமவாய்ப்புதான். வோட்டு வங்கி அரசியலில் வறுமையில் வாடும் சிறுபான்மையோருக்கு கல்வி உதவித் தொகை, வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு என்றெல்லாம் வாரி வழங்குகிறார்கள். ஆனால், இந்துக்களின் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைக் கண்டு கொள்வதில்லை. ஏன் இந்த பாகுபாடு?

கோயில்களை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டுமா?

கோயில்கள், இந்து சமூகத்தின் செயல்பாடுகளுக்கான மையத்தளம். பக்தவத்சலம் காலத்தில் இந்து அறநிலையத் துறையை ஏற்படுத்தி கோயில்களை அரசே எடுத்துக்கொண்ட அநியாயம் நடந்தது. கோயில்கள் அயோக்கியர்களின் புகலிடம் ஆனது. கோயில் சொத்துக்கள் கொள்ளை போயின. கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டார்கள். நமது தமிழகத்தில் 36441 கோயில்கள் உள்ளன. இவற்றுக்கு நாலே கால் லட்சம் ஏக்கர் நன்செய், புன்செய், மானாவாரி நிலங்கள் உள்ளன. 22,600 கட்டடங்கள் இருக்கின்றன. வரவேண்டிய குத்தகை மற்றும் வாடகை பாக்கி 33 கோடிக்கு மேல். முஸ்லிம்களும் கிறித்துவர்களும் அவரவர் வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்கும் போது இந்துக்கள் என்ன இளிச்சவாயர்களா? தெய்வபக்தி நிறைந்த, ஓய்வுபெற்ற நீதிபதிகள், அதிகாரிகள் மற்றும் சமூகப் பெரியவர்கள் கொண்ட வாரியத்தை உடனடியாக ஏற்படுத்தி கோயில்களை அதனிடம் ஒப்படைக்க வேண்டும்.



''நாங்கள் நாடுவது நல்லிணக்கமே!

- பேராயர் வின்சென்ட் சின்னதுரை (தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர்)

கிறித்துவர்களில் ரோமன் கத்தோலிக்க மற்றும் தென்னிந்திய திருச்சபை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மதமாற்ற விவகாரங்களில் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ஆனால் கிறித்துவர்களில் பெந்தகோஸ்தே உட்பட பல சிறு, சிறு பிரிவுகள் நிறைய உள்ளன. சமீபகாலமாக இவர்கள் செய்யும் அதிரடி மற்றும் ஆக்ரோஷமான பிரச்சாரம் மாற்றுமத, மக்களைக் கவர்ந்திருக்கக் கூடும். தலித்துகள் கிறித்துவர்களாக மாறிய பின்பும் தீண்டாமை கொடுமை அவர்களைத் தொடர்வது மிகப் பெரிய அவலம்தான். மற்றபடி விசாலி கண்ணதாசன் மதம் மாறியது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. வறுமை, சமூக அந்தஸ்து போன்றவை மதமாற்றத்துக்கு காரணங்களாகச் சொல்லப்பட்டாலும் ஆன்மிகத் தேடல் பலர் மனத்தை மாற்றி விடுகின்றது. அந்த வகையில் பெரியார்தாசன், அப்துல்லா ஆகிவிட்டார். விசாலியும் அப்படிப்பட்ட தேடல் பயணத்தில் இருக்கலாம்.

தொடர்ந்து நிகழும் மதமாற்றம்?

இப்போது தலித்துகள் மட்டும் மதம் மாறவில்லை. பிராமணர், முதலியார் என்று பல்வேறு இந்துக்கள் பிரிவிலிருந்தும் மதம் மாறுகிறார்கள். ஆகவே, தீண்டாமை கொடுமைதான் மதமாற்றத்துக்குக் காரணம் என்ற வாதமும் அடிபடுகிறது. ஆனால் மதம் மாறிய பிறகும் இவர்கள் ஏழ்மை நிலை மாறுவதில்லை. சரி, சமூக ஏற்றமாவது கிடைக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. கிறித்துவர்களில் மதம் மாறிய தலித்துகளுக்கும் மற்ற ஜாதி கிறித்துவர்களுக்கும் மோதல் தொடர்கிறது. முஸ்லிம்களில் உருது மொழி பேசுபவர் உயர்ந்த பிரிவாக கருதப்படுகிறார்கள். அவர்கள் லப்பை போன்ற தமிழ் பேசும் முஸ்லிம்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதில்லை. அப்புறம் என்ன சமத்துவ சமுதாயம்? ஆனால் முஸ்லிம்களில் ஏழையாக இருந்தாலும் மதத்தின் மீது பிடிப்பும் கட்டுப்பாடும் இருக்கிறது. அவர்கள் தடுமாறுவதில்லை. ஆனால் இந்து மக்கள் தடுமாறி மதம் தாவுவது பெரிய அவமானம். இந்த விஷயத்தில்

மதம் மாறியும் மாறாத வாழ்க்கை!

- சிவகாமி ஐ.ஏ.எஸ்

மதம் மாறுவது என்பது ஒருவரது தனிப்பட்ட தேர்வு, விருப்பம். தற்போது நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மக்கள் கிறித்துவர்களில் ஒரு பிரிவான பெந்தகோஸ்து என்ற அமைப்பில் சேருவது அதிகமாகி வருகிறது. ஆனால், இவர்கள் இப்படி மாறுவதனாலேயே அவர்கள் ஏழ்மை நிலையில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. இது தவிர, சமுதாயத்தில் மதிப்பும், கௌரவமும் கிடைக்க மதம் மாறுகிறார்கள் என்று வைத்துக் கொண்டால் கூட, அதுவும் ஏமாற்றமாகவே இருக்கிறது. வன்னிய கிறித்துவர்களும், தலித் கிறித்துவர்களும் வழிபாட்டுத் தலம் விவகாரத்தில் மோதிக் கொண்டது சமீபத்திய வரலாறு. எனவே, மதம் மாறிய பிறகும் தீண்டாமை அவர்களை விட்டுவிடவில்லை. சமத்துவம் பேசும் கிறித்துவ குருமார்கள் தனிச்சலுகையையோ, ஒதுக்கீட்டையோ ஒப்புக் கொள்ள மாட்டார்கள். சுப்ரீம்கோர்ட்டின் மூன்று தீர்ப்புகளில் பகுத்தாய்ந்து பார்த்தால் கிறித்துவராக மாறிய ஒருவர் மீண்டும் இந்துவாக மாறும்பட்சத்தில் இடஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பது தெரியும்.



மாறியது நெஞ்சம்; மாற்றியது யாரோ?

கவிப்பேரரசு கண்ணதாசன் மகள் விசாலி கண்ணதாசன் கிறித்துவராக மதம் மாறியது அவரது நண்பர்கள் மற்றும் உறவினர்களிடையே பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ''அவர் ஒரு சிவபக்தர். ஞாயிறு அன்று பன்னிரு திருமுறை வகுப்புகளுக்குப் போவார். அவர் கணவரும் கிறித்துவரல்ல; 'உனது அப்பா அர்த்தமுள்ள இந்துமதம் எழுதியவராயிற்றே என்றால், 'அவரேதானே 'ஏசுகாவியம்' எழுதினார்'' என்கிறார். ப்ரேயர் மூலமாக ஹீலிங் என்கிற, கிறித்துவர்களின் ஒரு பிரிவினரின் பிரச்சார பாதிப்புக்கு அவர் உள்ளாகிவிட்டார் என்று கருதுகிறேன்'' என்கிறார் அவரது குடும்ப நண்பர். விசாலியின் கருத்தை கேட்கலாம் என்று செல்லில் தொடர்புகொண்டால் மூன்று நாட்களாக அணைக்கப்பட்ட நிலையில் இருந்தது.





விழிப்புணர்வு ஊட்டுவது எங்கள் முக்கிய பணி.

எல்லா மதங்களும் அன்பைத்தானே சொல்கின்றன?

இது மாதிரி பேசிப் பேசியே புத்தி கெட்டுப் போனான் இந்து. இந்துக்கள் 'அறத்தினால்' அழிந்து போகிறார்கள். நாம் நமது பண்பாட்டை, கலாச்சாரத்தை தெரிந்து கொள்வதில்லை. இதைச் சாதகமாக எடுத்துக் கொண்டு மதம் மாற்றும் கிறித்துவர்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். மன்னிக்க மாட்டோம்.

முஸ்லிம்களும், கிறித்துவர்களும் அவரவர் வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்கும் போது இந்துக்கள் என்ன இளிச்சவாயர்களா?

விசாலி கண்ணதாசன் கிறிஸ்துவத்துக்கு மதமாற்றமானது பற்றி...

அப்பாவின் 'அர்த்தமுள்ள இந்துமதம்' புத்தகங்களை மகளே படிக்கவில்லை என்றுதான் தெரிகிறது. வாத்தியார் பிள்ளை மக்கு; வைத்தியர் பிள்ளை சிக்கு என்பது போல அந்த மாபெரும் கவிஞருக்கு இப்படிப்பட்ட மகள். வருத்தப்படுவதைத் தவிர வேறுவழியில்லை. அவர் அப்பா 'ஏசுகாவியம்' எழுதினாரே தவிர கிறித்துவராக மாறவில்லையே! கண்ணதாசன் ஆவி இவரை மன்னிக்காது.

நித்தியானந்தா?

அவர் சாமியாரல்ல; யோகமும் தியானமும் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர். காஷ்மீரில் சைவத்தைக் கடைபிடிக்கும் சாதுக்கள் சிலருக்கு சராசரி வாழ்க்கை விலக்கல்ல. அதைத்தான் நித்தியானந்தா கடைபிடிக்கிறார். தமக்கு அருளப்பட்ட சித்திகளைத் தவறாகக் கையாண்டுவிட்டார்.

– ப்ரியன்

புதிய பகுதி

இந்தியா பாலிமிடிவ்

''நினைச்சுப் பார்த்தா பிரமிப்பா இருக்குன்னு எல்லாரும் சொல்லுவாங்க. நாங்க அப்படிச் சொல்ல மாட்டோம். எங்க ரெண்டு பேரைச் சேர்த்து மொத்தம் ஆறு பேரோடு ஆரம்பிச்ச பொம்மிஸ் நைட்டீஸ், இன்னிக்கு அறுநூறு பேரு, ஆத்மார்த்தமா வேலை செய்யற நிறுவனமா வளர்ந்திருக்கு'' என்கிற ராஜாவின் முகத்தில் சாதித்த வெளிச்சம். பொம்மிஸ் நைட்டீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்களில் ஒருவர் இவர். நிறு வனம் வளர்ந்த கதையைத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் இந்தச் சாதனையாளர்களின் முன்கதை இது.

''சட்டம் படிச்சிட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் கோர்ட்ல ஆறு மாதம் ஜூனியர் வக்கிலா அல்லாடிக்கிட்டிருந்தேன். என் உறவுக்காரர் இனிக்கோ இன்பராஜ் பொறியியல் முடிச்சிட்டு, சென்னையில ஏதோ அலுவலகப் பணியில் இருந்தார். ரெண்டு பேருமே இளைஞர்கள். ஊருக்கு வந்த நேரத்துல ஒரு பாலத்துல உட்கார்ந்துப் பேசிக்கிட்டிருந்தோம். பேச்சு எங்கெங்கிட்டோ சுத்திட்டு, கடைசியில நாம ரெண்டு பேரும் சேர்ந்து சொந்தமா தொழில் தொடங்கினா என்னங்கற மையப் புள்ளியில வந்து நின்னுச்சு'' என்று பொம்மிஸ் நைட்டீஸ் நிறுவனத்துக்கு பிள்ளையார் சுழி விழுந்த கதையைச் சொல்கிறார்...

''அப்ப தளவாய்புரத்துல ரெடிமேடு தைக்கிறது, நைட்டி தைக்கறதுன்னு பரவலா வேலைகள் நடந்துக்கிட்டு இருந்துச்சு. நாங்க ரெண்டு பேரும் துணிச்சலா அதுல இறங்கினோம். படிச்ச படிப்புக்கு ஏற்ற வேலை பார்க்காம இந்தத் தொழிலுக்குள்ள வந்துட்டாங்கன்னு பரிகாசமா பார்த்தாங்க. ஏளனமாப் பேசுனாங்க. நாங்க கண்டுக்கலை. உற்பத்தியான சரக்குகளை வித்து முதல் பண்றதுலதான் குறியா இருந்தோம். வாடகைக் கார்ல எடுத்துப் போட்டுக்கிட்டு ஊர் ஊரா ரவுண்டு அடிச்சோம். தளவாய்புரத்துலேர்ந்து கார்ல போய் ஆர்டர் பிடிச்ச முதல் நிறுவனம் பொம்மிஸ்தான். அது போல சொந்தமா கார் வாங்கின முதல் கார்மெண்ட்ஸ் நிறுவனமும் பொம்மிஸ்தான். சரக்குகள் சடசடன்னு வித்துச்சு. நாங்க உற்சாகமானாலும், ஏழு வருஷம் ரொம்பச் சிரமப்பட்டோம். ஏன்னா... எங்க 'பொம்மி நைட்டீஸ்' மத்த கம்பெனி சரக்குகளைவிட ரேட்டு கொஞ்சம் கூடுதல். காரணம், அதனோட தரம். எந்தக் காலத்துலயும் விற்பனையை அதிகரிக்க வேண்டி, தரத்தைக் குறைக்கறதுன்னு காம்ப்ரமைஸ் ஆகிடக் கூடாதுன்னு தீர்மானமா இருந்தோம். தமிழ்நாட்டுப் பெண்களோட கவனம், எங்க நைட்டீஸ் பக்கம் எட்டிப் பார்க்கத் தொடங்கிச்சு'' என்கிற இனிகோ இன்பராஜ் இப்போதும் ஆர்டர் பிடிக்க கார் எடுத்துக்கொண்டு பம்பரமெனச் சுற்றி வருகிறார்.

''விலை கொஞ்சம் அதிகமானாலும்,

தரமான நைட்டீஸ் வாங்கணும்ங்கற மனோநிலை மங்கயைர் மனசுல தோன்றியது. வாடிக்கையாளர்கள் எங்க தயாரிப்பு மேலயும் வெச்சிருந்த நம்பிக்கை கூடிச்சு. இந்தத் தொழில்ல முதன்முதலா ஆர்.சி. எடுத்து, பில் புக் அடிச்சு, பில் போட்டு வியாபாரம் செஞ்சது நாங்கதான். அந்தச் சமயத்துலயும், இந்தத் தொழில்ல எங்களை விட பெரிய ஆளா இருந்தவங்க, எங்கள நக்கல் பண்ணினாங்க. நாங்க கண்டுக்கலை. எங்களோட தொழில் வளர்ச்சியில முனைப்பா இயங்கினோம்'' என்கிற ராஜா போலியோவினால் பாதிப்புக்குள்ளானவர்.

''ஆரம்பிக்கும்போது வெறும் முந்நூறு சதுர அடி ஹால்தான். இப்ப முப்பதாயிரம் சதுர அடி பரப்பளவு கட்டடங்கள்ல, எங்க தயாரிப்பு நிறுவனம் இயங்கி வருது. அறுநூறு தொழிலாளிகள்ல முப்பது பேர், காதுகேளாத வாய் பேசாத மாற்றுத் திறனாளிகள்.

''ஆடைகள் தயாரிப்பில் தரமும், தொழிலாளர் வாழ்வின் நலனும் எங்களுக்கு ரெண்டு கண்களைப் போன்றது. எங்ககிட்ட வேலை செய்யறவங்களுக்குச் சொந்த வீடு என்கிற திட்டத்தில், முதல் கட்டமாக இப்ப முப்பது வீடுகள் கட்டிட்டு இருக்கோம். லாப நோக்கம் இல்லாமல் மிகக் குறைந்த தொகையினை மாதச் சம்பளத்தில் பிடித்தம் செய்யும் திட்டம் இது! இத்திட்டம் மேலும் மேலும் விரிவு படுத்த இருக்கோம். இன்னும் அஞ்சு வருஷத்துக்குள்ள, எங்க நிறுவனத்துல ஐந்தாயிரம் பேர் வேலை செய்யிற அளவுக்கு, உயர்த்தணும்ங்கறதான் எங்களோட இலக்கு; இலட்சியம்!'' எனக் கூறுகிறார் பொம்மிஸ் நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான இனிகோ இன்பராஜ்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



● ராஜா

● இனிகோ இன்பராஜ்

வட்டமேஜை



'கேர்ஃபுல்லா ஹேண்டில் பண்ணணும்!"

● 'சிக்ஸர் மேரேஜ்' தோனி -சாக்ஷி பத்தி அவ்வளவு அகலமா, ஆழமா எழுதினீங்களே. அம்மணி வந்த நேரத்தில் தோனி 200 கோடிக்கு புக்கிங் ஆயிருக்காரே இதை எழுதியிருக்க வேண்டாமா? இதையெல்லாம் கேர்ஃபுல்லா ஹேண்டில் பண்ணணும்.

- எம்.ராஜன், மதுரை-10

● பிரகாரங்கள் 'செல்வர்க்கழகு செழுங்களை தாங்குதல்' என்கிற தாத்பரியத்தை உணர்த்துகின்றன என்று ஸ்ரீநிவாசராகவன் சொல்வது வெகு அழகு!

- சி.அனுஷா, சென்னை

● வில்லிபுத்தூர் வைபவம் அட்டையே அசத்தியது.

- நித்யா பாலாஜி, ஜமீன் பல்லாவரம்

● ஊர்வசி கூறும் செய்திகள் சரவெடியாய்ச் சிரிக்க வைக்கின்றன.

-ஏ.பி.எஸ். ரவீந்திரன், வள்ளியூர்

● கவிதை கஃபேவில் வெளியிட்டிருந்த கவிதைகளும் மணம், குணம், நிரம்பிய ஃபில்டர் காப்பியாக ஈர்த்தது.

-அ.கு.கிருஷ்ணன், புதுச்சேரி-4

● சிவகாசி/விருதுநகர் பற்றிய தகவல்களை பூவாணம் பட்டாசுகள் போல் வெடித்துத் தெளித்திருந்தவிதம் சிறப்பாயிருந்தது.

- சி.மகேஷ், திருச்சி-17

● 'மதராசபட்டணம்' படத்தை நன்கு அனுபவித்து அசத்தலான விமர்சனம் எழுதியிருக்கிறீர்கள்.

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

● சில்லரை வணிகத்தில் வெளிநாட்டு வணிக நிறுவனங்களின் முதலீடு, மக்களுக்கு லாபம்தான் என்பது அரசின் தொலைநோக்கு இல்லாத வெறும் சப்பைக்கட்டு. கரும்பை அழித்து, கஞ்சா பயிரிட்டு லாபம் பெறலாம் என்று நியாயப்படுத்தினால், அரசு அனுமதிக்குமா?

- துரை ராஜசேகரன், பொள்ளாச்சி

● விருதுநகர் ரைட்டர்ஸ் பகுதியில் இராஜபாளையத்தைச் சார்ந்த பன்மொழி புலவர் மு.கு.ஜகந்நாதராஜா, குறிஞ்சி செல்வர் கொ.மா. கோதண்டம்.. ஆகியோரை இணைத்திருக்கலாம்!

- மதுமிதா, இராஜபாளையம்

மை... பைக்!

அப்போது எனக்கு வயது பதினொன்று. ஐந்தாம் வகுப்பு பரிட்சை எழுதிவிட்டு லீவில் இருந்த நேரம். சைக்கிள்கூட ஒழுங்கா ஓட்டத் தெரியாத பருவம். ஒருநாள் எங்க வீட்டுக்கு அப்பாவின் ஃப்ரெண்ட்டு 'கெனடிக் மெஜஸ்டிக்' வண்டியில வந்திருந்தார். அவர் வாசலில் வண்டியை நிறுத்தி உள்ளே போனதும் நான் ஏறி உட்கார, என் ஃப்ரெண்ட்ஸ்கள் பின்னால் தள்ளிவிட, எதிரே வந்த மாமா வண்டியை ஸ்டார்ட் செய்து தர முதல் முறையாக ஓட்டத் தெரியாமலேயே ரெண்டு மணி நேரம் ஓட்டியது



ஃபஸ்ட் மட்டுமல்ல பெஸ்ட் அனுபவமும் கூட.

- சத்யசேகர், சென்னை



இயந்திரத் துணைவன்!

என் ஸ்கூட்டரை நான் இயந்தரமா இதுவரை நெனச்சதே இல்லை. சரியான நேரத்துக்குப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்லும் தோழன் மாதிரி ஃபீல் பண்றேன். என் மகன் எல்.கே.ஜி. படிக்கிறப்ப இந்த வண்டியில வர்றதுக்கு அடம் புடிப்பான். அப்படி வந்துட்டா அவன் மூகத்தில் பெருமையும், பூரிப்பும் இருக்கும். இப்போ +2 வந்துட்டான். இப்பவும் இந்த வண்டித்தான் ஓட்டுறேன். இப்பவும் என் மகன் இந்த வண்டியிலப் போக ப்ரியப்படுவான். எங்க வீட்டுல ஒருத்தரா இதை மெயின்டன்ஸ் பண்றேன். நம்பிக்கையும் தைரியம் தர்றவங்கதானே பெஸ்ட் ஃப்ரெண்ட்? என் ஸ்கூட்டி என் ப்ரெண்டு!


- பூங்கொடி, கோவை

உங்க பைக் அனுபவத்தை 'மை பைக்' என்று குறிப்பிட்டு எழுதிஅனுப்புங்க.
kalki@kalkiweekly.com-க்கும் அனுப்பலாம்.
செல்ஃபோனில் KACON என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ்விட்டு உங்கள் அனுபவம், பெயர், ஊர் ஆகியவற்றுடன் **562632** என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

சுரேஷ், சென்னை-5.

குளிகை நேரம் என்பது நல்ல நேரமா? கெட்ட நேரமா?

குளிகை நேரம் என்பது ஒரு நல்ல நேரம். இக்காலத்தில் எதைச் செய்தாலும் அதை மீண்டும் மீண்



கோமதி, திருநெல்வே

என் மகளுக் ஏழரை நாட்டுச் ச நடைபெறுகின்றது இப்பொழுது தி மணம் நடத்தலாமா

நடத்தலாம்.

சங்கீதா, சேலம்-3

உறங்கும் போ எந்தத் திசையி

பளிச் பரிகாரம்

டும் செய்ய நேரிடும். வாழ்க்கையில் எவையெல்லாம் மீண்டும் மீண்டும் நடந்தால் நல்லதோ அவற்றை மட்டுமே குளிகையில் செய்ய வேண்டும். வீடு வாங்குவது, பத்திரப்பதிவு செய்வது, தங்கம், வெள்ளி வாங்குவது, துணி மணி வாங்குவது, கடன் அடைப்பது, வாகனங்கள் வாங்குவது, அயல்நாட்டுப் பயணம் மேற்கொள்வது, சேமிப்புகள் துவங்குவது போன்றவற்றை குளிகை நேரத்தில் செய்தால் அவை மீண்டும் மீண்டும் நிகழும். திருமண முகூர்த்தம் குளிகை நேரத்தில் வைத்தால் மறுமணம் நடக்கும் வாய்ப்பு ஏற்படும். இதைத் தவிர்க்க வேண்டும். அறுவைச் சிகிச்சை போன்ற ட்ரீட்மெண்ட் குளிகையில் தவிர்க்கப்பட வேண்டும். அசுப காரியங்கள் குளிகையில் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.



தலைவைத்துப் படுக்க வேண்டும்?

வடக்கில் மட்டும் தலைவைத்துப் படுக்கக் கூடாது.

ராதா பாஸ்கர், மும்பை.

நாங்கள் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பதால் வீட்டில் துளசி மாடம் வைத்துக் கொள்ள முடியவில்லை. அதற்கு பதில் என்ன செய்யலாம்?

துளசிச் செடியின் படத்தை வைத்து லக்ஷ்மி தேவியின் சுலோகங்களைச் சொல்லி வழிபடுங்கள்.

கதிர்வேல், தூத்துக்குடி.

மாலை ஆறு மணிக்கு மேல் ஜோதிடம் பார்க்கக் கூடாதா?

பார்க்கலாம். மிகப்பழைய காலத்தில் மின்சார வசதி கிடையாது. அப்பொழுதெல்லாம் ஜாதகங்கள் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டிருக்கும். ஒரு சிறிய

உங்கள் கேள்விகளை ஜாதகக்குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...

kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



தீபத்தின் ஒளியில் ஜாதகம் பார்க்கும்போது தவறுகள் நேர்ந்துவிட வாய்ப்புகள் அதிகம் உண்டு என்பதால் அவ்வாறு ஒரு பழக்கம் இருந்தது. இப்பொழுதும் பட்சி சாஸ்திரத்தின் அடிப்படையில் ஜோதிடம் பார்ப்பவர்கள் மாலை 6 மணிக்கு மேல் பார்க்க மாட்டார்கள்.

ராஜேஸ்வரி, திருச்சி.

பத்து வயதாகும் என் மகளுக்கு வாக்கியப் பஞ்சாங்கப்படி பூசம் நட்சத்திரம் 4ம் பாதம், திருக்கணிதப் பஞ்சாங்கப்படி ஆயில்யம் முதல் பாதம். இவை இரண்டில் எதைப் பின்பற்றுவது?

என் வோட்டு வாக்கியப் பஞ்சாங்கத்திற்கே. நீங்கள் கோயில்களில் அர்ச்சனை செய்யும்போது இனி பூசம் என்று சொல்லிச் சங்கல்பம் செய்யலாம். திருமணத்திற்கு வரன் பார்க்கும்போது வாக்கியப் பஞ்சாங்கநகலைப் பயன்படுத்துங்கள். அதுதான் சரி.



பூமா ஸ்ரீநிவாசன், பெங்களூரு-52.

என் கணவர் ஆறு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர் இருக்கும்போதே என் மகனுக்குத் திருமணம் நிச்சயம் செய்துவிட்டோம். ஆவணி மாதக் கடைசியில் முகூர்த்த நாளும் குறித்து விட்டோம். அந்தத் திருமணத்தை இப்பொழுது நடத்தலாமா கூடாதா என்பதில் எங்கள் குடும்பத்தில் பெரிய குழப்பம் உள்ளது. தயவுசெய்து வழிகாட்டவும்.

குறித்த முகூர்த்த நாளில் திருமணம் நடத்தலாம். உங்கள் கணவர் இறந்து ஒரு வருடம் ஆன பிறகுதான் திருமணம் செய்ய வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. அவரின் கடைசி ஆசையை நிறைவேற்றி வையுங்கள். அந்த ஆத்மா சாந்தியடையும்.

ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

காங்கிரஸ் மேடைகளில் பிரசார அணுகுண்டாக இருந்த தமிழ்நாடு காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் நெல்லைக் கண்ணன், இப்போதெல்லாம் இலக்கிய மேடைகளில் மட்டும்தான் காணப்படுகிறார். ''தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களுக்கு சுய கௌரவமும் இல்லை; தன்மானமும் இல்லை. எனவே கருணாநிதி காலில் காங்கிரஸைக் கிடத்திவிட்டு, கூட்டணி பலத்தில் வென்று பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டு கோஷ்டி அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கனல் கக்குகிறார் நெல்லை கண்ணன்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ்?

''இப்போதுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களை, காங்கிரஸ் தலைவர்கள் என்பதை விட கூட்டணித் தலைவர்கள் என்று அழைக்கலாம். தேர்தலுக்கு தேர்தல் காங்கிரஸ் தொண்டர்களின் உழைப்பில் குளிர் காய்வதால் உழைப்புத் திருடர்கள் என்று கூட சொல்லலாம். இவர்கள் காங்கிரஸ் அலுவலகமான சத்தியமூர்த்தி பவனுக்கு செல்கிறார்களோ என்னவோ கோபாலபுரத்துக்குப் போய் கோடி அர்ச்சனை செ[ய்து]விட்டு வந்துவிடுவதை கடமையாக வைத்திரு[க்]கிறார்கள். இவர்கள்தான் இப்படியென்றால் தில்[லி]யிலிருந்து வரும் சோனியா காந்தியும், பிரதமரு[ம்] அறிவாலயத்துக்குச் செல்கிறார்களே தவிர, கட்[சி] அலுவலகம் எங்கே இருக்கிறது என்றுகூட கேட்[ப]தில்லை. மத்தியில் ஏழு அமைச்சர்களை வாங்கி[க்] கொண்டு காங்கிரஸையே மிரட்டிக் கொண்டிரு[க்]கிறார் கருணாநிதி. இதையெல்லாம் பார்த்து மனம் வெதும்பிய சமயத்தில்தான் சென்னை வந்த ராகுல் காந்தி ''அவசியமில்லாதபோது எதற்கு கருணாநிதியைச் சந்திக்க வேண்டும்'' என்று கேட்டதன் மூலம் காங்கிரஸை தலை நிமிர்த்தி வைத்தார். எனவேதான் அவருக்கு 'தமிழகத்தில் காங்கிரஸ் என்ன செய்ய வேண்டும்'



கருணாநிதி காலடியில்



ன்று மின்னஞ்சல்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.

என்ன செய்ய வேண்டும்?

காங்கிரஸுக்குப் பதினைந்து சதவிகித ஓட்டுக்கள் உண்டு. இரு திராவிட கட்சிகளுடன் கூட்டு இல்லை என்றால் இன்னும் ஒரு ஐந்து சதவிகிதம் கூடி, இருபது சதவிகிதம் காங்கிரஸுக்கு விழும். எனவே கட்சியை பலப்படுத்துகிற அதே வேளையில் வரும் சட்ட மன்றத் தேர்தலில் தே.மு.தி.க., இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் கொங்கு பேரவையுடன் இணைந்து காங்கிரஸ் தேர்தலைச் சந்தித்தாலே 80, 90 இடங்கள் வரை பெற முடியும். ராகுலுக்கு இந்தக் கருத்தை எழுதியிருக்கிறேன். "தில்லித் தலைவர்கள் காங்கிரஸ் அலுவலகத்துக்குப் போக



காங்கிரஸ்!

நெல்லை கண்ணன் பேட்டி

வேண்டும்" என்று ராகுலுக்கு எழுதிய பிறகுதான் சோனியா காந்தி கூட சத்தியமூர்த்தி பவனுக்குச் சென்றார். ராகுலுடைய செயல் திட்டங்கள் மட்டுமே தமிழ்நாட்டில் காங்கிரஸைத் தூக்கி நிறுத்தும்.

கருணாநிதி - ஜெயலலிதா?

கருணாநிதியை ஒப்பிடுகிறபோது ஜெயலலிதா இன்னமும் சிறப்பான தலைவர். நல்ல நிர்வாகி. ஆனால் அணுகுமுறை வெவ்வேறு. 87 வயது முதியவர் கருணாநிதி, தமிழ் நாட்டுக்காக என்று சொல்லி குடும்ப நலத்துக்காக சக்கர நாற்காலியில் தில்லி வரை சென்று எல்லோரையும் பார்ப்பது மட்டுமல்லாமல் திருமாவளவன் கட்சித் தொண்டர் வரை அனுசரித்துப் போகிறார். ஆனால் ஜெயலலிதா அநாகரிகமாக நடந்து, தேசியத் தலைவரான சோனியாவையே அவமதிக்கிறார். எல்லோரும் வந்து தன்னைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார். இவரை விட பெரிய தேசிய தலைவர்கள் இவரை அவ்வாறு சென்று பார்க்க வேண்டுமா? எம்.ஜி.ஆர். செல்வாக்கில் கட்சி நடத்திக் கொண்டிருப்பதை ஜெயலலிதா உணர வேண்டும்.

கலைஞரின் சாதனைகள்?

இலவசங்கள் கேலிக்கூத்து. ஒரு கையால் இவற்றைக் கொடுத்துவிட்டு, டாஸ்மாக் மூலம் பிடுங்கி, ஏழை மக்களை ஒட்டாண்டியாக்கிவிடுகிறார். குடிதண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டுமானங்களில் ஒரு முன்னேற்றமும் இல்லையே. சென்னையில் மின்சாரம் கொடுத்து விடுகிறார். மற்றபடி தமிழ்நாடு இருட்டில் அல்லவா இருக்கிறது. நிதி நிலைமை படுமோசம். ஆட்சி மாறினால் எல்லாம் அம்பலமாகும்.

- ப்ரியன்

❓ சம்பளப் பாக்கிகள் மூலம் வந்த ரூபாய் ஒரு லட்சத்தை ஏதேனும் மியூச்சுவல் பண்டுகளில் முதலீடு செய்யத் திட்டம். மியூச்சுவல் பண்டுகளில் முதலீடு செய்வது சரியா?

- சுரேஷ், பெங்களூர்

மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்வது சரியானதுதான். உங்களுடைய ரிஸ்க் எடுக்கும் தகுதியையும் முதலீட்டு காலத்தையும் மனத்தில் கொண்டு எந்த மாதிரியான பண்டில் (லிக்விட்/குரோத்/

உங்கள் கேள்விகளை 'முதலீடு மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.com -க்கும் அனுப்பலாம். செல்போனில் KAFIN என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

பேலன்ஸ்ட் போன்ற) முதலீடு செய்யலாம் என்று முடிவு செய்ய வேண்டும். ஒரு பண்டில் பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னால் அதனுடைய திட்ட வெளியீட்டு அறிக்கையை (ஆஃபர் டாக்குமெண்ட்) படித்துப் பார்த்து அந்த பண்டின் முதலீட்டுக் கொள்கைகள் ஓரளவுக்காவது உங்கள் எண்ணத்துக்கும் முதலீட்டுத் திட்டத்துக்கும் உகந்ததாக இருக்கிறதா எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

❓ ஆகஸ்ட் முதல் நான் வேலைக்குப் போக ஆரம்பிப்பேன். சம்பளத்தின் ஒரு பகுதியை ஸ்டாக் மார்க்கெட்டில் முதலீடு செய் என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். எனக்குப் பங்குச் சந்தை பற்றி ஒன்றும் தெரியாது. எப்படி ஆரம்பிக்க வேண்டும்?

- சிவா, திருப்பூர்

உங்கள் நண்பர்கள் சொல்வது மிகச்சரியே. பணவீக்கத்தை வெல்ல நினைக்கும் ஒவ்வொரு மனிதனும் பங்குச் சந்தையில் கட்டாயமாக முதலீடு செய்ய வேண்டும். பங்குச்சந்தையில் முதலீடு செய்ய நீங்கள் முதலில் பங்குகளை வாங்கி வைத்துக்கொள்ள பங்கு வைப்புச் கணக்கு (டெப்பாசிட்டரி அக்கவுண்ட்) ஒன்றை ஒரு டெப்பாசிட்டரி பார்ட்டிசிபண்ட்டிடம் துவங்க வேண்டும். நேஷனல் செக்யூரிட்டிஸ் டெப்பாசிட்டரி லிமிடெட்டில் ஏதாவது ஒரு டெப்பாசிட்டரி பார்ட்டிசிப்பண்ட் வழியாக ஒரு கணக்கை துவங்கிய பின்னர் ஒரு தேசிய பங்குச்சந்தையில் உறுப்பினராக உள்ள அங்கீகரிக்கப்பட்ட பங்குத்தரகரிடம் ஒரு வியாபாரக்கணக்கை



வங்க வேண்டும். இந்த ரண்டு கணக்குகளை துவங்குதற்கும் முதலில் உங்களுக்கு ருமான வரி பாஃன் கார்டு தவை. மற்றும் ரேஷன் கார்டு, ரைவிங் லைசென்ஸ், வங்கி சமிப்புக்கணக்கு மற்றும் செக் க் என தேவையான விஷங்கள் உள்ளன. அவற்றைம் தயார் செய்துகொண்ட பின்னரே ணக்கைத் துவங்க முடியும். கணக்கை துவங்க 'கேஒய்சி' என்ற ஒரு பாரத்தை பூர்த்தி செய்து தரவேண்டியிருக்கும். சில நிறுவனங்களில் வியாபாரக் கணக்கு துவங்க கட்டணமும் வசூலிக்கப்படுகின்றது. கணக்கை துவங்கிய பின்னர் எந்தவிதமான பங்கு முதலீடுகளைச் செய்யலாம் என்று ஊடகங்களில் வரும் செய்திகள் வாயிலாக தெரிந்துகொண்டு அவற்றை உங்கள் திறமையைக்கொண்டு எடை போட்டு பின்னர் வாங்கலாம். உங்களுடைய பங்குத்தரகரிடம் இருந்தும் கூட நீங்கள் பங்கு முதலீடுகள் குறித்த தகவல்களைப் பெற்று ஆராய்ந்து முடிவெடுக்கலாம்



திரு.டி.பாலசுந்தரம் - கோயம்புத்தூர் கேப்பிட்டல் லிமிட்டெட்டின் தலைவர். கோவை பங்குச்சந்தையின் நிறுவனத் தலைவர். தேசிய பங்குச்சந்தை, இண்டர் கனெக்டெட் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆஃப் இண்டியா, கோவை பங்குச்சந்தை ஆகியவற்றின் உறுப்பினர். கோவை கே.ஜி.குழும இயக்குநர்களில் ஒருவர். பணத்தைப் பாதுகாப்பாகவும், நம்பிக்கையுடனும் பெருக்க ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதில் நிபுணர்.

மூலதன மந்திரம்!

? தங்கத்தின் விலை குறையும் என்று சொல்கிறார்களே. ஆபரணமாக வாங்கி வைத்துக்கொள்வது சரியா? கோல்ட் ஈடிஎஃப் திட்டங்களில் முதலீடு செய்வது உகந்ததா?

- கணேஷ், நாகர்கோவில்

வருடங்கள் உருண்டோடும் போது மக்கள் ரசனைக்கேற்ப நகைகளின் டிசைன்கள் மாறி விடும். அப்போது பழைய நகையை அழித்து புதிய டிசைனில் செய்தால் செய்கூலி, சேதாரம், விற்பனை வரி என பல வழியில் உங்களுக்கு நஷ்டம் வரும் வாய்ப்புள்ளது. கோல்ட் ஈடிஃஎப்பில் செய்யப்படும் முதலீட்டைக் கொண்டு தங்கம் மொத்தமாக வாங்கி வைக்கப்படுகின்றது. எனவே அதில் முதலீடு செய்தால் தங்கத்தின் விலை ஏறினால் பண்டின் விலையும் (மதிப்பும்) சேர்ந்து ஏறும். நீங்கள் தங்கம் உபயோகத்திற்காக (கல்யாணம் காட்சி என்று) வாங்கும் காலத்தில் ஈடிஃஎப் யூனிட்டுகளை அன்றைய விலையில் (கிட்டத்தட்ட அன்றைய தங்க விலையில்) விற்று தேவையான தங்கத்தை/ஆபரணத்தை நகைக்கடையில் வாங்கிக்கொள்ளலாம். நெடுநாள் கழித்து இருக்கின்ற தங்கத்தின் தேவைக்கு கோல்ட் ஈடிஎஃப்பில் முதலீடு செய்து வருவது மட்டுமே நல்லது.

■ டி. பாலசுந்தரம்

பரிகாரம் ஸ்பெஷல்

சொந்த வீடு அமைய:

வைத்தீஸ்வரன் கோயிலுள்ள அங்காரனுக்கு 9 அகல் தீபம் ஏற்றி அர்ச்சனைச் செய்து செவ்வாய்காயத்ரியை மனதார ஜெபித்து விட்டு, அங்கிருந்து திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி வழியிலுள்ள ஸ்ரீபொங்கு சனீஸ்வரர் கோயிலுக்குச் சென்று சனிபகவானுக்கு அபிஷேகம் செய்யவும் அங்கிருந்து கொண்டு வரும் விபூதியை வீட்டில் வைத்து சனிகாயத்ரி மந்திரத்தை 8 முறை ஜெபித்து பின் விபூதியை நெற்றியில் இட்டு வர சொந்த வீடு சொப்பனம் நிஜமாய் ஈடேறும்.




வேலை, தொழில் அமைய:

மனத்துக்கு தொழில் உவப்பானதாக இல்லாமல் போனால், அல்லது நிரந்தரமாகத் தொழில் அமையாமல் தடங்கல்களாகவே இருந்தால்... 41 நாட்கள் விநாயகர் கோயிலுக்குச் சென்று அருகம்புல்லைச் சாற்றி ஸ்ரீகணபதி காயத்ரி மந்திரத்தை 11 முறை ஜெபித்து 7 முறை சன்னதியைச் சுற்றி வந்தால் வேலைக் கிடைத்து விடும். கிடைத்த வேலை திருப்தியாய் அமைய பிள்ளையார்ப்பட்டிக்குச் சென்று அபிஷேகம் செய்து அபிஷேக விபூதியைத் தொடர்ந்து இட்டு வந்தால் போதும் எல்லாம் ஜெயமே!



ஜெபித்தால் ஜெயிக்கலாம்!



புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology



- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேட்டர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

ஆடி சிறப்பு சலுகை 01.08.10 முதல் 30.08.10



1.50 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,08,000
சலுகை விலை
ரூ. 92,000



ஏழு கல்
வைரத்தோடு
ஜிமிக்கியுடன் சேர்த்து
1.00cts
தங்கத்தின் எடை 9 கிராம்
ரூ. 69,000
தள்ளுபடி விலை
ரூ. 58,000

- வைர நகைகளுக்கு Perct 4000 தள்ளுபடி
- 7 கல் வைரத்தோடு - 25000 முதல்
- வைர மூக்குத்தி 1700 முதல்
- பேன்சி வைரமோதிரம் 4500 முதல்
- பேன்சி வைரதோடு 4500 முதல்
- பேன்சி டாலர் கம்மலுடன் சேர்த்து 6500 முதல்
- அனைத்து வைரங்களும் V V S E F கலர்
- திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
- 500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ்
- 25000 மேல் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நகை பெட்டி வழங்கப்படும்.



*ஆடி சிறப்புச் சலுகை நீங்கள் வாங்கும் அனைத்து வைர நகைகளுக்கு 1% Discount Voucher வழங்கப்படும்

*conditions Apply

Sri Palsani Jewels

110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net

Sunday Holiday

Shivaa